சு… ன மன்ற வெளியீடு—4.

CONNEMARA PUBLIC LIBRARY
16 JUL 1956
MADRAS

…RUKKURAL: ITAIPPĀYIRAMUM NŪRPĀYIRAMUM
…vuvalluvar
…mm by
…RJUNANAR (VT)

# திருக்குறள்

# இடைப்பாயிரமும் நூற்பாயிரமும்

[ விளக்க உரை ]

எழுதியவர் :

**புலவர் : வே. த. அர்ச்சுனனார்.**

தலைமைத் தமிழாசிரியர், கலவல கண்ணன் செட்டியார்
உயர்நிலைப்பள்ளிப் பிரம்பை.

**'சுதரிசன மன்றம்'**

21, வேங்கடாத்திரி நாய்க்கன் வீதி,

…டை, 1952. சென்னை-12.

முதற் பதிப்பு—1952.

[உரிமை ஆசிரியர்க்கு]

விலை ரூ. 1-0-0.

CONNEMARA ... LIBRARY
16 JUL 1956
MADRAS

# நன்றி கூறல்

கடந்த 1951 விக்ருதி யாண்டு தைத்திங்கள் பொங்கற் புதுநாளன்று 'உழவு' என்னும் அதிகாரத்தைத் தெளிவான விளக்க வுரையுடன் பதிப்பித்து இலவசமாக வழங்கச் செய்தனம். அதைக் கண்ட தோழர்களும், திருக்குறளைப் பாடமாக வாரந்தோறும் குயப்பேட்டை, ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் மடத்தில் நடத்திவரும் **வள்ளுவர் பட்டி மன்றத்தாரும்** திருக்குறளுக்கு ஒரு சிறந்த விளக்கவுரை எழுதி வெளியிடும்படி ஊக்கிக்கொண்டே யிருந்தனர். ஊக்கிய அவர்கட்கும், இதைப் பதிப்பிக்க உதவிசெய்த '**சுதரிசன மன்ற**'த்தினர் அவர்கட்கும், மிகக் குறுகிய காலத்துச் சிறுமை பாராது பிழையின்றிச் சுத்தமாகப் பதிப்பித்துப் புத்தகமாகத் தந்துதவிய '**வித்தியா பிரஸ்**' உரிமையாளர் **திரு. பி. லோ. அருணாசல முதலியார்** அவர்கட்கும் எமது நன்றி யென்று முரியதாகுக.

**வணக்கம்.**

புலவர்: **வே. த. அ.**

16 JUL 1956

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | அணிந்துரை | 1 |
| 2 | வள்ளுவர் வாழ்க்கைச் சுருக்கம் | 4 |
| 3 | வள்ளுவரும் பொது மறையும் | 5 |
| 4 | இறை வணக்கம் | 11 |
| 5 | நூற் பயன் | 11 |
| 6 | இடைப்பாயிரம் செய்யுட்கள் | 12 |
| | (1) ஆதி பகவன் வாழ்த்து விளக்கம் | 15 |
| | (2) ஆதி பகவன் வாழ்த்து உரை | 18 |
| | (3) ஆதி பகவன் வாழ்த்துக் கட்டுரை | 40 |
| | (4) வான் வாழ்த்து விளக்கம் | 42 |
| | (5) வான் வாழ்த்து உரை | 43 |
| | (6) வான் வாழ்த்துக் கட்டுரை | 63 |
| | (7) நீத்தார் வாழ்த்து விளக்கம் | 65 |
| | (8) நீத்தார் வாழ்த்து உரை | 68 |
| | (9) நீத்தார் வாழ்த்துக் கட்டுரை | 90 |
| 7 | நூற்பாயிரம் | 93 |
| 8 | நூற்பாயிரம் செய்யுட்கள் | 94 |
| | (1) அறன் வலியுறுத்தல் விளக்கம் | 95 |
| | (2) அறன் வலியுறுத்தல் உரை | 98 |
| | (3) அறன் வலியுறுத்தல் கட்டுரை | 116 |
| 9 | செய்யுள் முதற் குறிப்பு அகராதி | 119 |
| 10 | பிழை திருத்தம் | 120 |

16 JUL 1956

# அணிந்துரை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" —(வள்ளுவர்.)

ஆத்ம ஞானியாம் சுவாமி விவேகாநந்தர் மேனுடு சென்று ஆங்கிலம் பேசி, இந்தியாவை விளக்கினர். தமிழகத்து ஞானியாம் வள்ளுவரோ தம்மகம் விட்டுச் செல்லாது, தாய் மொழியாலாக்கிய நூலால் தம்மை விளக்கித் தமிழகத்தையும் விளக்கினர். இதனாலன்றோ பாரதியார், "**வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**" என்று நாட்டைக் கூறுமுகத்தான் வள்ளுவனைப் புகழ்ந்தார்.

மேனுட்டறிஞர்களாலும் உள்நாட்டறிஞர்களாலும் அன்று மின்றும் புகழப்பட்டு வருகின்ற வள்ளுவர் தங் குறள் நூல் (உலகப்) பொதுமறையாகிப் பொங்கு மின்பமெங்குந் தந்து வருகின்றது. இதற்குப் பழமையாகப் பதின்மர் உரை யெழுதினரேனும் அவற்றுள் கிடைப்பன சில. அச் சிலவற்றுள்ளும் நடைக்கும் விளக்கத்துக்கும் உரை யெழுதிய **பரிமேலழகரே** பாராட்டப்படுகிறர். இவ் வுரைகட்குப் பின்வந்த வுரைகளோ அளவில. எனினும் அவ்வவ்வுரைகள் வள்ளுவர் கருத்தை யுள்ளபடி விளக்கிப் பொதுமறை யென்னும் பெயரை யுறுதிப்படுத்தின வென்று விளம்புதற்கில்லை. அவ் வுரைகளியாவும் ஆசிரியர் சொல்லின்மேல் உரை யெழுதினரது கொள்கையேயன்றிச் சீர்திருத்தவாதியாம் வள்ளுவர் தம் சிந்தனையை யின்னும் விளக்கவில்லை. அதனு லின்றும் பல வுரைகள் வந்துகொண்டிருக்கின்றன. யாமும் குறட் பாடத்தில் நீண்டகாலம் பழகிய அனுபவத்தால் வள்ளுவர்தந் திருவருட்டுணை கொண்டு அவரது கருத்துக்கிசைய இவ்வுரையை யெழுதுகின்றனம்.

எழுதுங்கால், யாம் தமிழ்ப் பயில ஆரம்பித்தநாள் முதற் கொண்டு இந்நாள்வரை ஓதிய பாடத்தாலும், கட்டுரைகளாலும்,

கண்ட அரங்கேசர், சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய நூற்களாலும், கேட்ட சொற்பொழிவுகளாலும் திருக்குறள் நூல் அதிகார அடைவிலும், சொற்களிலும் பொருளிலும் சிற்சில மாறுபாடுகளையுடையதெனக் கண்டனம். அம்மாறுதல்களைச் சிந்தித்து ஒப்பு நோக்குதலால் உண்டான எமது தெளிவு, எமக்கு முன் ஐயமுற்றுத் தெளிந்த கப்பலோட்டிய தமிழன் **வ. உ. சிதம்பரம்பிள்ளை** யவர்கள் வெளியிட்டுள்ள அறத்துப்பா லுரைநூலோ டேறக்குறைய ஒத்திருந்தமையின் அவர் கூறி யாங்கு ஆதிபகவன் வாழ்த்து முதல்தொடர்ந்த மூன்றதிகாரங்களை யும் இடைப் பிறவரலாகவே கொண்டு இடைப்பாயிரமென்றே பெயரிட் டழைத்துள்ளேம். எனினும் அம்மூன்று அதிகாரங் கட்குப் பொருள் கூறுங்கால் ஆசிரியர் (வள்ளுவர்) கூற்றாகவே பொருள் கூறியுள்ளனம். இல்லறந் துறவறங்கட்குப் பொது வான அறன்வலியுறுத்தலை ஆசிரியரே பாடி நூற்குத் தோற்று வாய் செய்துள்ளன ராதலின், அதனை நூற்பாயிரமென அமைத் துப் பொருள் கூறியுள்ளேம்.

இச்சுவடியின் மூன்றதிகாரப் பெயர்களும் பின்வரும் கார ணத்தால் வவக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பண்டைச் சங்க நூற்களுக்குப் பெருந்தேவனு ரென்பவர் கடவுள் வணக்கச் செய்யுளை யெழுதிச் சேர்த்தார் போன்று, வள்ளுவர்செய் யிச் சங்கநூற்கும் தொல்காப்பிய இலக்கண வரம்புக் குட்படுத்தி யாரோ முதன் மூன்றதிகாரங்களையும் இயற்றிச் சேர்த்துள் ளனர். தொல்காப்பியத்தில் பண்டைய மக்கள் **கந்தழி, கொடி நிலை, வள்ளி** யெனக்கூறும் மூன்றையும் முறையாக வணங்கி வந்துள்ளனர். அம்முறைப்படி கந்தழி யென்பது உருவமற்றது என்ற பொருளில் கடவுளையும், கொடிநிலை யென்பது வானவில் லென்ற பொருளில் மேகம் அல்லது வானத்தையும், வள்ளி யென்பது தன்னலப் பற்றற்று வழங்குபவரென்ற பொருளில் நீத்தாரையும்வாழ்த்தி வணங்கினரென்று கூறுதல் மிகையாகாது. இந்நூல் அதிகாரத் தலைப்பினது பெயரின் மாறுபாட்டின் காரணத்தையு மவ்வதிகார விளக்கத்திலேயே குறிப்பிட் டுள்ளனம். குறளில் காணும் பாடபேதத்தையும் அக்குறள்

விளக்கத்திலேயே காரணத்தோடு தெளிவுபடுத்தியிருப்பதையுங் காணலாம்.

இனி வள்ளுவரைப்பற்றி வழங்கும் வாழ்க்கை வரலாறுகள் (கபிலரகவல் உள்பட) யாவும் விசித்திரமானவையேயன்றி உண்மையானவையல்ல. அவர் தாழ்ந்தவரல்லர்; மிகக் கற்று வல்ல ஞானியார். காட்டுக்கோடும் ஆசையற்ற துறவியல்லர்; நாட்டிலிருந்து வீட்டில் வாழும் தன்னலப் பற்றற்ற இல் வாழ்க்கையினர் (ஜீவன் முத்தர்). அவர் தம்மில்லக் கிழத்திய ரான வாசுகியம்மையின் கற்பினைச் சோதித்து அவ்வம்மை யிறந்தபின் அவரை,

> "அடிசிற் கினியாளே, யன்புடை யாளே,
> படிசொற் றவராத பாவாய்,—அடிவருடிப்
> பின்தூங்கி முன்னெழும் பேதையே, போதியோ
> என்தூங்கு மென்கண் ணிரா."

என்று புலம்பிப் பாராட்டினர் என்றதும் பிறரது கற்பனையே. ஏனெனில் தூங்கு என்ற சொல்லுக்கு உறங்கு என்ற பொருள் அவர் காலத்திலில்லை. அதனால் இவரைப்பற்றிய விளக்கத்தைப் **பொதுமறையும் வள்ளுவரும்** என்ற தலைப்பிலமைந்த கட்டுரை யானும் மேற்காணும் இவரது வாழ்க்கைச் சுருக்கத்தானும் அறிந்துகோடி.

திருக்குறளைப் படிப்போர் நலனைக்கருதி யதன் இயல்களுக் கேற்பப் பல சுவடிகளாக வெளியிட இசைந்து, இன்று பொங்கல் திருநாள் விலைப்பரிசாக முதற்படியை '**இடைப்பாயிரமும் நூற் பாயிரமும்**' என்று வெளியிடுகின்றனம். மற்றவை ஒவ்வொன்ருக வெளியிடப்படும். அவற்றைக் கருத்துடை மக்கள் ஆதரித்துச் சுத்தசமரச சன்மார்க்க நெறியினின்று நலனெய்தி யுய்யுமாறு நனி வேண்டுகின்றனம். பிழை பொறுத்துக்கொள்க.

**"அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை"**

**"சுதரிசன மன்றம்"**
**1–1–1952**

நன்றி மறவாத,
**புலவர். வே. த. அர்ச்சுனனர்.**

16 JUL 1956
MADRAS

# வள்ளுவர் வாழ்க்கைச் சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| **நாடு :** | தொண்டை நாடு. | **ஊர் :** | சென்னை மயிலை. |
| **நெறி :** | சுத்த சமரசம். | **தொழில் :** | அரசியல் கருமத் தலைவர் (வள்ளுவத் தொழில்) |
| **வாழ்க்கை :** | இல்லற வாழ்க்கை. | **காலம் :** | கி. பி. மூன்றும் நூற்றாண்டு. |

**குறிப்பு :**—பாண்டிய நாட்டு உத்தர மதுரை அவரது இருப்பிடம் என்றும், கி. பி. முதல் நூற்றாண்டினர் என்றும் கூறுவாருமுளர். உண்மையில் வள்ளுவனார் 'தாங்கண்ட நன்மையை இவ் வையகங் காண்க' என்ற கருணையால் தம் மனுபவத்தைக் கூறுகிறாரே யன்றித் தம் பெருமை புலப்பட மேற்கோளாகவேனுந் தாங்கற்ற நூற்களையோ மாணவர்களையோ கூறினாரில்லை. இஃது பாராட்டற் பாலது.

16 JUL 195

# வள்ளுவரும் பொதுமறையும்

வள்ளுவர் என்னும் பெயர் தொழிலால் வந்த பெயரேயன்றி மற்றிக் காலத்தவர் கருதுவது போலக் குலம் அல்லது பிறப்பாற் போந்த பெயரன்று. ஏன்? வள்ளுவரது காலத்துக்கு முன்னே யித்தமிழகத்தில், **"ஒன்றே குலமும்—ஒருவனே தேவனும்"** எனக் கொண்டு வாழ்ந்திருந்தனர் மக்கள். அதனுலவர் ஆதி திராவிடருமல்லர்; அவர்களின் குருவு மல்லர். அவர் அரசியலதிகாரி. அரசர் கட்டளையை மக்கட்கு முரசத்தின் மூலமாய்த் தெரிவிக்குந் தொழிலாளி. அவர் அத்தொழிலை யாற்றினதாற்றுன் அரசியல் உட்பட நூலியற்ற முடிந்தது. அங்ஙனமின்றி யிழிகுலத்தவரெனின் அவரெங்ஙனங் கற்றிருத்தல் கூடும்? நூலியற்றல் கூடும்? அந்தோ! வள்ளுவர் இருந்த காலத்தில், **பல சாதிக்கொரு நீதியும், வேதமும், புராண இதிகாசங்களும்** வந்து மக்களைக் கொடுமைக்குள்ளாழ்த்திவிட்டன. அரசர்களும் ஆரியமாயைக் கடிமைகளாகிவிட்டனரெனவுந்தெரிகிறது. வடமொழி யாதிக்கமும் புகுந்திருந்தது. ஏனெனில் வடசொற்கள் திருக்குறளில் கலந்துள்ளன. ஆகவே, வள்ளுவப் பெருந்தகை **இழிகுலத்தவரன்று. உயர்ந்த அறிஞர்; நாவலர்; பாவலர்; பெரிய புரட்சிவீரர். அவருடைய நூலில் புரட்சிசெய்த சீர்திருத்தங்கள் விளங்குகின்றதைக் காணலாம். மிகவும் அனுபவமுடையவர். தமிழகத்துப் பழமை நூற்களைக் கற்றுச் சாதிமத பேதங்காணுத சுத்த வீரர். மனிதனுக வாழ்ந்தவர். ஆரிய மதத்தின் ஆர்பாட்டத்தைக் கண்டு இன்றைய சீர்திருத்த வாதிகள் நாட்டின் நிலைமையைச் செப்பனிட் டொழுங்கு படுத்துகிறதுபோல, அவர் ஒழுங்குபடுத்தியவர். தெய்வத்திலிருந்து சில்லரைச் சடங்கு வரையில் ஆரியமதம் செய்து வரும் சூழ்ச்சியைக் கண்டு சகிக்காதவர். அவர் பல நூற்களைப் படித்தவர்; ஆழப்படித்தவரென்ருல் சாலப் பொருத்தமாகும்.**

அவர் கேள்விஞான முடையவரென்பதற்கு நூலில் **'என்ப'** என்ற சொல்லை யுபயோகிக்கிறார். நூலறிவுடையவ ரென் பதற்கு, **"நவில்தோறும் நூல் நயம்போலும்"** என்றும் **"நூலாருள் நூல் வல்லனாகுதல்"** என்றுங் கூறுகிறார். மருத்துவ முணர்ந்தவர் என்பதை **'மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று'** என்றதால் அறியலாம். கடமை அல்லது நீதி—அறமுணர்ந்த அறிஞர் என்பதை, **"அற மெனப்பட்டதே இல்வாழ்க்கை"** யெனப் புலப்படுத்தினார். அரசியல்வாதி யென்பதை **"இறைமாட்சி"** நன்கு காட்டுகிறது. அவர் பொதுவுடைமைக்காரர் என்பதை, **"பிறப் பொக்கும்"** என்பதும், **"மேலிருந்து மேலல்லார், கீழிருந்தும் கீழல்லார்"** என்பதுங் காட்டுகின்றன. அவர் மிகவும் அனுபவமுடையவர் என்பதை, **"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகை யான்—வேறாகு மாந்தர் பலர்"** என்பதும்

> **"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
> **அதனை அவன்கண் விடல்"**

என்பதும் விளக்கும்.

இப்படிப் பலவகையிலும் வள்ளுவர் பண்புடைய **சீர்திருத்த வாதி—பகுத்தறிவாளர்** என்பதை மறந்துவிடலாகாது. இவ்வள வனுபவமுடைய இவரை யில்லை யென்று கூற முடியுமா? முடியாது; முடியாது; முடியாது. இவரது நூலே இவரது உண்மையை விளக்குகின்றது. இவரது காலம் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரையாகுமென்று **துடிசைக் கிழார். அ. சிதம்பரனார்** கருதுகிறார். **நாவலர் சோமசுந்தர பாரதியார்** 'திருக்குறள் தொல்காப்பியத்தை யடுத்ததாக இருத்தல் கூடும்' என்று எண்ணு கிறார். ஆராய்ச்சியாளர்களும் கிறிஸ்துப் பிறப்புக்கு முன்னாகவோ சற்றுப் பின்னாகவோ இருத்தல் வேண்டுமென்று கூறுகின்றனர். தொல்காப்பியத்துக் குரையெழுதிய **சேனாவரையர்**, சிறப்புப் பெயர், இயற் பெயர்கட்குதாரணங் காட்டும்போது, **'முனிவ னகத்தியன்', 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்'** எனக் காட்டி யுள்ளனர். ஆதலின் இவரது காலம் கி.பி. 3-ம் நூற்றாண்டுக்குப்

பிற்பட்டதாகும். அதனாலிவர் உலகஞ் சுற்றிப் பல பெரியோர் களைக் கண்ட பின்னர்தாம் நூலியற்றியுள்ளார். ஏனெனில், "உலகத்தோ டொட்ட ஒழுகல்" என்று உலகத்தைப் பலபடக் கூறியுள்ளார். இவர் தாம் படித்த நூற்பெயரொன்றையேனும் தம் நூலில் குறிப்பிடவில்லை. இஃது சாலப்போற்றுதற்குரிய தாகும். ஏனெனில் அவற்றால் மக்கள் மயக்கங்கொண்டு வருந்துவ ராதலின்.

உலகம் போற்றும் இவரது பெருமை கண்ட—திருக்குறள் தமிழுக்கு மங்காப் புகழைத் தந்ததைக்கண்ட சிலர் பொறாமை கொண்டு வள்ளுவர் "**போதாயணர் சூத்திரத்தை**" மொழி பெயர்த்தார். "**சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை**" மொழி பெயர்த்தார் எனக் கூறுகின்றனர். போதாயணர் காலமும் வள்ளுவரின் காலத்துக்கு வேறாயிருப்பதாலும் வள்ளுவர் வட மொழியறியார் ஆதலானும் அக்கூற்றைப் பொய்யென வொழிக்க. அன்றியும் அவர்களெழுதிய நூற்களைக் கண்டிக்கிற நூலிது என்பதையுமறிக.

திருவள்ளுவமாலை யென்று வள்ளுவரையும் குறளையும் சிறப்பிக்கும் பாடல்களிருக்கின்றன. அவைகளில் ஒருசில பாடல் கள் வள்ளுவரின் பெருமையை குறைப்பனவாகும். அவற்று ளிரண்டு பாடல்களைக் கூறுகிறேன்.

**"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்**
**ஓதத் தமிழால் உரைசெய்தார்—ஆதலால்**
**உள்ளுநர் உள்ளும் பொருளெல்லா முண்டெனப்**
**வள்ளுவர் வாய்மொழி மாட்டு."**

—செயலூர்-கொடுஞ்செங்கண்ணனார்

**" ஆரியமும் செந்தமிழு மாராய்ந் திதனினிது**
**சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்**
**வேதமுடைத்துத் தமிழ்த்திரு வள்ளுவனார்**
**ஓது குறட்பா உடைத்து."**

—வண்ணக்கஞ்சாத்தனார்

என்றிப்படி வேதந் தெரிந்தவராகப் போற்றியிருப்பது எவ்வாறு பொருந்தும்? ஆகவே, திருவள்ளுவ மாலையில் பெரும் பாலான பாடல்கள் பிற்காலத்தே சேர்க்கப்பட்டன வென்றுங் கூறலாம்.

மேலும் அப்பொருமைக்காரர்கள் வள்ளுவர்க்குத் தாய் தந்தையரைக் கற்பித்து **அனுலோம பிரதிலோம சாதி** ஆக்கி விட்டார்கள். பார்ப்பானுக்கும் புலைச்சிக்கும் பிறந்தவர் வள்ளுவ ரென்றுர்கள். அதோடு நில்லாமல் பெண்டாட்டியையுங் கற்பித் துப் பல சமய பேதங்களையு முண்டாக்கியுள்ளார்கள். இவை யாவும் உண்மையல்ல. வள்ளுவர் இருந்தா ரென்ப தொன்றைத் தவிர இவரைப் பற்றி வழங்குபவையாவும் வெறும் புராணக் காரரும் பொருமைக்காரரும் கட்டி வழங்கும் கற்பனைகளாகும். எனவே, வள்ளுவர் சாதி சமயபேதங்களற்ற பொது உடைமைக் காரர் என்று அறிக.

இவர் தமிழருக்குத்தந்த மறைதான் திருக்குறள். **திருக் குறள்** தமிழர்க்கு மாத்திரம் மறையல்ல. உலக முழுவதற்கும் மறையாக விளங்கியதால் **பொதுமறை** யென்பதாயிற்று. மறை யென்பது மக்கள் வாழ்க்கையைக்கூறும் கட்டளை நூல் ஆகும். இஃது தோன்றிய காலத்தில் தமிழ்மக்கள் இதனைப் பாராட்ட வில்லை. பாராட்டுகின்ற இக்காலத்திலும் இதன்படி நடக்க வில்லை யெனத் தெரிகிறது. பொருமைக்காரர்கள் சூழ்ச்சி செய்து அப்படியே **யி**தன் பெருமை தோன்ருதவாறு செய்து விட்டனர். சிறந்தவுரையெழுதிய **பரிமேலழகரும்** இந்து தருமத்துக் கேற்ருற் போல உரை யெழுதியுள்ளார். அதனுற்ருன் திருக்குறள் நூல் ஒருவாறு காக்கப்பட்டு முழுநூலாக நமக்குக் கிடைத்துள்ளது. அது காரணமாகப் பரிமேலழகரை நாம் பாராட்டவேண்டும். இதன் பெருமையை யுலகத்துக்கு விரித்தவர் **கிறித்துவ பாதிரி மார்கள்.** அவர்கள் தாம் தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்தவர்கள்; வான்புக ழளித்தவர்கள். அவர்க்கெமது நன்றி யுரித்தாகுக.

*1703*ல் **வீரமாமுனிவர்** என்னும் **ஜோஸப் பெஸ்கி** என்பவர் **லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம்** ஆகிய நான்கு மொழி

களிற் குறளை மொழி பெயர்த்தார். 1803ல் ஏ. எப். கான்மார் என்னும் **ஜெர்மானியர்** திருக்குறளைத் தமிழிலிருந்து ஜெர்மனியில் மொழி பெயர்த்தார். 1853ல் **கார்ல்கிரால்** என்பவர் மீண்டும் **ஜெர்மனியில்** எழுதினர். இது மற்றவர்களைவிடச் சிறந்ததாகும். 1847ல் **பிரடரிக் ரக்காட்** என்பவர் குறளை ஜெர்மனியில் கவிதை வடிவத்தில் ஆக்கினர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த முதலாசிரியர் **ஜி. யு. போப்** என்பவர். ஆங்கிலத்திலிப்போது பத்துக்கு மேற்பட்ட திருக்குறள் நூற்களிருக்கின்றன. **கிரேக்க மொழியிலும் ரஷ்ய மொழியிலும்** மொழி பெயர்த்த திருக்குறள் நூற்கள் இருக்கின்றன. நம் நாட்டில் **சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், வங்காள** முதலிய மொழிகளிலும் குறள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. எனினும் தமிழ் மக்கள் இப்போதுதான் அதன் பெருமையை யுணர்ந்து வருகின்றனர்.

திருக்குறள் மூன்று பெரும் பிரிவுகளையும் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் பொருட்பால் 70 அதிகாரங்களையும் இன்பட் பால் 25 அதிகாரங்களையு முடையதாய் 133 அதிகாரத்துக்கு 1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளது. திருக்குறளை யாய்ந்தரெவரண்டு **டாக்டர் ஜெ. லாசரஸ்** திருக்குறள் 12000 சொற்களைக் கொண்டது. அவற்றுள் 50 சொற்கள் வடமொழிகளென்கிறர். ஆனல் **கால்டுவெல்** என்னு மாசிரியர் வடமொழி கலப்பற்ற தனித் தமிழ் நூலென்கிறர். இவ்வாறு உலக நாட்டவர் பலராலும் பாராட்டப் படுவதற்கும் மொழிபெயர்த்துப் பின்சந்ததியார் கற்றுக்கொண்டு ஒழுகுவதற்கும் பாங்குடன் அமைந்திருந்ததால் திருக்குறள் உலகப் பொதுமறையாகி வான்புகழ் கொண்டது.

திருக்குறள் மக்களை மக்களாக வாழச்செய்யு மியற்கையோடொன்றிய அறங்களைக் கூறுகிறது. அவ்வறங்கள் இளமைப் பருவமுதல் சாக்காட்டுப் பருவம் வரையிலும் கடைப்பிடிக்கக் கூடிய அநுபவ சாத்தியமானவைகளாகவே யிருக்கின்றன. எல்லாரும் சமரசமாய்—ஒற்றுமை மனப்பான்மையாய் வாழ ஒரு

நெறியைக் கூறுகின்றது. தொழிலால் வேறுபட்ட மக்கள்—சீதோஷ்ண நிலைமை மாறுபட்ட நாடுகளில் உணவு, உடை, மொழிகளால் வேறுபட்ட மக்கள் ஒழுக்கத்தால் ஒற்றுமைப் பட்டு வாழ வழிகூறுகின்றது. அரசியல், பொருளாதாரம், நாகரிகம், வாழ்க்கை யாவையும் ஒழுங்கென்னும்—நடுவுநிலைமை யென்னும் கோட்டிலே யிழுக்கொரு சிறிதுமின்றி வைத்து மக்கட் கின்பத்தை யளிக்கின்றது. பொய் களைந்து இயற்கை யுண்மையை யுள்ளவாறெடுத்துக் கூறும் நூற்கள் தமிழ் மொழியில் பல உளவேனும் விரிவின்றிச் சுருங்கிய முறையில் எளிய நடையில், தெளிந்த கருத்தில் யாவர்க்கு மொப்பக் கூறுவதில் முன்னிற்பது திருக்குறளேயாம். அதுபொதுமறை யென்பதி லையமில்லை.

**“ கற்க குறளைக் கசடறக் கற்றபின்**
**நிற்க வதற்குத் தக.”**

CONNEMARA PUBLIC LIBRARY
16 JUL 1956
MADRAS

# இடைப்பாயிரம்

## இறை வணக்கம்

"சிற்சோதி யன்றியொன்றுஞ் சிந்தித்துங் காணேன்
சிற்சோதி தானே துணை."

## நூற் பயன்

வாழ்க்கைக் குறளை வகையுடன் கற்றுெழுகி
வாழ்வில்பே ரின்பமே காண்.

16 JUL 1956

# இடைப்பாயிரம்

அதிகாரம்: 1 ஆதி பகவன் வாழ்த்து.

1. அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே யுலகு.

2. கற்றதனுல் ஆய பயனென்கொல், வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின் ?

3. மலமிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்
தியாண்டும் இடும்பை இல. [தார்க்

5. இருள்சேர் இருவினேயும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு)
மனக்கவலே மாற்றல் அரிது. [அல்லால்

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்
பிறவாழி நீந்தல் அரிது. [லால்

9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தா
தாளே வணங்காத் தலே. [ன்

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

அதிகாரம் : 2 வான் வாழ்த்து.

1. வான்நின்(று) உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரல் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்(து)
உள்நின்(று) உடற்றும் பசி.

4. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்[கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்(பு) அரிது.

7. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9. தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

அதிகாரம் : 3 நீத்தார் வாழ்த்து.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிபு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

4. உரனென்னும் தோட்டியா னோரைந்துங் காப்பா
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

5. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

7. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

10. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

# இடைப்பாயிரம்

**அதிகாரம்: 1.** **ஆதி பகவன் வாழ்த்து.**

**பொருள்:** முதற் காரணமாகிய கடவுளை வணங்கும் வணக்கம் என்பதாகும்.

ஆதி = முதற்காரணம்; பகவன் = ஆறு குணங்களோடு கூடியவனான கடவுள்.

**இலக்கணம்:** ஆதி + பகவன் என்னுந் தொடர் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். பகவன் + வாழ்த்து இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்க தொகை.

எனவே, இஃது உண்மைக் கடவுள் வணக்கமாயிற்று.

**விளக்கம்:** *1.* உண்மைக் கடவுள் என்றது அறிவற்ற பொருள்களாய கல்லிலும் செம்பிலும் கடிதத்திலும் அல்லாமல் ஊறு, சுவை முதலியவற்றையுடைய உயிர்களிடத்து உள்ளுணர்வறிவாயுள்ளான் தன்னை.

2. கடத்தலென்னும் பொருளுடைய கடவுளென்னுஞ் சொல் (தொழிற் பெயர்) ஆகுபெயராய் மனம், வாக்குக் காயம் இம்மூன்றையும் கடந்த ஒரு பொருளை யுணர்த்துவதாகும். அதாவது மனமுதலிய மேற்கூறிய மூன்றாலும் அறியப்படாததாய் அம்மூன்றையும் நடத்துகின்ற எல்லாமாய் இல்லதுமாய் எவ்விடத்தும் வியாபித்துள்ள 'சித்' என்னும் செம்பொருளென்பது. அன்றியும் கடவுள் என்ற சொல்லைச் சொற்றொடராக்கிக் கடம் + உள் எனப் பிரித்து, **கடம் = உடல்; உள் = உள்ளே** எனப் பொருள்படுத்த ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுமுள்ள உடல்களில் இருப்பவர் என்று கூறி, அச் சித் (ஞானம்) தையே உணர்த்துவர் ஆன்றோர்.

எனவே ஈண்டுக் கடவுளென்றது பகவனை அதாவது ஆறு குணங்களோடு கூடிய அறிவை யென்றுணர்க. இவ்வறிவுதான் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசைகட்குக் காரணமாய் சூட்சுமம்

பெற்று ஸ்தூலங்கொண்டு மெய், வாய், கண், மூக்குச் செவிகளில் படிப்படியாய் நிறைந்து உலகத் தோற்றமாயிற்று. அவ் வகையில் புல், புழு முதலிய வடிவங்களைப் பெற்றிறந்து மாறிவந்து தன் கீழ்ப்பட்ட உலகப்பொருள்களை யடக்கி யாய்ந்து, பயன் கொளும் அல்லது கொள்ளத்தோன்றிய ஆதி மனிதனைத்தான் ஆதி பகவன், அறிவன், இறைவன், கடவுள் என்று கொண்டாராசிரியர்.

அவன் வழியிற் றோன்றித் தானாய் விளங்குதலின் அதாவது அறிவு மயமாய் விளங்குதலின் உலகம் வேறன்று; உலகமே அறிவு மயம். அவ்வறிவுக்கு அறிவைத் தந்து போற்றுவதின்றிக் கடவுள் என்ற பொருள் வேறாகச் செய்யப்பட்டு அது இடம், வாகனம், ஏவலாள், மனைவி, மக்களைப்பெற்று வாழ்கிறதென்பது ஆய் மதியற்றோர் கற்பித்த கற்பனையேயன்றி வேறல்ல. அதன் வழிப்பட்ட பக்தர்கள் மனச் சந்துஷ்டியை யடைந்தார்களேயன்றிப் பயன் கொண்டார்களென் றிதுநாள்வரையிற் கூற முடியாது. ஆய்ந்து கொள்க.

ஆசிரியர் வள்ளுவனார் இறை வாழ்த்துமுதல் மூன்று அதிகாரங்களைப் பாடினார் என்பதற்கில்லை. இதன் விளக்கத்தை முன்னுரையிற் கூறியுள்ளனம்; கண்டுகொள்க. அங்ஙனம் பாடியதாகக் கொள்ளினும் இவ்வதிகாரத்துப் பத்துக் குறட்பாவிலும் முறையாக, **ஆதி பகவன், வாலறிவன், மலமிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், உவமையில்லாதான்** முதலிய தொடர்களை யுபயோகித்திருப்பதால் அவைகள் முதலில் தோன்றியுலகத்தை விளக்கிய ஆதி மனிதனை அல்லது குருவை யுணர்த்துவன என்பது தேற்றமாகும். இதனை,

**"உருவா யருவா யுளதா யிலதாய்**
**மருவாய் மலராய் மணியா யொளியாய்க்**
**கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் வருவா யருள்வாய்! குகனே!"**

என்று கூறுங் கந்தரனுபூதிச் செய்யுளாலு முணர்க.

4. ஆத்திசூடி, கொன்றைவேய்ந்தன், வாக்குண்டா முதலிய நூல்களின் பெயர்கள் அந்தந்த நூற்களின் முதற் செய்யுளின் ஆரம்பச் சீரே வைக்கப்பட்டிருப்பதுபோல இப் பொதுமறை யாசிரியரும் இவ் வதிகாரத்துக்கு முதற் செய்யுளில் வந்துள்ள '**ஆதி பகவன்**' பெயரையே வைத்திருத்தல் வேண்டுமென்று கொள்க.

5. '**எழுத்தறிவித்தவ னிறைவனாகும்**' என்றதால் கடவுளென்ற சொல்லும் அறிவனென்ற பொருள்கொண்டு நிற்றலால் கடவுள், தெய்வம், ஈசன், ஆன்மா, அறிவு என்பன யாவும் ஒரு பொருட் பன்மொழிகள் ஆகும். எனவே, இவ்வதிகாரம் கடவுள் வணக்கம் எனினும் அறிவன்—ஆதி பகவன் வணக்கமெனினும் ஒன்றென்க.

**குறிப்பு**:—ஆசிரியர் வள்ளுவனார் தாமெழுதிய திருக்குறள் நூல் அதிகாரங்கட்குப் பெயர் தாமே வைத்தாரென்பதை யுறுதியிட்டுக் கூற முடியாது. அதை இதுவரையில் வெளிவந்துள்ள திருக்குறள் பதிப்புக்களில் பார்த்தால் அதிகாரங்களும் அவற்றின் பெயர்களுமே யன்றிக் குறட்பாக்களும் மாறியிருத்தலின்மூலம் நன்கறிந்து கொள்ளலாம்.

**அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே யுலகு.**

**பதவுரை:** எழுத்து எல்லாம்-(தமிழ் மொழியிலுள்ள) எழுத்துக்கள் யாவும், அகரம் முதல-'அ' என்கிற எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டுள்ளன, (அதுபோல) உலகு-இந்த உலகமானது, ஆதி பகவன்-முற்பட்ட அறிவனை (கடவுளை) முதற்று-தனக்கு முதற்காரணமாக வுடையது.

**பொழிப்புரை:** தமிழ்மொழியிலுள்ள எழுத்துக்கள் யாவும் 'அ' என்கிற எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டுள்ளன. அது போல உலகமானது முற்பட்ட அறிவனைத் தனக்கு முதன்மை யாக உடையது.

**கருத்துரை:** அறிவுடைப் பொருள்களையுடைய உலகத்தில் ஆறறிவுடையவரே கடவுளாவார்.

**விளக்கம்:** 1. இப் பொதுமறையை யாசிரியர் தந் தாய் மொழியி லெழுதுவதால் தமி ழெழுத்துக்களெல்லா மென்பார் '**எழுத்தெல்லாம்**' என்று கூறினர்.

எழுத்தென்பதற்கு மொழி யென்று ஆகுபெயராய் பொருள் கொண்டதை எல்லா மென்ற சொல்லொடு சேர்த்து மொழிகளுக் கெல்லா மென்று பொருள் கொண்டார் பரிமேலழகர். அஃது அவ்வளவு சிறப்புடையதல்ல, எல்லா மொழிகளையும் கற்றவ ரல்லர் ஆசிரியராதலின்.

2. வடமொழி உயிரெழுத்துக்களிலுள்ள **அ, இ, உ** என்ற இம் மூன்றும் நீட்டலோசை பெற்று நெடிலாவதோடு (தீர்க்க சந்தியாய்ப்)புணர்ச்சி வகையால் **அ+இ=ஐ**யும் **ஏ**யுமாகவும் (குணசந்தியாய் பெறும். **அ+உ=ஔ**வும் **ஓ**வுமாகவும் பெறும். எனவேஅகரம் இகர உகரங்களோ டிணங்கி உயிரெழுத்துக்கள் பிறக்கின்றன வென்றுங் காட்டுவர். இஃது ஒருவாறு கொள்ளக் கிடக்கினும் போலியலங்கார மென்று கொள்க. "**அ, ஆ அங்காப் புடைய**" என்ற முயற்சி சூத்திரத்தால் '**அ**' என்ற ஓரேழுத் தோசைதான் வாயைத் திறக்குந் தொழிலையாற்றிப் பிறஎழுத்துக்

களோடு சேர்ந்து ஒலிக்கப்படுகின்றது என்பது தோன்ற "அகர முதல" என்றார்.

3. 'முதல' என்றது காரண மூவகையில் முதற்காரண மாயிற்று. மற்ற துணைக்காரணமும் நிமித்தகாரணமும் காரியத் துக்குத் துணையாற்றி நீங்குவனவே யன்றிக் காரியத்துள் விரவி நிற்பன வல்ல. குடத்துள் மண்போலப் பொருந்தி நிற்பது அதாவது காரியப்படுங் காரணம் முதற்காரணமாகும். அகரம் மற்ற எழுத்துக்களோடு சேர்ந்து அவ்வெழுத்துக்களாய்ப் பரிண மித்து (க்காரியப்பட்டு)த் தன்னில் பிரியாது நிற்றலால் முதல என்ற சொல் கொடுத்து(க் கடவுளை)த் தெளிவுபட விளக்கினார்.

4. **பகம்** என்ற சொல்லிலிருந்து **பகவன்** என்ற சொல் வந்ததாதலின் அவ்வடமொழி பதத்திற்கு ஆறு குணங்களை யுடையவன் என்பது பொருளாகும். பகம்=ஆறு. **அறிவு, ஆற்றல், வல்லமை, ஐஸ்வரியம், வீரியம், தேஜஸ்** இவை ஆறு குணங்களாகும். எனவே ஐம் பொறிகளினுணர்வை முழுதும் பெற்றுப் பகுத்துணர்வு வரப் பெற்றோரும் தன்னல மற்று மேற் குறித்த அறு குணங்களையு மடைந்த பின்னரே பகவனுவார் என்ற அத்துவைத்த கொள்கை தோன்ற '**பகவான்**' என்று கூறினார்.

5. "**ஆதி**" என்றது உலகம் ஒரு பஞ்ச பூதக் கூட்டுப் பொருள். அதனாலேற்பட்ட உயிர்கள் அறிவின் திறத்தன. அறிவோ ரூபம், நிறம், கனம், அளவு முதலியவையில்லாதது. அந்த அறிவு எல்லாப் பொருளையும் அறிகின்றது. ஏன்? நாட்டி லுள்ள நானாவித தெய்வங்களையும் ஆராய்கின்றது. சுருங்கச் சொல்லின் அவ்வறிவுதான் தன்னையும் தன் அயலையும் அறியும் வன்மைப் பெற்றது. அப்படிப் பரந்து நிற்கும் அறிவின் நிலையை அனாதிநிலை யென்பர் ஆன்றோர். அனாதியான அறிவு உடல் தோறும் புகுந்து விளங்குந் தன்மையில் **உருவம், நிறம், கன** முதலியவற்றை யடைந்து அளவுடையதாய் ஆதியாகி முற்பட்ட தென்பார் அங்ஙனம் கூறினார். (அறிவின் அனாதிநிலை பரமாத்மா; அறிவின் ஆதிநிலை ஜீவாத்மா)

6. இச் செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி. உபமான வுபமேயங்களைப் பிரித்தறிய முடியாதபடி போல முதலிய உவம வுருபுகள் மறைந்து வருவது எடுத்துக்காட் டுவமையணியாம். இதை **பிம்பப் பிரதி பிம்பபாவனை யென்பர் வடநூலார்.**

7. **"அகர முதல எழுத்தெல்லாம்"** (உபமானம்) எடுத்துக்காட்டு.

**இலக்கணம் :** அகரம் – பெயர்ச்சொல் கரம் சாரியைப் பெற்றது; முதல-பலவின்பால் படர்க்கை வினைமுற்று; எழுத்து–எழுதப்படுதலினால் வந்த காரணப்பெயர்; எல்லாம்–மூவிடப் பொதுப்பெயர்; உலகு–இடவாகுபெயர்; முதற்று–குறிப்பு வினைமுற்று. ஏ–தேற்றப் பொருளில் வந்த இடைச் சொல் இதைப் பகவனோடு கூட்டுக. அல்லது அசையெனக் கொள்க.

**மேற்கோள் :**

உடம்பென் றுணர்வென் றுரைக்கு மிரண்டி
லுடம்பை முதலா வுரைக்கின்—உடம்பதுதான்
தன்னையறி யாது தனக்கயலும் தானறியாது
என்ன வகை யான்முதலாம் இங்கு.

பேரறிவு சிற்றறிவாப் பேசு மறிவிரண்டுள்
பேரறிவே பிரமமெனப் பேசுமறை—பேறறிவு
மூன்றவத்தை மூன்றுடல மூன்றுவினைக் கப்பாலாய்
சான்றாகு மென்றுந் தனித்து. (அறிவுநிலை விளக்கம்)

மெய்யுல கென்பர் விகாரப் பொருடனை மெய்யறியார்
மெய்யெனின் யாது மணுவணு வாயெங்கு மேவலெவன்
மெய்யென்பர் பொய்யை யிதுவென் றறியார் மிகப்படித்தும்
மெய்யெனன் ஞானமென் றேயுணர்ந் தோதிடும் வேதமதே.

அறிவே யுலகன் றெனிற்பர முந்தா னறிவுருவன்
அறிவன்றிக் காட்டி லுலகைப் பரமு மயலென்குதும்
அறிவன்றிக் காட்டப் படாதெனி லெல்லா மறிவுருவாம்
அறிவே பரமெனற் கையமென் னீதே யருந்தெய்வமே.

(பிரத்யட்சானுபூதி விளக்கம்)

## செய்யுள் : 2 கடவுள் வழிபாடு

**கற்றதனுல் ஆய பயனென்கொல், வாலறிவன்**
**நற்ருள் தொழாஅர் எனின் ?**

**ப—ரை :** வால் அறிவன்—உண்மை அறிவுடைய கடவுளினது, நல்தாள்—(நடந்து கொண்ட) நல்ல வழியை, தொழாஅர் எனின் – மேற்கொள்ளார் என்ருல், கற்றதனுல்—(மக்கட்குப் பல நூற்களையும்) படித்த படிப்பினுல், ஆய பயன்—உண்டான நன்மை, என்—யாது? (ஒன்றுமில்லை)

**பொ—ரை :** உண்மை யறிவையுடைய கடவுளினது, நடந்து கொண்ட நல்ல வழியை மேற்கொள்ளார் என்ருல் மக்கட்குப் பல நூற்களையும் படித்த படிப்பினுல் உண்டான நன்மை ஒன்றுமில்லை.

**க—ரை :** மக்கள் படித்த படிப்பினுல் ஏற்படும் நன்மை அக்கடவுள் வழியைக் கடைப்பிடிப்பது.

**விளக்கம் :** 1· **வால்** என்பதற்குத் தூய்மை என்பது பொருளாதலின் அறிவுக்குத் தூய்மையாவது அறியாமையில்லா திருத்தல். அதாவது பொய்யாகிய யான், எனது என்னும் குற்றம் கலவாதிருத்தல். ஆதலின் இதற்கு உண்மை என்று பொருள் கூறினும்.

2. ஈண்டு **அறிவன்** என்றது ஆதிபகவனுகிய கடவுளை.

3. **தாள்** என்றது ஆகுபெயராய் தாள் சென்ற **வழியை** (பாதையை). " **வழியே யேகுக வழியே மீளுக** " என்று கூறி யாங்கு அறிஞன் சென்ற வழியில் சென்ருல் அவ்வறிஞன் பயன் கொண்டு அவ்வறிஞுதல் திண்ணமாதலின் அவன் நடந்த பாதையைப் பாதம் அல்லது தாளென்ருர். அதற்கேற்ப நடத்தலைத் தொழுதலென்றும் உருவகித்தார். இங்ஙனம் பொருள் கொள்ளாது மக்களுள் (அறிவு அறியாமையையுடைய) ஒரு சாரார் தாள் என்றவுடன் அவர்களால் தனித்ததோரு பொருளாகக் கொள்ளப் பட்ட அக்கடவுளின் திருவடி எனப் பொருள் கொண்டு தம் பொருள் வளத்துக்கேற்றபடி தங்கத்தாலும், வெள்ளியாலும், செம்பு பித்தளைகளாலும் அடிகளைச் செய்து, நீரிட்டுப்

பாலிட்டுத் தேனிட்டுக்கழுவி, மலரிட்டுத் தூபதீப கர்ப்பூரமிட்டுக் கை கூப்பியும், விழுந்தும் வணங்கியும் வருகின்றனர். அந்தோ! அவர்கள் இயற்கையின் உண்மை யுணராது பொருளை வேறு படுத்திப் பொய்ப் பாதையிற் சென்றாராதலின் யாதொரு பயனை யும் காணாது வீணே மடிந்தொழிகின்றனர் என வறிக. கற்றார் வழிச் செல்கை மாந்தர் கடனென்பார் '**நற்றாள் தொழார் எனின்**' என எதிர்மறையால் கூறினார்.

4. **குற்றம் பார்க்கில் சுத்தமில்லை** என்னும் முதியோர் வாக்குக் கேற்ப உலகம் குற்றத் தோடு கூடியது. அதாவது செம்பிற் களிம்புபோல் அறியாமையோடு கூடியது. ஆதலின் அறிஞர் சென்ற வழியிலும் தீமை நீக்கிச் செல்லுதல் மாந்தர் கடனென்பார் '**நல்தாள்**' என அடை கொடுத்து விளக்கினார்.

5. நூற்கள் யாவும் சிறந்த அறிஞர்களது அனுபவத் தால் உண்டான உள்ளக் கொள்கைகளாதலின் அவைகள் அவ் வறிஞர் கொண்ட பயன்களை யுணர்த்துவன வாயின. எனவே நூற்கள் அறிஞர்களின் தாளும் பயனு மாயினவென்க. அவற் றின் வழியைக்கொள்ளாது கொன்னே படிப்பதனால் பயனில்லை யென்பார் '**கற்றதனால் பயனென்**' எனக் கூறினார். பயனாவது புகழ்: இதனைப் பிறப்பின் பயன் என்றும் வீடுபேறு என்றுங் கூறுவர் அறிஞர்.

6. கற்ற+அதனால் எனப்பிரித்து பொருள் கொண்டனம். கற்றதனால் என ஒரு சொல்லாகவும் பொருள் கூறலாம்.

**இலக்கணம்:** கற்ற அதனால் என்பதில் அகரம் தொகுத் தல் விகாரம்; என்னின் என்பதிலுள்ள னகரமெய்யும் தொகுத்தல் விகாரம்; கற்ற–பெயரெச்சம்; ஆய–பெயரெச்சம்; இல்லை– யென்னும் பொருளில் வந்த வினைக் குறிப்பு வினைமுற்று என் என வந்தது; வால்–உரிச்சொல்; நன்மை+தாள் = நற்றாள் பண்புத்தொகைநிலைத்தொடர்; அறிவன் – வினையாலணையும் பெயர்; தொழாஅர்–இசைநிறைக்க வந்த அளபெடை; என்னின் வினையெச்சம்.

" பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மண்."

**மேற்கோள் :**

பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்றேத்து வார்களுழக்கிய
பாததூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே.

(பெரியாழ்வார்)

## செய்யுள் : 3 கடவுள் வழிபாட்டின் பயன்

**மலமிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

**ப–ரை :** மலம் மிசை = மும்மலங்களாகிய உணர்வை, யேகினுன் = வென்ற கடவுளினது, மாண் அடி = சிறந்த பாத வழியை, சேர்ந்தார் = அடைந்தவர்கள், நிலம் மிசை = இந்த மண்ணுலகில், நீடு வாழ்வார் = நீண்டகாலம் (இன்புடன்) வாழ் வார்கள்.

**பொ–ரை :** மும்மலங்களாகிய உணர்வை வென்ற கடவு ளினது சிறந்த பாத வழியை அடைந்தவர்கள் இந்த மண்ணு லகில் நீண்டகாலம் இன்புடன் வாழ்வார்கள்.

**க-ரை :** முக்குற்ற மகற்றிய கடவுள் வழி நின்ருேர் இவ் வுலகத்தில் நீண்டகாலம் இன்புடன் வாழ்வார்கள்.

**விளக்கம் :** 1. மலம் = குற்றம். அக்குற்றம் மனம், வாக் குக்காயம் இம் மூன்ருல் நிகழ்தலின் மூன்றுவகையாயிற்று. அவையன்றி ஆணவம், கன்மம், மாயையெனவும் கூறுவர். இவையும் அறிவினிடம் தோன்றி அறிவை மயக்குதலின் உணர் வாயின அதனுல் **மலமிசை** என்ருர். மிசை என்பதற்கு உணர் வென்பதும் பொருள். மலவுணர்வெனினும் **அறியாமை** யெனி னும் ஒக்கும். அம்மலங்களை வென்றவன்தான் கடவுளென்பார் **'ஏகினுன்'** என்று கூறினுர். இன்னணம் பொதுமை யமைந்த குறளை மாற்றி **"மலர்மிசை** ஏகினுன்" என்றுகொண்டு பல பெரியார்கள் தத்தம் மதச் சார்பான பொருளைக்கூறி இடருற்றன ரன்றி வள்ளுவருக்கு இழுக்கையும் தந்தனர். மலர்மிசை யென்பதற்கு ஒருசாரார் தாமரையிலிருப்பவன் என்று கொண்டு படைக்கும் **பிரமன்** என்றனர். பூமேல் நடந்தோன் என்று **அருகனுக்கும் புத்தனுக்கும்** பெயராதலின் அவ்விரு கடவுள ரையும் உணர்த்தினர். மலரை உவமையாகு பெயராக்கி **அன்பாது உள்ளத்தைக்** குறித்தனர் பரிமேலழகர் போன்ற அறிஞர்கள்.

இரண்டாவதடி **நிலமிசை** யென்றிருத்தலால் முதலடி எதுகை நோக்கி மலமிசை யென்றிருத்தல் வேண்டும்; அதனால் செய்யுள் சீர்கெடாது பொருளும் சிறந்து நிற்றலால் '**மலமிசை யேகினன்**' எனவே கொண்டனம்.

2. மாணடி என்பதற்கு விளக்கம் மேலிரண்டாங் குறளில் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

3. **சேர்ந்தா**ரெனக் கூறியது மனத்தால் எண்ணுதலையும் உடன்கூட்டி யென்க. (சேர்ந்தார்=அடைந்தவர்கள்.)

4. நிலமிசை யென்னும் தொடரிலுள்ள சொற்களை முன் பின்னுக மாற்றி மிசை நிலமென்று கொண்டு மேலான நிலம் அதாவது **சுவர்க்கம்** எனப் பொருள் கூறுவர். இஃது பொருந் தாக் கூற்றாகும். இவ்வுலகின் கண்ணே **இம்மை, மறுமை, பேரின் பம்** மூன்று முண்டாக மக்கள் பெருமையடைகின்றனர் என்பர் **இராமலிங்கர்** (ஆருந் திருமுறை). பண்டைத் தமிழ் மக்களின் கூற்றும் இஃதேயாம். எனவே, இயற்கையோ டொன்றிய வாழ்வில் இவ்வுலகமும் சந்திர சூரிய நட்சத்திர மண்டலங்களுந் தவிரக் கூறப்படும் மற்ற மேலுலகங்களும் கீழுலகங்களும் வெறுங் கற்பனைகளேயன்றி வேறல்ல. ஈண்டு **மிசை** யென்பது வேற்றுமையாய் நிலத்தோடணைந்து நிலத்தில் எனப் பொருள் கொள்ளப்பட்டது.

5. பசி, பிணி, கவலை இவையற்ற இன்ப வாழ்க்கையைக் கூறுவார் '**நீடு வாழ்வார்**' என்றார்.

**இலக்கணம்:** மிசை—முதனிலைத் தொழிற் பெயர்; மலம்—பால்பகா அஃறிணைப் பெயர்; ஏகினன்—வினையாலணையும் பெயர்; மாண்—உரிச்சொல்; அடி—தானப் பெயர் அஃது ஆகுபெயராய் மார்க்கத்தை—வழியை உணர்த்தியது; நிலமிசையில் வந்துள்ள மிசை—ஏழாம் வேற்றுமை யுருபு; நீடு—வினையெச்சம்; வாழ்வார்—பலர் பால் படர்க்கை எதிர்கால வினைமுற்று; சேர்ந்தார்—வினை யாலணையும் பெயர்.

## செய்யுள் : 4 இதுவுமது

**வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்**
**கியாண்டும் இடும்பை இல.**

**ப-ரை :** வேண்டுதல்-(பொருள்களிடத்து) விருப்பமும் வேண்டாமை-வெறுப்பும், இல்லான்-இல்லாதவனாகிய கடவுளினது, அடி-நடந்த வழியை, சேர்ந்தார்க்கு-கடைப்பிடித்தவர்க்கு, யாண்டும்-எவ்விடத்தும், இடும்பை இல-துன்பங்கள் இல்லாதனவாகும்.

**பொ-ரை.** பொருள்களிடத்து விருப்பமும் வெறுப்பும் இல்லாதவனாகிய கடவுளினது நடந்த வழியைக் கடைப்பிடித்தவர்க்கு எவ்விடத்திலும் துன்பங்கள் இல்லாதனவாகும்.

**க-ரை.** கடவுள் சென்றவழியைக் கடைப்பிடித்து நடப்பவர்க்கு எவ்விடத்தும் துன்பங்கள் இல்லை.

**விளக்கம் :** 1. விருப்பம் என்பது பொருள்களிடத்துச் செல்லும் உள்ள நிகழ்ச்சி. பொருள் என்பது பெரும்பாலும் அயலை உணர்த்தி நிற்குமேனும் தானும் பொருளாதலின் தன்னையும் சுட்டப் பொதுவாகவே **வேண்டுதல்** என்றும் அதன் எதிர்மறையை **வேண்டாமை** யென்றும் ஆசிரியர் கூறினார். ஆண்டவன், தான்வேறு பொருள் வேறன்றித் தானும் பொருளுமாய்க் கலந்து நிற்றலின் அறியாமையா லேற்படும் விருப்பும் வெறுப்புமியல்பாகவே நீங்கப் பெற்றவனென்பார் "**இலான்**" என்றுங் கூறினார்.

2. **யாண்டு** என்னும் சொல் காலத்தையும் உணர்த்துவதால் எக்காலத்தும் என்று பொருள் கூறினும் அமையும்.

3. பசி, பிணி, முதலியவற்றா லுண்டாகும் துன்பங்களைப் பொதுவாக '**இடும்பை**' எனக்கூறினார்.

**இலக்கணம் :** வேண்டுதல்-தொழிற்பெயர்; வேண்டாமை எதிர்மறைத் தொழிற்பெயர் (வேண்டுதல் × வேண்டாமை) ; இல்லான்-லகர மெய் தொகுத்தல் விகாரம், எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்; அடி சேர்ந்தார்-இரண்டன்றொகை; சேர்ந்தார்க்கு-தெரிநிலை வினையாலணையும் பெயர்; சேர்ந்தார்க்கி

யாண்டும்–இகரம் முற்றியலிகரம்; இல்ல என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றிலுள்ள லகரமெய் தொகுத்தல் விகாரம். இடும்பை-பால் பகா அஃறிணைப் பெயர்.

**மேற்கோள் :**

'வேண்டாம் விருப்பும் வெறுப்பும்—அந்த
வில்லங்கத் தாலே விளையுஞ் ஜனனம்.'

'அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.'

## செய்யுள் : 5 இதுவுமது

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**ப–ரை :** இறைவன் = கடவுளினது, பொருள் சேர் = (உண்மைப்) பொருள் அமைந்த, புகழ் = புகழான செயல்களை, புரிந்தார் மாட்டு = செய்தவர்களிடத்து, இருள் சேர் = அறியாமை பொருந்திய, இரு வினையும் = நல்வினை தீவினைகளாகிய இரண்டு வினைகளும், சேரா = அடையமாட்டா.

**பொ–ரை :** கடவுளினது உண்மைப் பொருள் அமைந்த புகழான செயல்களைச் செய்தவர்களிடத்து அறியாமை பொருந்திய நல்வினை தீவினைகளாகிய இரண்டு செயல்களும் அடையமாட்டா.

**க–ரை :** இறைவனது உண்மைக் கருத்தமைந்த புகழைச் செய்தவர்கள் அறியாமையான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

**விளக்கம் :** 1. '**பொருள்**' என்றது உண்மைப் பொருளை; பொருளுக்கு உண்மையாவது எக்காலத்தும் எவ்விடத்தும் யாவருக்கும் ஒப்ப இருக்கும் தன்மை. எனவே உண்மைப் பொருளென்றது **அருளை**.

2. அருளால் செய்யப்படும் செயல்களியாவும் புகழுக் குரியன வாதலின் ஈண்டுப் '**புகழ்**' என்றது புகழமைந்த செயல்க ளென்றறிக.

3. புரிதல் என்பதற்கு விரும்புதல் எனவும் பொருள் கூறலாம்; ஆனல் அது செயலின் முன்னிகழ்ச்சி; அது செயலுருப் பட்டாலன்றிப் பயன் கோடல் இன்று. ஆகவே, புரிந்தார் என்பது செய்தார் என்னும் பொருளதாயிற்று.

4. **இருள்** என்றது அறியாமையை. அறியாமை அறிவி னின்றுண்டாவது; அறிவோடிருப்பது.

5. அறிவா லியற்றப்படும் செயல்கள் இருவகைப்படும் என்பார், '**நல்வினை தீவினை**' என்ருர். அவ்விருவினைகளுள் தீவினை அறியாமையால் செய்யப்படுவது. அறியாமையால் செய் யப்படும் நல்வினைகளும் உண்டு. அவை ஐந்திடத்தில் பொய் சொல்லுதலும், வட்டிவிடுதலும் சுருங்கக் கூறின் தன்னிச்சை யின் பொருட்டுச் செய்யப்படும் செயல்களும் ஆம். இவை பார்வைக்கு நல்லனபோல் காணப்படினும் குற்றமுடையனவே என்பார், '**இருள்சேர் நல்வினை**' யென்ருர். இருள்சேர் இருவினை என்றதனல் அறிவு அறியாமையையுடைய சிலர் திருமங்கை மன்னன் வழிபறித்துச் செய்த அடியார் பூசையையும், கண்ணப் பன் கொலை செய்து வழிபட்ட சிவ பூசையையும், காரைக்காலம் மையார் தமக்குரிமையிருந்தும் மாங்கனியைப்பற்றிக் கடைசி வரையில் கூருது சிவனுக்குச் சோறிட்டதையும் இன்னும் இவை போன்றவற்றையும் இருள்சேரா வினைகளெனக் கூறுவர். அவையும் பகுத்தறிவுக்குடன்பாடன்று எனக் கொள்க. இதனை,

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைப்படே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி."

இச் செய்யுளின் கருத்தோடு ஒப்பு நோக்குக.

**இலக்கணம் :** இருள்-உவமையாகுபெயர்; சேர்வினை—சேர் புகழ்-வினைத்தொகைகள் ; இரண்டு + வினை = இருவினை—பண்புத் தொகை; சேரா—எதிர்மறை பலவின்பால் படர்க்கை வினைமுற்று; புரிந்தார்—வினையாலணையும் பெயர் ; மாட்டு—ஏழாம் வேற்றுமை யுருபு—இடைச்சொல்; புகழ்—முதனிலைத் தொழிற் பெயர், ஆகு பெயராய் செயலை உணர்த்தியது.

## செய்யுள் : 6 இதுவுமது

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்ருர் நீடுவாழ் வார்.**

**ப—ரை :** பொறி வாயில்–(மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும்) ஐந்து உறுப்புக்களின் வழியாகக் கொள்ளும், ஐந்து–(ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை யென்னும்) ஐந்து ஆசைகளை யும், அவித்தான்–ஒழித்தவனை இறைவனது, பொய் தீர்–பொய்யில்லாத, ஒழுக்கநெறி நின்ருர்–ஒழுக்கமான வழியில் நடந்தவர்கள், நீடுவாழ்வார்–இந்த (மண்ணுலகில்) நீண்டகாலம் நலமுடன் வாழ்வார்கள்.

**பொ—ரை.:** மெய், வாய் கண், மூக்குச் செவியென்னும் ஐந்து உறுப்புக்களின் வழியாகக் கொள்ளும் ஊறு, சுவை, ஒளி நாற்றம், ஓசை யென்னும் ஐந்து ஆசைகளையும் ஒழித்தவனை இறையவனது பொய்யில்லாத ஒழுக்க வழியில் நடந்தவர்கள் இந்த மண்ணுலகில் நீண்டகாலம் (நலமுடன்) வாழ்வார்கள்.

**க—ரை :** கடவுள் நடந்த உண்மை ஒழுக்கத்தில் நடந்த வர்கள் எக்காலத்திலும் நலமுடன் வாழ்வார்கள்.

**விளக்கம் :** 1. உடலோடு கூடியல்லது உயிர்க்குப் பார்த் தல், கேட்டல் முதலிய காரிய நிகழ்ச்சிகளில்லை. அக்காரிய நிகழ்ச்சிகளும் மெய், வாய் கண் முதலிய பொறிகளின் வழியாய் நிகழ்கின்றன என்பார், "**பொறி வாயில்**" என்ருர்.

2. பொறிகளின் வழியாய் அனுபவிக்கப்படுவன புலன்கள். என்ப. அப்புலன்கள் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஒலி என்பன.

அவற்றை **ஐந்து** எனத் தொகையால் குறிப்பிட்டார். அதனுற் பொறிகளும் ஐந்தாயின.

3. ஒழுக்கம் நன்னடக்கையாகும். அதாவது நற்குணவழி ஒழுகுவதாகும். அவ்வொழுக்கம் **அக வொழுக்கம், புறவொழுக்கம்** என இருவகைப்படும். நற்குணங் கொளல் அகவொழுக்கமாம். நற்செய்கை கொளல் புறவொழுக்கமாம். இவற்றுள் அக வொழுக்கங் குன்றிப் புறவொழுக்கங்கோடலும் தீமை தருவன வன்றி வேறல்ல. விளங்கக் கூறின் தாடி வளர்த்துக் காவியுடுத்துச் சந்நியாசி யெனக்கூறி யாவரும் நம்பச்செய்து, உள்ளத்தில் வஞ்சகம் வைத்தலும், உடல் மாசு போக்கித் தூய்மை உடுத்தி நீறணிந்து திலகமிட்டுக் கோவில் வலம் வந்து கரவைக் கருத்திற் கோடலும், பள்ளி, கோயில் முதலியவை கட்டும் நல்லெண்ணம் உள்ளத்தில்வைத்துக் களவாடல், கொலை செய்தல் முதலிய தீச்செயல்களைச் செய்தலும், பொய் ஒழுக்கங்களே யாகும். "நீட்டலும் மழிப்பலும் வேண்டாவாம் உலகம் பழித்தது ஒழித்து விடின்" என்பதற் கேற்ப அகமும் புறமும் ஒத்த ஒழுக்கமென்பார் '**பொய்தீர் ஒழுக்கம்**' என்ருர்.

4. '**நெறி நிற்றல்**' என்றது உறுதி கொண்டு சில அல்லது பலநாள் நின்று கேடு வந்துழி கொள்கையிலும் செயலிலும் மாறுதல் கூடா தென்பதை விளக்க.

**இலக்கணம்:** ஐந்து–தொகைக் குறிப்பு; அவித்தான், நின்ருர்–வினையாலணையும் பெயர்கள்; நீடு–வினையெச்சம்; வாழ்வார்–பலர்பால் படர்க்கை எதிர்கால வினைமுற்று; தீர் ஒழுக்கம்–**வினைத்தொகை**; நெறி நின்ருர்–ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்; ஐந்து அவித்தான்–இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்.

**மேற்கோள் :**

அகத்தே கறுத்துப் புறத்தே
வெளுத்திருந்த உலகரனை வரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடவவரும்

இகத்தே பரத்தைப் பெற்று
மகிழ்ந்திருத்தற் கென்றே யெனையிச்
சகத்தே யிறைவன் வருவிக்க
வுற்றே னருளைப் பெற்றேனே.

(இராமலிங்கர்)

## செய்யுள் : 7 இதுவுமது

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

**ப-ரை.:** அறம் ஆழி–நன்மைக் கடலாகிய, அந்தணன்–கருணைக் கடவுளது, தாள்–(அடி) சென்றவழியை, சேர்ந்தார்க்கு–அடைந்தவர்களுக்கு, அல்லால்–அல்லாமல், (மற்றவர்க்குப்) பிற ஆழி–(அறத்துக்கு மாறான) மறக்கடலை, நீந்தல் அரிது–கடத்தல் முடியாது.

**பொ-ரை.:** நன்மைக் கடலாகிய கருணைக் கடவுளது அடி சென்ற வழியை அடைந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவர்க்கு அறத்துக்கு மாறான மறக்கடலைக் கடத்தல் முடியாது.

**க-ரை.:** கடவுள் சென்ற வழியில் சென்றோர் பாவஞ் செய்யமாட்டார்கள்.

**விளக்கம்:** 1. நன்மை வரையறையின்றிப் பலவாதலின் ஆழியெனப்பட்டது. இனி ஆழி யென்பதற்குச் சக்கரம் என்று பொருள் கொண்டு அறச்சக்கரத்தையுடைய எனப் பொருள் கூறுவாருமுளர். (சக்கரம்=கட்டளை)

2. அந்தணன் என்றது இயற்கை குணமாகிய அருளை யுடையவன் என்பதாகும். [அம்+தண்மை+அன். அம்=அழகு; தண்மை=குளிர்ச்சி: குளிர்ச்சி=ஈரம், ஈரமிலா நெஞ்சத்தார்=கருணையில்லாத மனமுடையவர்.] இங்ஙன மின்றி அந்தணர் என்னும் சொல் ஒரு இந்து பிறப்பாளனை உணர்த்துமென்பது

தவருன வழக்கென்றறிக. அன்றியும் துறவோரை யுணர்த்துமச் சொல்லென்பர் சிலர். அதுவும் ஒவ்வாக் கூற்று. அன்பும் அருளுந் தோன்றற்குக் கருணையே அடிப்படை. அன்புதான் ஜீவதயை யென்பதும் அருள்தான் ஆன்மநேயமாகிய கடவுள் தயையென் பதும் விளக்கப்பட்டிருப்பதை அருட்பா ஆருந்திருமுறையா லறிந்துணர்க. அருட்பெருஞ்சோதி - தனிப் பெருங் கருணை யென்பது மது. ஆதலால் அந்தணன் என்னும் பொதுச் சொல், இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் பொதுவாய்க் கருணை யுடை யாரையே உணர்த்தும்.

3. அறம் என்றது கடமையை அல்லது நன்மையை அதற் கெதிர்மறையைப் பிற என்ற சொல்லால் குறிப்பிட்டார். பிற- கடமையல்லாதன, தீமையானவை, பாவம், அதனுல் பிற என்பது மறமெனப் பட்டது.

இனி மக்கள் இம்மையில் அடையவேண்டிய அறம் பொரு ளின்பங்களில் அறம் கூறிவிடவே பிற என்றது கூருது விடப் பட்ட பொருளின்பங்களை யென்று கூறுவர் சிலர். அங்ஙன மாயின் பிற என்பதற்குப் பொருட்கடலையும் இன்பக்கடலையும் எனப் பொருள் கொள்க.

4. அருமை யென்னும் சொல் இன்மைப் பொருளது ஆதலின் அரிது என்பதற்கு முடியாது என்று பொருள் கூறினம்.

5. அல்லால் என்னும் எதிர்மறைச் சொல் தனக்கேற்ற மற்றையோர் என்ற பொருளைத் தந்தது.

**இலக்கணம் :** அறவாழி, பிறவாழி—பண்புத்தொகை நிலைத் தொடர்கள், அந்தணன்—காரணப்பெயர் (குறிப்பு வினையாலணை யும் பெயர்); சேர்ந்தார்க்கு—தெரிநிலை வினையாலணையும் பெயர், நான்காம் வேற்றுமை; அல்லால்—எதிர்மறைக் குறிப்பு வினை யெச்சம்; நீந்தல்—தொழிற் பெயர்; அரிது—எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

அற வாழி —
அந்தணன் தாள்—
—நீந்தலரிது } ஏகதேச உருவக அணி.

**மேற்கோள் :**

1. " புணர்ந்த பாவ மெலாம்பரி பூரண
முணர்ந்த ஞானி விழிபட வோடுமே "

2. " கணியாத பவக்கடு வானதிருக்
கண்வைத்தலும் விட்டன காதுகடும்
பிணியாவையும் நல்லபிதா விறைதாட்
பேணிப்பணி யென்று பெயர்த்தனனே."

(சசிவன்ன போதம்)

## செய்யுள் : 8 இதுவுமது

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

**ப–ரை :** தனக்கு உவமை–தனக்கு ஒப்பு, இல்லாதான்–இல்லாத கடவுளினது, தாள்–அடி சென்ற வழியை, சேர்ந்தார்க்கு–அடைந்தவர்க்கு, அல்லால்–அல்லாமல் (மற்றையோர்க்கு) மனக்கவலை–உள்ளத்தில் உண்டாகும் துன்பத்தை, மாற்றல் அரிது–போக்குதல் முடியாது.

**பொ–ரை :** தனக்கு ஒப்பில்லாத கடவுளினது அடி சென்ற வழியை அடைந்தவர்க்கு அல்லாமல் மற்றையோர்க்கு உள்ளத்தில் உண்டாகும் துன்பத்தைப் போக்குதல் முடியாது.

**க–ரை :** கடவுள் சென்ற வழியில் நடந்தவர்க்கு மனக்கவலை யில்லை.

**விளக்கம் :** 1. '**தனக்கு உவமை இல்லாதான்**' எனவே தனக்கு மிக்கதும் இல்லாதான் ஆயிற்று. அறிவாற்றல்களில் அனைத்துயிரினுஞ் சிறந்து விளங்கும் மக்களில் முதல்வனைத் தோன்றிய ஆதி பகவனையே ஈண்டு '**தனக்கு உவமை யில்லாதான்**' என்றாராயிற்று.

2. கவலைக்குக் காரணம் வேண்டுதல் வேண்டாமையாகும். இவ்விரண்டும் அற்றபோது கவலையுமற்றுவிடும். கவலையற்றதனு லன்றோ ஆதி பகவன் உவமை யில்லாதவனுனுன். அவன் சென்ற வழியைத்தான் '**தாள்**' என்று கூறினுர்.

3. அவன் வழிச் சென்றோர் அவனைப் போலக் கவலையற் றிருப்பர் என்பதை, '**அல்லால்**' என்ற சொல்லால் விளக்கினுர். செல்லாதவர்க்கு '**மாற்றல் அரிது**' என்றுங் கூறினுர்.

4. '**மாற்றல்**' என்பதற்குப் போக்குதல் எனப்பொருள் கூறினும் அமையும்.

5. '**அரிது**' என்னும் சொல் இன்மைப் பொருளில் வந்தது. இதன் விளக்கத்தை முன் குறளிற் கண்டு கொள்க.

**இலக்கணம் :** தனக்கு – படர்க்கைப் பொதுப் பெயர் நான்காம் வேற்றுமை; இல்லாதான்–எதிர்மறைக் குறிப்பு வினை யாலணையும் பெயர் ; தாள்–வழிக்கு ஆகுபெயர் ; சேர்ந்தார்–தெரி நிலை வினையாலணையும் பெயர்; மனக்கவலை–ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் ; மாற்றல்–தொழிற் பெயர் ; அரிது எதிர் மறைக் குறிப்பு வினைமுற்று.

**மேற்கோள் :**

" உவமிப்பின் ஞானிவிழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தி யுலகிற்
றவமற்ற வெய்ய வினையே புரிந்த
சசிவன்ன என்பது கதையே."

(சசிவன்ன போதம்)

**கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

**ப-ரை.** எண் குணத்தான்-(உயர்வாக) மதிக்குங் குணங்களையுடைய கடவுளினது, தாளை-(அடிசென்ற) வழியை, வணங்கா - போற்றாத, தலை - தலைகள், கோளில் - (பார்த்தல் முதலிய புலன்களைக்) கொள்ளுதல் இல்லாத, பொறியின்-பொறிகளைப் போல, குணம் இல-பலன் இல்லாதனவாம்.

**பொ-ரை:** உயர்வாக மதிக்குங் குணங்களையுடைய கடவுளினது அடி சென்ற வழியைப் போற்றாத தலைகள், பார்த்தல் முதலிய புலன்களைக் கொள்ளுதல் இல்லாத பொறிகளைப் போலப் பயன் இல்லாதனவாம்.

**க-ரை:** கடவுள் நடந்த வழியில் நடவாதவர்கள் பஞ்சேந்திரியங்களைப் பெற்றும் பயனற்றவர்களாவார்கள்.

**விளக்கம்: 1. எண் குணத்தான்** என்பதற்கு எண்ணுங் குணத்தானெனப் பொருள் கூறாது எட்டுக் குணங்களையுடையவன் எனப்பொருள் கொண்டனர்பலர். **சைவாகமப்படி** தன்வயத்தனுதல், இயற்கை யறிவினனுதல், முற்றுணர்வுடைமை, இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேராற்றலுடைமை, தூய உடம்பினனுதல், வரம்பிலின்ப முடைமை, பேரருளுடைமை என்பன எண் குணங்களாகும். **ஆருகத சமயப்படி** *கடையிலா அறிவு முதலியன எண் குணங்களாகும். இவையேயன்றி †அணிமா முதலிய **எட்டுச் சித்திகளும்** எண் குணங்களாகும். இவைகளுள்

---

| | |
|---|---|
| * கடையிலா வறிவு | † அணிமா |
| கடையிலாக் காட்சி | மகிமா |
| கடையிலா வீரியம் | கரிமா |
| கடையிலா வின்பம் | லகிமா |
| நாம மின்மை | பிராத்தி |
| கோத்திர மின்மை | பிரகாமியம் |
| ஆயு வின்மை | ஈசத்துவம் |
| அழியா வியல்பு | வசித்துவம் |

தத்தமக்குத் தோன்றிய ஒன்றைப் பொருளாக வெழுதினர் பல வுரையாசிரியர்கள். இவை யாவையும் எதேச்சையாக விளங்கும் மதங்களைச் சார்ந்தனவே யன்றி வள்ளுவரின் கருத்தன்று என்று மறுக்க.

**எண்குண** மென்பதற்கு எட்டுக் குணங்களென்றே பொருள் கொண்டு, அக்குணங்களை வள்ளுவர் முதற் குறளிலிருந்து எட்டுக் குறள் வரையிலுமுள்ள (1) **ஆதிபகவன்** (2) **வாலறிவன்** (3) **மலமிசை யேகினான்** (4) **வேண்டுதல் வேண்டாமை யிலான்** (5) **இறைவன்** (6) **பொறிவாயி லைந்தவித்தான்** (7) **தனக்குவமை யில்லாதான்** (8) **அறவாழி அந்தணன்** இவை எட்டையுங் கூறுவர் ஆன்றோர். இக்கூற்று மிகவும் உடன்பாட்டுக் குரியதே யாயினும் எண்குணத்தான் என்பதற்கு மதிக்கும் குண மெனப் பொருள் கூறுதலே சாலச் சிறப்புடையதாகும்.

2. **வணங்குதல்** என்பதற்குப் பொருள் அவன் வழிச் செல்கை யென்பதே.

3. மக்களை மக்களாக்கவும் மாக்களாகவும் பிற ஆக்கவும் அவர்களுடன் பிறந்த ஐம்பொறிகளே காரணம் என்பார் **தலை** யென்று கூறினர். மேலும் ஐந்து பொறிகளுள் கண், காது, மூக்கு, வாய் என்னும் நான்கும் தலையிலுள்ளன. '**எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானம்**' என்னும் பழமொழியும் இதனை விளக்கும்.

4. பொறிகள் இருந்தும் அவைகளை நற்புலன்கள் வழிச் செலுத்தாவிடில் நன்மையில்லை யென்பார், '**பயனில**' என்று கூறினர்.

5. **கோளில் பொறியின்** என்பது உபமானம். இத் தொடர்க்கு மண்ணாலும் மரத்தாலும் மற்ற உலோகங்களாலும் செய்யப்படும் பதுமைகட்கும் பொறிகள் உளவேனும் அவைகளால் அவைகட்குப் பயனில்லாமைபோல என்று பொருள் கூறுவர் சிலர். இங்ஙனம் கூறினும் அமையும். அப்போது கோளில் என்னும் சொல்லுக்குமுன் "**பதுமையின் தலையில் உள்ள**" என்ற தொடரை வருவித்துக்கொள்க.

6. யோகிகள் பொறிகளைப் புலன்கள் மாட்டுச் செல்ல விடாது அடக்குவதால் திமையில்லை யெனினும் புகழ் கொள்ளு தற்குரிய பயனில்லை யென்பார், 'குணமில' என்று கூறினர்.

**இலக்கணம்:** கோள்–முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்; பொறி–சினைப்பெயர்; இன்–உருபு உவமைப் பொருளில் வந்தது. இல–எதிர்மறை பலவின்பால் குறிப்பு வினைமுற்று. தாள், தலை–ஜாதி ஒருமைப் பெயர்கள்; வணங்கா–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எண் குணத்தான்–வினைத் தொகை நிலைத்தொடர்; குணத்தான்–குறிப்பு வினையாலணையும் பெயர்; இலவே என்பதி லுள்ள ஏகாரம்–அசை.

**மேற்கோள்:**

"ஐயறி வறிந்தவை யடங்கினவரேனு
மெய்யறிவி லாதவர்கள் வீடதுபே றுரே."

**செய்யுள்: 10** **இதுவுமது**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்.**

**ப–ரை:** (கடவுளினது தாளாகிய புணையைச் சேர்ந்தவர் கள்) பிறவி பெரு கடல்–பிறப்பாகிய பெரிய சமுத்திரத்தை, நீந்துவர்–கடப்பார்கள், இறைவன்–கடவுளினது, அடி–தாளாகிய புணையை, சேராதார்–அடையாதவர்கள், பிறவி பெரு கடல்–பிறப்பாகிய பெரிய சமுத்திரத்தை, நீந்தார்–கடக்கமாட்டார்கள்.

**பொ–ரை:** கடவுளினது தாளாகிய புணையைச் சேர்ந்த வர்கள் பிறப்பாகிய பெரிய சமுத்திரத்தைக் கடப்பார்கள். கடவுளினது தாளாகிய புணையை யடையாதவர்கள் பிறப்பாகிய பெரிய சமுத்திரத்தைக் கடக்கமாட்டார்கள்.

**க–ரை:** இறைவனது நடக்கையை மேற்கொண்டவர்கள் பிறவிப் பயனை யடைவார்கள்.

**விளக்கம் :** 1. உலகில் மக்கள் உயிரே யளவில் கோடி யென்ருல் மற்ற உயிர்களின் பிறப்புக்களையும் உடன் சேர்க்கின் கூறமுடியாத தென்பதை யுணர்த்த, '**பிறவிக்கடல்**' என்றும், '**பிறவிப் பெருங்கடல்**' என்றுங் கூறினுர் ஆசிரியர்.

2. பிறப்பைக் கடல் என்றதற்கேற்ப '**நீந்துவர்**' என்றும் '**நீந்தார்**' என்றுங் கூறினுர்.

3. '**நீந்துதல்**' என்பது மக்களைப் பெற்றுச் செல்வத்தைப் பெருக்கிக் கவலையற்று அதாவது இன்பத்துடன் வாழ்தலாகும்.

புலபுலவென, கலகலவென மக்கள் பலரைப் பெற்றுச் செல் வங் குறையக் கவலையுற்று வாழ்தலையும், மக்களின்றிக் கவலை யுற்று வாழ்தலையும், செல்வமின்றிக் கவலையுற்று வாழ்தலையும் '**நீந்தார்**' என எதிர்மறையால் விளக்கினுர்.

4. இல்லறம் துறவறம் இவ்விரு அறங்களையும் ஆண்டு இன்பம் அனுபவித்தவனே தலைவன் ஆவான் என்பார் **இறைவன்** என்றும், அவன் கூறிய—நடந்த வழியே இன்ப வழி–புக முடைய வழி யென்றுங் கூற வந்தவர் '**அடி சேர்ந்தார்**' என்றும் அவ்வழிச் சேராதாரையும் பிறவழிச் சென்ருரையும், '**சேராதார்**' என்றும் கூறினுர்.

5. பிறவியைக் கடல் என்று கூறவே அடியைப் புணை யென்று கூறினேம். இச் செய்யுள் ஏகதேச உருவக அணி யாகும். இச் செய்யுளில் ஆசிரியர், உடன்பாடு எதிர்மறை யிரண் டுந் தோன்றக் கூறினுரென்க. '**இறைவனடி**' என்னுந் தொடர் சேர்ந்தார், சேராதார் இரண்டையும் உணர்த்தினமையின் **இடை நிலைத் தீவக வணியுமாகும்.**

6. இச் செய்யுளில் நீந்துவர் நீந்தார் என்னும் ஒன்றுக் கொன்று எதிர்மறையாகிய சொற்கள் ஒரடியில் கண்ணுற்று நின்றன வாதலின் சீர் முரண்தொடையாயிற்று.

**இலக்கணம் :** சேர்ந்தார்–சொல்லெச்சம்; பிறவி–தொழிற் பெயராய் அருபெயராயிற்று; சேராதார்–எதிர்மறை வினையா

லணையும் பெயர்; நீந்துவர்–உடன்பாட்டுத் தெரிநிலை வினை முற்று; நீந்துவர் × நீந்தார்; பெருங்கடல்–(பெருமை + கடல்) பண்புத் தொகைநிலைத்தொடர்; பிறவிக்கடல்–இரு பெய ரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர்; கடல் நீந்துவர் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; இறைவனடி–ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

**மேற்கோள் :**

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற்
பரப்பிர மத்திடை யதனிற்
கழிதரு மஞ்ஞா னத்திற் சிவ
னுதித்திடக் கண்டவ னொருவன்
பழுதையென் றதனுற் சர்ப்பமோ கமும்போய்ப்
பழுதையாய்க் கண்டது போல்
அழிவிறே சிகனுர் சிவனீ யன்றென்
றறைந்திட வாகினேன் சிவோகம்''

(விவேக சட்கம்)

நன்றுமுனிதாள் வழிபா டதனு
ஞனுவித மான பிறப்பினைவிட்
டொன்றுகிய வீடுண ருத்தமர்கட்
குளசாதன நாலு முதித்தனவே.

(சசிவன்ன போதம்)

கட்டுரை: 1.

## ஆதி பகவன் வாழ்த்து

(1) ஆதி பகவன்
(2) அவன் வழி பற்றல்
(3) பற்றலால் வரும் நன்மை
(4) பற்ருமையால் வரும் தீமை
(5) முடிபு.

உலகமென்பது மண், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐந்து பொருள்களாலாகிய ஒரு கூட்டுப்பொருள். அதிலடங்கிய பொருள்களும் உயிர்களும் அங்ஙனம் ஆயவைகளே. அவ் வைந்து பொருள்களும் நாற்றம், தண்மை, வெம்மை, ஊறு, ஓசை யென்னும் ஐந்து காரணங்களைப் பெற்றுச் சூட்சுமமாய்ப் பருப்பொருள்களாய்க் காட்சியளிக்கின்றன. இவற்றை ஆயும் வல்லுநர் அறிவொன்றே நின்று எல்லாமாய் விளங்குகின்றது என்று கூறுவர். அந்த அறிவைத்தான் உயிர், ஜீவன், ஆன்மா, கடவுள், ஈசன் என்று அறிஞர்கள் அழைத்து வருகின்றனர்.

இங்ஙனம் அனுதியான அறிவு உலகமாய்ப் பல்வகை யுடல் பெற்று விளங்குகையில் ஆதியாகின்றது. ஆதியாய் உடல்பெற்ற வுயிர்வர்க்கங்களு ளுயர்ந்த பகுத்தறிவோ டொன்றிய ஆறறிவை முழுதும் பெற்ற மக்களுயிரே சாலச் சிறந்ததாயிற்று. அங்ஙனந் தோன்றிய மக்களுள் முதன்முதல் உலகத்தைத் திருத்தித் தொழில்களைப் பெருக்கி வாழ்க்கையை வகுத்தவனும், மொழியை யுண்டாக்கி யெழுத்தைக் கண்டு வாழ்க்கையி லின்பத்தைப் பெருக்கினவனும் எந்த மனிதனே அவனே ஆதிதேவனும், இறையவனும் வாலறிவனுமாயினன். அவன் மும்மலமற்ற காரணத்தால் மலமிசை ஏகினவனுனன். தன்னலமற்றுப் பரநலச் செயல்களைப் புரிந்ததால் வேண்டுதல் வேண்டாமையிலான் ஆயினன். ஐம்புல நுகர்ச்சியில் நெறிகண்டு ஒழுகினன் ஆதலின் பொறிவாயி லைந்தவித்து அறவாழி அந்தண னுயினன். இங்ஙனம் எண்ணுங் குணங்களாகிய அறிவு, ஆற்றல், வல்லமை, ஐஸ்வரியம், வீரியம், தேஜஸ் இவை ஆறையும் பெற்று, அவன் ஆதிபகவனுயப் பின்வந்த மக்கள் போற்ற நின்றனன். அவனைக் கடவுளது அவதாரமென்றுங் கூறுவர்.

அவ் வாதிபகவனுகிய இறைவன் தந்தை தாயும், சார்கதியும், இன்பமும், உயிரும், குருவுமாகலின் அவனை வழிபடுதல் சாலச் சிறந்ததாகும். வழிபடுதல் என்பது உருவம் வைத்து மலரிட்டுக் கைகூப்பியபின் அதனேடு உறவற்றிருப்பதல்ல. அவன் கண்ட அறச்செயல்களைச் செய்து அறத்தா ருெழுகியின்பப்பயனைக் காணுதல்தான் வழிபாடாகும். இதனை **நற்றாள் தொழுதல், அடி சேர்தல்** என்னுந் தொடர்கள் நன்கு விளக்குகின்றன. எனவே, ஆதிபகவன் சென்ற வழியிற் செல்லுதல் வேண்டும்.

இங்ஙனம் தொழும் மக்கள் ஆதிபகவன் கண்ட சத்தையும், சித்தையும், ஆநந்தத்தையும் அடைவர். கற்றதனுலாய பயனைப் பெறுவர். நீண்டநாள் துன்பமில்லாது வாழ்வர். அறியாமையை யென்றுமடையார். பொருளும் இன்பமும் பெற்றுப் புகழெனும் பிறவிப் பயனைக் கொள்வர்.

ஆதிபகவனைப் போற்றி, யவன்வழி பேணுதார் பொருளில் முட்டுப்பட்டு, இன்பத்தை யிழப்பர்; மாற்ற முடியாத மனக் கவலையைக் கொள்வர். அதனுல் தாம் பெற்ற பொறிகளின் வழியா யனுபவிக்க வேண்டிய நலனை யிழப்பர். பிறவிப் பயனும் புகழை யடையார்.

ஆகவே, இவ் வுலகத்தை வகுத்துத் திருத்தி யொழுகிப் பயன்கொண் டுந்து மகிழ்ந்த **ஆதிபகவனை** யென்றும் மறவாது போற்றி, அவன்வழி யொழுகிப் பயன் கொள்ளுதல் மக்களின் மாண்புறு கடமையாகும்.

---

**பொருள்:** மழையைப் பாரட்டும் வணக்கம் என்பது.

வான் = மழை; பாராட்டல் = சிறப்புக் கூறல்.

**இலக்கணம்:** வான் வாழ்த்து என்னுந் தொடர் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்க தொகைநிலைத் தொடராகும்.

**விளக்கம்:** 1. வாழ்த்துப் பல வகையில் ஈண்டுப் பொருளைப் புகழ்தலின் **பாரரட்டும் வணக்கம்** எனப் பொருள்கூறினும்.

2. முதற் பொருளாகிய அறிவற்குத் துணைப்பொருளாய் விளங்கும் பொருள்கள் **மண், நீர், தீ, காற்று, ஆகாயங்களாகும்.** அவற்றுள் நீர், மிகுதியும் பயன் படுவதால் நீரைப் பாராட்ட வந்த ஆசிரியர் நீர்க்குக்காரணமான **மழையை** (வானை)ப்பாராட்டுகிறூர்.

நீரின் மிகுதியை உலகவமைப்பில் வானில் மழையாகவும், மண்ணில் கேணியாகவும், மண்சூழ்ந்து கடலாகவும் காணலாம். ஆனுல் உலகமோ நீர் முக்கால் பாகமாகவும் நிலம் கால்பாகமாகவுங் கொண்டு விளங்குகின்றது.

அன்றியும் அநாதியான பொருள் அறிவற்கு ரூபமாய் நின்றுதவும் பொருள்களில் நீர்ப்பொருள் **ஆக்கல், அளித்தல், அழித்தல்**களில் ஆற்றல் மிக உடையதாகும். அதனுல் வானின் பெருமையைப் பாராட்டுகிறூர் என்று விளக்கங் கூறினும் அமையும். **வானம்** அல்லது **வான்** என்ற சொல்லே அதன் பெருமையை-உயர்வைக் காட்டுகின்றது.

3. தமிழ் மக்கள், தமக்குதவி செய்யும் பொருள்களைப் பாராட்டுதல் பண்டைக்கால மரபு என்பதை மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியத்தில் **கொடிநிலை** வாழ்த்து எனக் கூறியுள்ளதையுங் காண்க. கடைச் சங்ககாலத்தை யடுத்து வந்த நூற்களில் முந்தியதான சிலப்பதிகாரத்திலும் "**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**" என்று மங்கல வாழ்த்தில் வந்துள்ளதையும் நோக்குக. ஆண்டு தோறுங் கொண்டாடப்படும் தமிழ்த்திருநாளான **பொங்கல் விழாவும்** இப்பாராட்டை விளக்குவதேயாகும்.

செய்யுள் : 1 **மழையின் பயன்**

**வான்நின்(று) உலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரல் பாற்று.**

**ப-ரை :** வான்-மழை, நின்று-(பருவங்களில்) பெய்ய, உலகம்-(உலகத்திலுள்ள) உயிர்கள், வழங்கி வருதலால்-வாழ்ந்து வருவதால், தான்-அம்மழையானது, அமிழ்தம்-(அவ்வுயிர்களுக்கு) உணவு, என்று உணரல் பாற்று-என்று அறியும் தன்மையுடையது.

**பொ-ரை :** மழை பருவங்களில் பெய்ய உலகத்திலுள்ள உயிர்கள் வாழ்ந்து வருவதால், மழையானது அவ் வுயிர்கட்கு உணவென்று அறியுந் தன்மையுடையது.

**க-ரை :** உலகத்துயிர்களை வாழச் செய்வதால் மழையே உயிர்கட்கு உணவாகும்.

**விளக்கம் :** 1. ஈண்டு **உலகம்** என்றது எல்லா உயிர்களையுமாம். அவ்வவ்வுயிர்களுள் இறந்தனபோகமேன்மேலும்தோன்றி வருதலை '**வழங்கி**' என்றும், இன்றும் அதனைக் காணலாமென்பார் '**வருதலால்**' என்றுங் கூறினர். மேலும் நிலத்தையுழவும், விதையைப் பயிராக்கவும், பயிராக்கியதைச் சமைக்கவும், அதை உண்பவர் கை, கால்களைக் கழுவவும், உடல் குளிக்கவும், உணவை உண்ட பின்னும் குடிக்கவும் நீர் மிகுதியும் பயன்படுகிற தென்பதையு முணர்த்தக் கூறினரெனினும் அமையும்.

2. உயிர்கள் உயிர் வாழ்தலென்பது உடலோடு கூடியிருப்பதை. அங்ஙன மிருக்க ஆகாரம் இன்றியமையாததாகும். ஆகாரம் மழையின்றி உண்டாகா என்பார் '**வான்**' என்றும் அம்மழையும் காலந்தவறாமல் பெய்யவேண்டு மென்பார் '**நின்று**' என்றும் கூறினர். "**மழையின்றி மாநிலத்தார்க் கில்லை**" என்பதுமது.

3. **அமிழ்து** என்பது தமிழ்ச் சொல். அச்சொல்லிலுள்ள ழகரமே அதற்குத் தக்க சான்றாகும். அதற்கு உணவென்பது பொருள். நீரே உணவாதிப் பொருள்களாகப் பரிணமிக்கின்றன வென்பதை "**உப்புமயம் அப்புமயம் உலகம்**" என்னும் பழ

மொழியே நன்கு விளக்குகின்றது. தென்னையின் கீழ் வார்க்கப்பட்ட நீர் இளநீராகவும், மற்ற செடிகளின்–பயிர்களின் கீழ் வார்க்கப்பட்ட நீர் அவைகளின் மணிகளாகவும் விளங்குவதைக் காண்கிறோம். அன்றியும் முத்து முதலிய நவர்த்தினங்களும் தங்க முதலிய லோகங்களும் நீரால் அமைகின்றன. இவற்றை யெல்லாம் நன்கு குறிப்பிடவே '**தானமிழ்து**' என்றும் '**உணாற் பாற்று**' என்றும் விளக்கினர். இதற்குப் பொருள் இங்ஙனங் கூருது, வடமொழியான அமிர்தமெனக் கொண்டு '**சாவாமருந்து**' என்று பொருளுரைத்து அதற்குச் சான்ருகப் பழங்காலத்தில் திருமால் தேவர்களையும் அசுரர்களையும் துணைக்கொண்டு பாற் கடலைக் கடைந்தார். சாவா மருந்து தோன்றியது. அதனைத் தேவர்கள் மாத்திரம் உண்டு மரணத்தைத் தடுத்துக்கொண்டு அமரர்களாயினர். அதுதான் அமிர்தமென்று புராணக் கதையையுங் காட்டுவர். அஃது பொருந்தாது. எங்ஙனமெனின் தேவலோகமென்பதும் தேவர்களென்பதும் ஒரு கற்பனை. அவர்கள் மண்ணுலகத்துப் பாற்கடலைக் கடைந்ததென்பதும் கட்டுக்கதை. தேவர்கள் மாத்திரம் புசித்து மரணத்தை யொழித்தார்களென்ருல் வள்ளுவர் கூறும் மண்ணுலகத்துக்கு அதனுல் பயனில்லையாயிற்று. ஆனுல், தமிழிலுள்ள **ஞானவெட்டி** முதலிய மருத்துவ நூற்களில் மழைநீரோடு மண்ணின் சத்தான 'பூநீறு' என்னும் உப்பைக் கலந்து செய்யப்படும் **முப்புச் சுண்ணம்** பேசப்படுகிறது. இது தன்னையுட்கொண்டவரது மரணத்தையும் போக்குங் குணமுடைய தாய்ச் **சாவா மருந்து** என்ற பெயரைப் பெற்று விளங்குகிறது. ஆன்ருேர் பலர் இதனை யுட்கொண்டு நீண்டகாலம் வாழ்க்கையை யடைந்திருந்தனரென்று கூறுவதாலும் பட்டினத்தடிகள்,

'பிறவாமலிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்து
விட்டால் மண்மேல், இறவாமலிருக்க மருந்துண்டு'

என்று சொல்வதாலும் வானீருக்குச் சாவாமருந் தென்ற பெயர் வழங்கப் படுவதாகத் தெரிகிறது. எனினும் அப்பெயரதற்கு அமிர்தம் என்ற வடசொல்லால் வந்ததே யொழிய அமிழ்தமென்ற தமிழ்ச்சொல்லால் வந்ததல்ல; ஆய்ந்தறிக.

4. வான் என்பதை மூன்றும் வேற்றுமையாக்கி வானுல் என்று பொருள் கொண்டு, நின்று என்பதனை வினையெச்சமாக்கி, உலகம் என்ற சொல்லோடுசேர்த்து, 'உயிர்கள் இடையருது நின்று' எனப் பொருள்கூறினும், வான் நின்று என்பதிலுள்ள நின்று என்னும் சொல்லை ஐந்தாம் வேற்றுமை யுருபு மூன்றும் வேற்றுமையில் மயங்கிய தெனக்கொண்டு பொருள் கூறினும், ஐந்தாம் வேற்றுமையாகவே கொண்டு மழையினின்று எனப் பொருள் கூறினும் அமையுமேனும் சிறப்பு நோக்கி அவற்றை யொழித்து நிற்ப என்பது நின்றுஎனத் திரிந்த தென்று கொண்டு பொருளுரைத்தனம்.

**இலக்கணம்:** வான் - இடவாகு பெயராய் மழையை உணர்த்தியது. நிற்ப திரிந்து வந்த நின்று–வினையெச்சம்; உலகம்–இடவாகு பெயர்; வழங்கி–வினையெச்சம்; வருதல்–தொழிற் பெயர்; தான்–படர்க்கைப் பொதுப் பெயர்; உணரல்–தொழிற் பெயர்; பாற்று–குறிப்பு வினைமுற்று; என்று–குறிப்பு வினை யெச்சம்.

**மேற்கோள்:**

"புள்ளிமால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளிவீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளியுள்ள வெல்லா முவந்தீயுமவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே." (கம்பர்)

## இதுவுமது

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉ மழை.**

**ப-ரை :** துப்பார்க்கு = உண்பவர்க்கு, துப்பு ஆய = தூய்மை யாகிய, துப்பு ஆக்கி = உணவுகளை உண்டாக்கி, துப்பார்க்கு-(அவற்றை) உண்பவர்க்கு, துப்பு = (தானும்) உணவு, ஆய தூ உம் = ஆகி யிருப்பதும், மழை = மழையே யாகும்.

**பொ-ரை :** உண்பவர்க்குத் தூய்மையாகிய உணவுகளை உண்டாக்கி, (அவற்றை) உண்பவர்க்குத் தானும் உணவாகி யிருப்பதும் மழையே யாகும்.

**க-ரை :** மழை உணவுப் பொருள்களை யுண்டாக்கித் தானும் உணவாயிருக்கும்.

**விளக்கம் :** 1. உலகத்தில் ஓரறிவுமுதல் ஆறறிவுவரையிலு முள்ள உயிர்களின் தோற்றத்திற்குக் காரண மழையே யாயினும் அவைகள் உணவையுண்டே உயிர் வாழவேண்டுமென்பார், '**துப் பார்க்கு**' என உயர்திணையிற் சொல்லினர். அஃது அஃறிணை யுயிர்களையும் குறிப்பதாகும்.

2. உயிர்களுக் கெல்லாம் ஒரேவகை யுணவல்ல ; அவ்வவ் வுயிர்கட் கேற்ற உணவென்பதை யுணர்த்த, "**துப்பாக்கி**" என்றுங் கூறினர்.

3. அவ் வுணவுப் பொருள்களும் உயிர்வாழும் வன்மை யைத் தருவன வென்பார், '**துப்பாய**' என்ற சொல்லை வைத்தார்.

4. ஆக்கி யென்பதற்குத் தொனிப்பொருள் கொண்டு நீரால் பயிரிட்டு வந்த பொருள்களை மக்கள் நீரால் சமைத்து என்று பொருள் கூறினும் அமையும்.

5. நீர்வேட்கை கொண்டபோதும், உணவுண்ட பின்னும், உணவாய் நின்று பயன்படுவது '**நீர்**' என்பார் 'துப்பாயதூஉம்' என்று கூறினர். மேலும் உயிர்கள் வாழ்வில் கவனிக்கவேண் டியவை **ஆகாரம், நித்திரை, இன்பம், பயம்** என்பன. அவற்றுள் ஆகாரம் அரை வயிருக இருத்தல் வேண்டும் என்று கூறும் அருட்

பாவின் ஆறுந்திருமுறையில் வயிற்றின் மற்ற அரைப்பாகத்திற்கு நீர் அருந்த வேண்டுமென்று கூறியுள்ளதை நன்கறிக. அன்றியும் இதன் விளக்கத்தை ‘மருந்து’ என்னும் அதிகாரத்தில் தெளிவாகக் காணலாம்.

**இலக்கணம் :** துப்பார்க்கு–வினையாலணையும் பெயர்; துப்பு–உரிச்சொல் ; ஆய–பெயரெச்சம், நான்காம் வேற்றுமை. ஆக்கி–வினையெச்சம், ஆயதூஉம்–இசை நிறைக்க வந்த அளபெடை, இறந்தகால வினையெச்சம்.

**மேற்கோள் :**

“ அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தேங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை யாங்கது வாகுமே ”

(திருமந்திரம்)

## செய்யுள் : 3 மழையின்மையால் வருந்தீமை

**விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்(து)**
**உள்நின்(று) உடற்றும் பசி.**

**ப–ரை :** விண்–மழையானது, நின்று–(பருவத்தில் பெய்யாமல்) இருந்து, பொய்ப்பின்–பொய்க்குமாயின், பசி–பசியானது, விரிநீர்–கடல்சூழ்ந்த, வியன் உலகத்துள்–பெரிய உலகத்து உயிர்களிடத்தில், நின்று–தங்கி, உடற்றும்–வருத்தும்.

**பொ–ரை :** மழையானது பருவத்தில் பெய்யாமல் இருந்து பொய்க்குமாயின் பசியானது கடல் சூழ்ந்த, உலகத்து உயிர்களிடத்தில் தங்கி வருத்தும்.

**க–ரை :** பருவங்களில் மழை பெய்யாவிட்டால் நாட்டில் மக்கள் பசியால் வருந்துவர்.

**விளக்கம்:** 1. விண் + இன்று எனப்பிரித்து மழை பெய்யாமல் என்று பொருள் கூறலாமாயினும் அடுத்துவந்த பொய்ப்பின் என்ற சொல்லுக்கும் பொய்க்குமாயின் என்ற அந்த எதிர்மறைப் பொருளே யிருப்பதால், '**இரண்டெதிர்மறை ஒருடன்பாடு**' என்ற முறைப்படி குற்றம் வருதலின் '**விண் + நின்று**' என்று பிரித்துப் பொருள் கூறினும்.

2. பெய்ய வேண்டிய பருவங்களில் மழை பெய்தாற்ருன் ஆறுகளிலும், ஏரிகளிலும், குளங்குட்டைகளிலும், கேணிகளிலும் நீர் நிறைந்து நாடு நலம்பெறும். அங்ஙனமின்றி மழை தடைப்பட்டென்பார், '**நின்று**' என்று கூறினர்.

3. மக்கள் வாழ்வுக்கே யன்றி, மற்றவை வாழ்வுக்கும் அமைந்தது உலகமென்பார், '**வியன் உலகம்**' என அடை கொடுத்துக் கூறினர். **ஔவையும்**, 'பெரியது கேட்கின் நெடிய வெவ்வேலோய், பெரிது பெரிது புவனம் பெரிது' என்ருர்.

4. கடலை '**விரிநீர்**' என்று கூறியது அப்பெரிய உலகத்தினும் பெரியது என்று குறிக்க. குறிப்பிடினும் அஃதிருந்தும் (உப்பாயிருத்தலின்) பயனில்லை யென்பது தோன்ற உலகத்துக்கு அடைமொழியாகக் கூறினர். "**கடல் பெரிது மண்ணீருமாகாது**" என்று பிறரும் கூறியுள்ளனர்.

5. **உலகத்துள்** என்று பொதுபடக் கூறினுரேனும் **நின்று** என்ற சொல்லால் தனித்தனி உயிரிடத்து என்று பொருள் கொள்ள வைத்தார்.

6. உடலில் தோன்றும் எல்லா நோய்கட்கு மூலகாரணம் பசி ஆதலின், அது தோன்ற '**பசி**' யென்றே கூறினர். '**பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்**'' என்றது பழமொழி.

> "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
> தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப்பறந்து போம்"

**இலக்கணம் :** விண்–இடவாகுபெயராய் மழையை உணர்த்தியது ; நின்று-வினையெச்சம் ; பொய்ப்பின்–வினையெச்சம் ; விரிநீர்–வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் கடலை உணர்த்தியது ; வியன்–உரிச்சொல் ; உலகம்–இடவாகு பெயராய் உயிர்களை உணர்த்தி நின்றது; உள்–ஏழாம் வேற்றுமை யுருபு ; உடற்றும்–செய்யு மென்னும் வாய்பாட்டு வினைமுற்று.

**மேற்கோள் :**

“ மாரிநாட் கூவுங் குயிலின்னா ;
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா ;
**மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா** ; ஆங்கின்னா
ஈூரி யெருத்தா லுழவு.” (இன்னா நாற்பது)

## செய்யுள் : 4 இதுவுமது

**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.**

**ப–ரை :** புயல் என்னும்–மழை யென்று சொல்கிற, வாரி–வருவாயினது, வளம்–செழுமை, குன்றி(ய)க் கால்–குறைந்து விட்டால், உழவர்–(நிலத்தைப்) பயிரிடுவோர், ஏரின் உழாஅர்–ஏரால் உழமாட்டார்கள்.

**பொ–ரை :** மழை யென்று சொல்கிற வருவாயினது செழுமை குறைந்து விட்டால், நிலத்தைப் பயிரிடுவோர் ஏரால் உழமாட்டார்கள்.

**க–ரை :** மழை வளம் குறைந்தால் பசியைப் போக்குகின்ற உழவுத் தொழில் நடைபெறாது.

**விளக்கம் :** 1. நாட்டின் கண்ணுள்ள நீர்நிலைகட்கு நீர் வருவாய்க்குக் காரணம் மழையென்பார் ‘**புயலென்னும் வாரி**’ யென்றார்.

2. மழையின் **வளமை**யாவது பருவங்களில் குறையாது நீரைப் பொழிதல்.

3. எல்லாத் தொழில்களும் ஏர்த்தொழிலால் இயங்குவன அதாவது எத்தொழிலும் ஏர்த்தொழிலின்றிப் பயனில்லை யென்பார். '**ஏரின்**' என்றும், அத்தொழில் நீர் இல்லாமல் நடைபெறு தென்பார். '**வாரி குன்றியக்கால் உழவர் உழார்**' என்றுங் கூறினர். அல்லது 'நிலமும் விதைகளுமேயன்றிக் கலப்பையும் உழுமாடுகளும் இருந்தும் பயனென்ன நீரில்லாவிடில்' என்பார் **ஏரின்** என்று கூறினர் எனலுமொன்று.

4. **உழவர்** என்பதுஉழைப்பால் வந்த பெயர். அவர்கட்கு நீர் முக்கியமென்பதைக் காராளர், கொண்டல்கட்டி, கங்கைக் குலத்தவர் என வழங்கும் பெயர்களா லறியலாம்.

குன்றியக்கால் என்ற தொனியால் குன்றுக்கால் ஏர் தொழிற் சிறக்க, மற்ற ஆட்சித் தொழில்வரை உயர்ந்து, '**எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி வாழிய நிலனே**' ஆகும் என்பதாயிற்று.

6. வளம் **நின்றக்கால்** என்னுது **குன்றியக்கால்** என்றதனுல், குன்றக் குன்ற உழவர் உழைப்பு குறைந்து, உணவின் விலை ஏறும் என்பதும், அதனுல் மக்கள் நன்முயற்சிகள் குறைந்து, வேல், வாள், வில், பீரங்கி, அணு வாயு முதலிய தீக்கருவிகளால் பிற நாட்டுக்குத் துன்பம் செய்தலும் கொலை, கொள்ளை முதலிய ஒழுக்கக் கேட்டால் உள் நாட்டில் துன்பஞ் செய்தலும் ஏற்படும் என்பதும் பெற்றும்.

**இலக்கணம் :** புயல்-பெயர்ச்சொல் ; என்னும்-பெயரெச்சம் ; உழவர்-காரணப்பெயர்; உழாஅர்-இசை நிறைக்க வந்த அளபெடை, எதிர்மறை பலர்பால் படர்க்கை வினைமுற்று ; வளம்-பண்புப் பெயர் ; குன்றியக்கால் என்னும் வினையெச்சம் குன்றிக்கால் என்று குறைந்து வந்தது.

**மேற்கோள் :**

" மாரி யல்லது காரிய மில்லை "

## செய்யுள் : 5 மழையால் வரும் நன்மை தீமைகள்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

**ப—ரை :** கெடுப்பதூஉம்—(பெய்யவேண்டிய காலத்துப் பெய்யாதும், தேவைக்கதிகமாகப் பெய்தும், வேண்டாத காலத்திற் பெய்தும் உழவரைக்) கெடுப்பதும், கெட்டார்க்கு—அப்படிக் கெட்டவர்க்கு, சார்வாய்—துணையாய், எடுப்பதூஉம்—(பெய்ய வேண்டிய காலத்து அளவாய்ப் பெய்து பெய்யவேண்டாத காலத்தில் பெய்யாமல்) உயர்த்துவதும், எல்லாம் மழை—(இவை) எல்லாம் (செய்ய வல்லது) மழையே.

**பொ—ரை :** பெய்யவேண்டிய காலத்துப் பெய்யாதும் தேவைக்கதிகமாகப் பெய்தும் வேண்டாத காலத்திற் பெய்தும் உழவரைக் கெடுப்பதும், அப்படிக் கெட்டவர்க்குத் துணையாய்ப் பெய்யவேண்டிய காலத்து அளவாய்ப் பெய்து, பெய்யவேண்டாத காலத்தில் பெய்யாமல் உயர்த்துவதும் இவை யெல்லாம் செய்ய வல்லது மழையே.

**க—ரை :** மக்களை வறுமையுறச் செய்து நாட்டை அழிப்பதும் செழுமையுறச் செய்து உயர்த்துவதும் மழையே.

**விளக்கம் :** 1. மழை ஆக்கல், அளித்தல், அழித்தலென்னும் முத்தொழி லாற்றலையுடையதெனக் கூறவந்த ஆசிரியர் '**கெடுப்பதூஉம்**' என்று அழித்தல் தொழிலையும் '**எடுப்பதூஉம்**' என்று ஆக்கல், அளித்தல் இரு தொழில்களையும் சேர்த்துக் கூறினார். ஆக்கி அளித்துத்தான் உயர்த்தல் வேண்டும்.

2. ஈண்டுக் **கெடுப்பது** என்பது வறுமை யுற்றழிதல்: **அழிதலாவது** பசி, தாகம் மிகுந்தும், அவற்றால் வெப்ப நோய்கள் கொண்டும் சாக்காடுறுதலாகும்.

3. கெடுப்பதற்குக் காரணத்தைப் பதவுரையிற் சேர்த்துக் கூறியுள்ளனம்: அங்ஙனமே உய்வதற்குக் காரணமும் கூறியுள்ளனம்.

4. கெடுதல் அனைத்துயிர்க்கு மாதலின், '**கெட்டார்க்கு**' என்று மக்கள் உயிர்மேலேற்றிக் கூறியது கேட்டையும் ஆக்கத்தையும் தத்த மூக்கத்தால் கொள்பவர்கள் அவர்களே என்று உணர்த்தற்கு.

5. மழை யெக்காலத்தும் மக்கள் முயற்சியோடு சார்ந்தேயிருக்கு மென்பார், '**சார்வாய்**' என்றும் விளக்கினர். அதனுல் மழையையும் முயற்சியால் கொணரலா மென்பது மாயிற்று.

6. '**எல்லாம்**' என்ற சொல்லும் முயற்சியின் வேறுபாட்டால் ஆகும் கேட்டின் வேறுபாட்டையும் உயர்வின் வேறுபாட்டையும் உணர்த்தி நிற்கிறது.

7. **எல்லாம் மழை** யென்று முடியுஞ் சொல்லின்றி நிற்றலால் **வல்லது** எனக் கொண்டு முடிக்க. அஃது அவாய் நிலை.

8. '**ஆங்கே**' என்பதை உவமை யுருபாகக் கொண்டு முன் கெடுத்தாற்போல என்று பொருள் கூறினும் அமையும்.

9. ஒவ்வொரு அடியின் முதலிலும் கெடுப்பதூஉம் எடுப்பதூஉம் என மாறுபட்ட சொற்கள் வந்தமையால் இச் செய்யுள் அடிமுரண்தொடையாகும்.

**இலக்கணம் :** மற்று, ஆங்கு, ஏ–அசைகள் : கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் சொல்லிசை யளபெடைகள், தொழிற்பெயர்கள்; கெட்டார்–வினையாலணையும் பெயர்; சார்வாய்-வினையெச்சம்; எல்லாம்–மூவிடப் பொதுப் பெயர்.

## செய்யுள் : 6 மழையின்மையால் வரும் தீமை

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்(பு) அரிது.**

**ப–ரை :** விசும்பின் – மேகத்திலிருந்து, துளி – நீர்த்துளிகள், வீழின் அல்லால் – விழுந்தால் அல்லாமல், ஆங்கு – (உலகத்தில்) அந்தந்த இடங்களில், பசும்புல்தலை – பச்சைப் புல்லின் முனையையும், காண்பு அரிது – பார்த்தல் முடியாது.

**பொ–ரை :** மேகத்திலிருந்து நீர்த்துளிகள் விழுந்தால் அல்லாமல் உலகத்தில் அந்தந்த இடங்களில் பச்சைப் புல்லின் முனையையும் பார்த்தல் முடியாது.

**க–ரை :** மழை பெய்யாவிடில் பசும்புல்லும் முளைக்காது.

**விளக்கம் :** 1. மழையின் மூவாற்றலைச் சிறப்பித்த ஆசிரியர் அதன் **ஆக்கலைத்** தனித்துப் புகழ்கிறார்.

2. **விசும்பின் துளி** என்றதால் நீர்த்துளிகள் ஆயின. மழை யென்று கொள்ளினும் பொருந்தும், 'சிறு துளி பெரு வெள்ளம்' என்றாற்போல.

3. உயிர்கள் தோன்றுமிடம் உலகம் என்பதைச் சுட்டவே '**ஆங்கே**' என்று கூறினார்.

4. '**பசும்புல்**' ஓரறிவுயிர். அந்தத் தாழ்ந்த உயிரும் உண்டாதலில்லை யென்றால் புகழ்செய்தற்குரிய பெரியஉயிர்–ஆறறிவுயிரும் எங்ஙனம் உண்டாகும்? உண்டாகாது. இதை யுணர்த்தவே பசும்புல்லைக் கூறினாரென்க.

5. **தலை** யென்றது முன்தோன்றும் பாகம். உபலட்சணத்தால் அதன் மற்ற பாகங்களும் பெறப்பட்டன.

6. "முதன் முதல் உயிர்கள் நீரிலேயே தோன்றின. கடலடியிற் கிடந்த இரசாயனப் பொருள்களின் கூட்டுப் பரிணாமத்தாலேயே முதலுயிர் தோன்றிற்று. அவ்வுயிர் தொடக்கத்தில் பாசியாயும், பிறகு தாவரமாயும், பிறகு புழுவாயும், இறுதியில் மீனாயும் பரிணமித்தது. முதன்முதல் உயிர்தோன்றிய காலம் சுமார் 50 கோடி ஆண்டுகட்கு முன்னது என்னலாம். நீருயிர்கள்

பரிணமித்துத் தரையில் ஏறத் தொடங்கின. இங்ஙனம் 200 ஆண்டுகளாக டார்வின் போன்ற விஞ்ஞானிகளின் ஆய்ந்துகூறும் கருத்துக்களை 1800 ஆண்டுகட்கு முன்னமிருந்த நம்மாசிரியர், '**பசும் புல் காண்பதரிது**' என்னும் தொடரால் விளக்குவதை ஆய்ந்தறிக. என்னே! தமிழகத்து விஞ்ஞானம்.

7. அரிது என்பதற்கு இல்லை யென்றே பொருள். அருமை யெனினும் இன்மை யெனினும் ஒன்று.

**இலக்கணம் :** விசும்பு–இடவாகு பெயர்; துளி–சாதி யொருமை; வீழின்- வினையெச்சம்; அல்லால்–எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம்; மற்று, ஏ–அசைகள்; ஆங்கு–சுட்டு நீண்டுவந்த பெயர்; பசுமை+புல் = பசும்புல்–பண்புத்தொகை நிலைத்தொடர்; தலை–உறுப்புப் பெயர்; காண்பு–தொழிற்பெயர்; அரிது–எதிர் மறைக் குறிப்பு வினைமுற்று; அருமை–பகுதி, து–விகுதி.

**மேற்கோள் :**

"கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடிற் மாரி வறங்கூரும்
**மாறி வரங்கூரின் மன்னுயி ரில்லை**
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் ருகும்."

செய்யுள் : 7 இதுவுமது

**நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி**
**தானல்கா தாகி விடின்.**

**ப-ரை :** எழிலிதான்–மேகமானது, தடிந்து–(கடல்நீரைக்) குறைத்து, நல்காது ஆகிவிடின்-(மழையைப்) பெய்யாவிட்டால், நெடு கடலும்–பெரிய கடலும், தன் நீர்மை–தன்னுடைய (நீர் இருக்கும்) தன்மையில், குன்றும்–குறைந்துவிடும்.

**பொ–ரை :** மேகமானது கடல்நீரைக் குறைத்து மழையைப் பெய்யாவிட்டால் பெரிய கடலும் தன்னுடைய நீர் இருக்கும் தன்மையில் குறைந்துவிடும்.

**க–ரை :** மழை பெய்யாவிட்டால் நீர்வற்றிக் கடலும் பெருமை இழக்கும்.

**விளக்கம்:** 1. கடலுக்குத் **தன் நீர்மையாவது** நீர் நிறைந் திருக்குந் தன்மையும், மணிகளோடு உப்பு முதலியன உடைமை யும் ஊர்க்காவலுமாம். இவை யாவும் இல்லாமற் போதலைக் '**குன்றும்**' என்றார்.

2. **தடிந்து** என்பதற்கு மின்னி எனப் பொருள் கூறி, மேகம் மின்னி என்று பொருட் படுத்தினும் பிழையின்று. மின்னுவதெல்லாம் பின்னுக்கு மழை என்பது பழமொழி (தடி = மின்).

3. நீர் நிலைகளில் பெரியதான (நீர் நிறைந்த) கடலை, '**நெடுங்கடல்**' என்று கூறினர். அன்றியும் கடலின் மேற்கூறிய பெருமை தோன்ற நெடுங்கடல் என்றாரெனினும் அமையும்.

4. நீர் நிலைகளிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகிக் காற்றைவிட இலேசானமையின் மேலெழுந்து மேகமாகின்ற தென்னும் விஞ்ஞான காரணத்தை ஆசிரியர், '**எழிலி**' என்ற சொல்லால் விளக்கினமை மிகவும் பாராட்டத்தக்கது.

5. கடல், கேணி, குளம், குட்டைகளிலுள்ள நீரே சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி, மேகமாகச் சென்று காடு, மலைப் பிரதேசங்களில் பொழிந்து, அருவி நீராய் மலையினின்றிழிந்து

குளமாய்த் தேங்கி, ஆறுயோடி நீர் நிலைகளை நிரப்பி மீண்டுங் கடலில் வந்து கூடிக் கடலாகின்ற தத்துவத்தை ஆசிரியர், **'தடிந்தெழிலி நல்காதாகிவிடின் நெடுங்கடலுங் குன்றும்'** என்று எதிர்மறையில் விளக்கினர். அன்றியும் நல்காதாகிவிடின் என்ற தொடரின் தொனியால் **நல்கிவிடின்** என்று கொண்டால் மேற்கூறிய தத்துவ முண்டாதலை யறிக.

இங்ஙன முண்மையிருக்கப் புராணக்காரர் தம் நூற்களி லேழு மேகங்களை வகுத்து, அவற்றை யிந்திரனுக்கு வாகனங்க ளென்று கூறியுள்ளனர். அம் மேகங்கள் இந்திரன் விரும்பினுற் றன் நாட்டுக்குள் போந்து மழையைப் பெய்யுமாம். இக் கற்ப னைக் கேற்றவாறு **ஆரந்தாங்கும் பாண்டியன்** கதையையு மெழுதியுள்ளனர். அது, நாடு பஞ்சமுற்ற சமயம் சேரசோழர்கள் வேண்டுகோட் கிரங்கி, இந்திரனு லனுப்பப்பட்ட மேகங்கள் அவர்கள் நாட்டில் நீரைக் குளிரப் பெய்துவிட்டுப் பாண்டியநாட் டெல்லையில் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றைப் பாண்டியன் கண்டு வேட்டையாடிச் சிறை செய்துவிட்டான். இதை யறிந்த இந்திரன் அவற்றை மீட்கப் படையோடு போந்து பாண்டியனை எதிர்த்தும் வெற்றி காணது வருந்திச் சமாதான முறையில் மேகங்களை மீட்டுச் சென்றுனென்பதாகும். இஃது பக்தி மேலீட்டாற் புனைந்துரைத்த பொருந்தாக் கூற்றென்று விடுக்க.

6. நீரின் மிகுந்த கடலின் நிலைமையே மாறுபடுமென்றுல் நீரிற் குறைந்த மற்ற நீர்நிலைகளின் நிலைமையைக் கூறவேண்டிய தில்லை யென்பதைக் **கடலும்** என்ற உம்மையால் பெற வைத்தார்.

**இலக்கணம்:** நெடுமை + கடல் = நெடுங்கடல் பண்புத் தொகை நிலைத்தொடர்; கடலும்-உம்மை உயர்வு சிறப்பும்மை; நீர்மை-பண்புப் பெயர்; குன்றும்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; தடிந்து-வினையெச்சம்; எழிலி-மேகத்துக்குக் காரணப் பெயர்; தான்-முதல் வேற்றுமை சொல்லுருபு; நல்காது-எதிர்மறை வினையெச்சம்; ஆகிவிடின்-வினையெச்சம்.

**மேற்கோள் :**

"பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பி னூட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுந்தது போன்றதே."

(கம்பர்)

"மாரி யல்லது வாரி யில்லை."

(கொன்றை வேய்ந்தன்)

"கடல் குறைபடுத்த நீர் கல்குறைபட எறிந்து."

(பரிபாடல்–20)

## செய்யுள் : 8 இதுவுமது

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

**ப–ரை :** வானம் – மேகம், வறக்குமேல் – வறளுமானால், ஈண்டு–இவ்வுலகத்தில், வானோர்க்கும்–(மக்களால் போற்றப் படும்) தேவர்க்கும், சிறப்பொடு–பெரு விழாவுடன், பூசனை– நித்திய வழிபாடு, செல்லாது–நடவாது.

**பொ–ரை :** மேகம் வறளுமானால் இவ்வுலகத்தில் மக்களால் போற்றப்படும் தேவர்க்கும் பெருவிழாவுடன் நித்திய வழிபாடு நடவாது.

**க–ரை :** மழையில்லை யெனில் இவ்வுலகில் தேவர்களுக்குப் போற்றும் விழா இல்லை.

**விளக்கம் :** *1.* வானம் வறளுதல் அருமையாதலின் அவ் வருமை தோன்ற '**வறக்குமேல்**' என்றார். வறளுவதாவது மேகம் நீர் பொழியாமலிருத்தல்.

2. **ஈண்டு** என்னும் சுட்டு இவ்வுலகத்தையேஉணர்த்தியது. **'ஈண்டு வானம் வறக்குமேல்'** என்று கூட்டிப் பொருளுரைக் கினும் பொருந்தும்.

3. **வான்** என்னும் சொல்லுக்கு உயர்வு என்பது பொருள். உயர்ந்த இடமான மலைநாட்டவர் தலைவனை சேரமன்னனுக்கு **வான வரம்பன்** என்று பெயர் வழங்குதலை யறிக. எனவே, மக்களில் உயர்ந்தார் அறிவுடையோர். அறிவாலாற்றும் அருஞ் செயலினலங்கொளும் மக்களாற்போற்றப்படும் புகழினைக்கொள் பவர் அவராதலின் **'வானவர்'** ஆயினர். அவரைத்தான் கடவு ளவதார மென்றுங் கொள்வரான்றோர். வானவர், தேவர், வானோர் என்பன ஒரு பொருட் பன்மொழிகள்.

4. **"பண்புடையார் பட்டுண் டுலகம்"** என்றபடி அவரால் உலகம் நடைபெறுதலின் அவர்வழி போற்றுங்கடமை மக்கட் குரியது ஆதலின் அந்நித்திய வழிபாட்டை, **'பூசை'** என்றும், அவரது அருஞ்செயலைப் பாராட்டி ஆண்டுதோறும் புகழ்ந்து பரிசளிப் பதையும், இறந்தாரேனும் அன்னார்க்கு ஆண்டு விழா சிறப்புறச் செய்து போற்றலையும் **'சிறப்பொடு'** என்றுங் கூறினர். இங்ஙனம் பொருள் கூறாது, இலட்சியார்த்தத்துக் உதவாத கயிலாய முதலிய காணாத உலகங்களைக் கற்பித்து நம்ப முடியாதபடி ஆயிரந்தேவர்களை அமைத்து, அதற்கேற்ப இவ் வுலகில் அவர்கட்கு நாள்தோறும் ஆண்டுதோறும் செய்யும் விழாப் **பூசனை** யென்றும், **'சிறப்பு'** என்றும்கூறினர் ஆசிரிய ரென்று பொருள் கூறிச் சமயபேதங்களை யுறுதிபடுத்துவர் சிலர். இஃது ஆசிரியர் கருத்துமன்று; அறிவுக்குடன் பாடுமன்று. மெய்ப்பொருள் காணு மறிவுடையோர், இவ்விரு கருத்துக்களை யும் ஆய்வார்களாக.

5. அருஞ்செயலாற்றி வானத்தைக் காவாது வறளவிடுவ ரேல் அவர் புகழும் சிறவாதென்பார், **'செல்லாது'** என்று கூறினர் எனினும் அமையும்.

**இலக்கணம்:** **சிறப்பொடு** என்பதிலுள்ள ஒடு உம் பொரு ளில் வந்தது; செல்லாது—எதிர்மறை தெரிநிலை **வினைமுற்று**;

வறக்குமேல்-வினையெச்சம்; வானோர்-காரணப் பெயர்; ஈண்டு-சுட்டு நீண்டுவந்த பெயர்.

**மேற்கோள் :**

கலையிட்ட மறைவேந்தர் கனல்வேள்வி வளர்ப்பதுவும்
மலையிட்ட புயத்தரசர் மணிமகுடஞ் சூட்டுவதுந்
தலையிட்ட வணிகருயத் தனமீட்டப் படுவது
நிலையிட்ட வேளாளர் துலையிட்ட நீராலே.

(ஏரெழுபது.)

## செய்யுள் : 9 இதுவுமது

**தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா(து) எனின்.**

**ப-ரை :** வானம்-மேகம், வழங்காது எனின்-(நீரைக்) கொடாதாயின், வியன் உலகம்-(இப்) பெரிய உலகத்தில், தானம் தவம் இரண்டும்-தானம், தவம் என்னும் இரண்டு கடமைகளும், தங்கா-நிற்கமாட்டா.

**பொ-ரை :** மேகம் நீரைக் கொடாதாயின் இப் பெரிய உலகத்தில் தானம் தவம் என்னும் இரண்டு கடமைகளும் நிற்கமாட்டா.

**க-ரை :** மழையில்லை என்றால் உலகத்தில் தானம் தவமிரண்டும் இல்லை.

**விளக்கம் :** 1. வழங்காது என்பதற்குக் கொடாது என்பது பொருளாதலின் நீர் தோன்றாச் செயப்படு பொருளாயிற்று.

2. தானம் என்னும் சொல்லுக்கு ஈகை யென்பது பொருள். அதனை இல்லறத்தாரே செய்தற்குரியவர் என்று கூறும் சமய வழக்குப்படி பொருட்படுத்தி, தானம் என்பதற்கு இல்லறம் என்று பொருள் கூறினர் சிலர். இது ஆசிரியர்க்குக் கருத்துமன்று உடன்பாடுமன்று. அவர் தமிழர் வழக்குப்படி இல்லறம்,

துறவறம் என அறத்தை இருவகையாகவே வகுத்துக் கொண்டு இவ்விருவகை யறத்தினரும் உலகத்தில் வாழ்ந்து மக்களுக்கு உதவுநர் என்பது தோன்ற '**தானம்**' என்ற சொல்லைப் பொது வாக்கி, ஈதல் செயலையே யுணர்த்தினரென்க.

3. தவம் என்பதற்கும் ஐம்பொறிகள் புலன்கள் மாட்டுச் செல்லாது சாந்திராயணம் போன்ற விரதங்களால் அடக்கி மனத்தை ஆண்டவன் வசம் வைத்தல் எனச்சமயக் கருத்தைக் காட்டி, இஃது துறவறத்தார்க்கே உரியது என்று கொண்டு தவம் என்றது துறவறத்தை என்பர். இதுவும் ஆசிரியர் கருத்தன்று.

மனைவியோடிருப்பார்க்கும் மனைவியிழந்திருப்பார்க்குந் தீமை செய்யும் புலன்களை யடக்குதலும், நாட்டில் புகழ்தருங் கரும ங்களைச் செய்தலும் பொது ஆதலின் அவற்றை விடுத்துப் பாரதத்தில் நச்சுப்பொய்கைப் படலத்தில் இயமன் அசரீரியாயிருந்து நீர் பருக வந்த தருமனை வினவிய பதினன்கு வினக்களில் தவமாவது யாதென்பதொருவினா. அதற்குத் தருமர் அளித்த விடை '**தவமென்ப தங்குலம் புரிநடையே**' என்றதையும் ஆசிரியர் தவம் என்ற அதிகாரத்தில், '**தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார்**' என்று கூறுவதையும் நோக்கித் தவம் என்றது ஈண்டு தங்கருமம் என்றே பொருள் கூறினேம். ஆகவே, ஆசிரியர் இருவகை அறத்தினரும் பொதுவாகச் செய்யவேண்டிய கடமைகளாகிய பிறர்க்குதவுதலையும் புகழ்தரும் தங்கருமம் செய்தலையும் தானம் தவம் எனக் குறிப்பிட்டார் எனக்கொள்க.

4. தானத்தாலும் தவத்தாலும் உலகம் பெருமையுடையதென்பதை '**வியனுலகம் தங்கா**' என்றதாற் பெறவைத்தார்.

**இலக்கணம் :** தானம், தவம்–வடசொற்கள் ; இரண்டும்–எண்ணலளவை யாகுபெயர் ; உம்மை–முற்றும்மை ; தங்கா–எதிர்மறைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்று; வியன்–உரிச்சொல்; வழங்காது–எதிர்மறை வினைமுற்று ; எனின்–வினையெச்சம்.

**மேற்கோள் :**

'வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்'

**நீரின்(று) அமையா(து) உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்(று) அமையா(து) ஒழுக்கு.**

**ப-ரை:** யார் யார்க்கும்-(இருவகை யறத்தில்) எவ்வகை மேம்பாடு உடையவர்க்கும், உலகு-உலக வாழ்க்கை, நீர் இன்று-நீர் இல்லாமல், அமையாது-பொருந்தாது, எனின்-என்றால், ஒழுக்கு-(அவ்வாழ்க்கையில்) ஒழுக்கமும், வான் இன்று-நீரில்லாமல், அமையாது-பொருந்தாது.

**பொ-ரை:** இருவகை யறத்தில் எவ்வகை மேம்பாடு உடையவர்க்கும் உலக வாழ்க்கை, நீர் இல்லாமல் பொருந்தாது என்றால் அவ்வாழ்க்கையில் ஒழுக்கமும் நீரில்லாமல் பொருந்தாது.

**க-ரை:** மழை யில்லாமல் உலக வாழ்க்கையும் அவ்வாழ்க்கையில் ஒழுக்கமும் இல்லை.

**விளக்கம்:** 1. **யார் யார்க்கும்** என்று அடுக்கிக் கூறியது இருவகை அறத்தினரையும் அவருள் மேம்பட்டாரையும் உணர்த்த என்றறிக.

2. **உலகு** என்றது உலக வாழ்க்கையை. உலக வாழ்க்கையாவது அறம் பொருளின்பங்களை ஒப்புர வொழுகி யனுபவித்தல்.

[அறமாவது அறிவுடைப் பொருளை யீதல், பொருளாவது அறிவை யீட்டல், இன்பமாவது அறிவுக்கறிவை யீந்து ஆநந்தித்தல்.]

3. எனின் என்னும் சொல் கீழிருக்கும் ஒழுக்கத்தையும் கூட்டி நின்றது.

4. உலகு என்பதற்கு உலகத்துயிர்கள் எனப் பொருள் கூறி னிழுக்கில்லை எனினும் இவ்வதிகாரத்தின் முதல் குறளில் அப்பொருள் வந்துள்ளதால் கூறியது கூறலென விடுக்க.

உலகத்திற் காணப்படும் உயிரற்ற பொருள்கட்கு மூல காரணமானவை உயிருடைப் பொருள்களன்றோ? அவற்றின்

உற்பத்தி வளர்ச்சிகள் யாவும் நீரின்றி முடியாமையை நன் குணரலாம். தென்னையின் கீழ் வார்த்த நீர் தேங்காயாகவும், நெல்லுக் கிறைத்தநீர் நெல் மணியாகவும், கொய்யாவுக் கூற்றிய நீர் கொய்யாக்கனியாகவும் மாறுகின்றது. இங்ஙனமேபொன்னும், மணிமுதலியவை யாவும் நீரால் பரிணமித்து விளங்குகின்றன. இங்ஙனம் உலகம், நீரை முக்கியமாய்க் கொண்டு விளங்குகிறது என்பதை விளக்கவே **நீரின் றமையாது உலகம்** என்று கூறி னார். புவி நீர்பூத்த மலர்போல் கடல் நடுவிலிருத்தலே இதற்குப் போதிய சான்றுமாகும்.

**இலக்கணம்:** நீர் + இன்று ; வான் + இன்று; இன்று—எதிர் மறைக் குறிப்பு வினையெச்சம்; வான்-நீர்க்கு இடவாகு பெயர்; உலகு—இடவாகுபெயர்; அமையாது இரண்டும் – எதிர்மறை ஒன்றன்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று; யார் யார்க்கும் வினாப்பெயர் அடுக்கு; உம்—முற்றும்மை.

**மேற்கோள்:**

*"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை"*

(நான்மணிக்கடிகை)

*"மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை*
*மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்*
*தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்."*

(மணிமேகலை)

# வான் வாழ்த்து

(1) முன்னுரை (3) வானின் நன்மை தீமைகள்
(2) வான் என்பது (4) முடிபு.

**விண்**, காற்று, தீ, நீர், மண் என்பன ஐந்து பூதங்கள். இவை ஒன்றிலிருந்து ஒன்று அதாவது விண்ணிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து தரையு முண்டாயின. அத்தரைதான் நீரோடு உலகமென்று அழைக்கப்படுகிறது. தரையைச் சுற்றிக் கடலாகவும், தரையின் கீழ்க் கிணருகவும், தரைக்குமேல் மழையாகவும் அமைந்து விளங்கும் நீரின் வியப்புப் பாராட்டத் தக்கதாகும். உலகத்துக்கு முக்கியமான பொருள் நீர் என்று கொண்டு அதைப் பண்டைக் காலத்திலேயே எல்லா நாடுகளுக்கு முன்னம் தமிழகம் போற்றியுள்ளது. அதனை வள்ளுவரும் பின் வருமாறு வாழ்த்துகிருர்.

வான் என்பது மேகம் அல்லது மழையாகும். கடல், ஏரி, குளம், குட்டை முதலியவற்றிலுள்ள நீர் வெப்பத்தா லாவியாக மாறிக் காற்றினு முயர்ந்து வானத்தி லொன்றுகூடிய நீராவிக் கூட்டமே மேகமாகும். இதற்கு, '**எழிலி**' என்று பெயர். ஆனல் அஃது உயிருள்ள பொருளல்ல. உருவமின்றிச் சர்வ வியாபியாய் விளங்கும் அறிவுக் குறுதுணை செய்யும் உருவாருவமான பொருள். மழை நீரால் தோன்றிய தரையும், தரைவாழ் பொருள்களும் அந்நீரா லுயிர் வாழ்கின்றன. ஆதலின் நீர் முக்கிய அமிழ்தாகப் பயன்படுகிறது. உயிர்தோறும் வியாபித்திருக்கும் ஆண்டவனைப்போலவே உலகத்தில் எல்லாப் பொருள்களாக வுருவாகித் தானுமோ ருணவுப் பொருளாய் நிற்கும் பெருமை யிம்மழை யொன்றற்கே யுரியதெனக் கூறல் மிகையாகாது. ஓரறிவு முதலாய் ஆறறிவரையிலுமுள்ள உயிர்கட்குச் சத்துள்ள உணவை விதவிதமாகத் தந்து காக்கு முயர்வையுடையது. மழைநீரால் உலகத்திற் பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

மேகம் மழைநீரைப் பொழியாவிடின் உலகத்தி லுண்டாகுந் தீமைகள் பலவாகும். ஓரறிவுயிராகிய புற்களும் எவ்விடத்துந்

தோன்றமாட்டா. எனின் ஜீவோற்பத்தி யென்பது முற்று மில்லாமலொழியும். வாழு முயிர்கட் காகார முளையாமையின் அவைகள் பசியால் வருந்தியும் பல நோய்களுக் காளாகியும் மரணமுறு மென்பதி லையமில்லை. பருவங்களில் பெய்யும் மழை யின்மையால் வெப்பமதிகமாகி நீர்நிலைகள் நீரற்றுவிடும். மழைக் குக் காரணமாய் நிற்கும் கடலும் வற்றி, ஆக்கல், அளித்தல், அழித்த லென்னும் முத்தொழிலற்றுத் தன் பெருமையை யிழந்து விடும். எல்லாத் தொழில்களையும் நிகழச் செய்யும் உழவுத் தொழி லற்றுவிடும். அதனுல் அறிஞர்களைப் போற்றுவதும், அறிவுடைக் கடவுளர்க்கு விழாச்செய்யுஞ் சிறப்பும் நாட்டி லில்லா மற்போகும். இல்லறந் துறவற மென்னு மிருவகை யறத்தாரிடத் தும் நிகழ்வதாகிய வொழுக்கங் கெடுவதோடு தானந் தவமிரண்டு மின்ருகும்.

எனவே, மழை முழு ஆற்றலையுடைய பெரும்பொருளாகும். முத்தொழில் நடத்தும் வாலறிவனைப் போல், ஆக்கவும் அளிக் கவும், அழிக்கவுஞ் செய்யும் வன்மை யதற்குண்டு. சுருங்கச் சொல்லின் மழை பெய்யா விடினும் தேவைக்கதிகமாகப் பெய்து விடினும் நாட்டைக் கெடுக்கும். அங்ஙனங் கேடுற்ற நாட்டை மீண்டும் தேவை மழை பெய்து உயர்த்தும். இத்தகைய ஆற்றல் வாய்ந்த மழை செய்து வரும் நன்றியை மக்கள் மறவாது போற் றுதல் தங்கள் கடமையாகும்.

---

**பொருள்:** (நாட்டின் நலனுக்குத்) தன்னல ஆசையைத் துறந்துவர்களைப் பாராட்டும் வணக்கம்.

நீத்தார் = (இல்லாளோடிருந்தும் இல்லாளோ டில்லாமலும் தன்னல) ஆசை யற்றவர்.

**இலக்கணம்:** நீத்தார் வாழ்த்து என்னு மித்தொடர் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன் தொக்க தொகை நிலைத்தொடர்.

**விளக்கம்:** 1. ஈண்டு நீத்தாரைப் புகழ்தலின், வான் வாழ்த்துக்குக் கூறியாங்கு கூறிக் கொள்க.

2. நீத்தா ரென்னுஞ் சொல் மனைவியோ டிருந்தும், இல்லா மலும் ஆசையைத் துறந்த (தன்னலமற்ற) பெரியோர்களை உணர்த்தி நிற்கிறது. துறந்தார் என்னும் வினையாலணையும் பெயர்க்குத் துற என்பது முதனிலையாகும். துறவு அதன் தொழிற் பெயர். உயர்வு அல்திணையை அஃறிணை யென்று கூறினாற் போலத் துறவு சொல்லின் செயப்படு பொருளாகிய 'இல்' துறவு அறத்தைத் துறவறமென ஆசிரியர்கூறினா ரெனினு மொன்று.

'இல்' என்பது பல பொருள் குறித்த சொல்லாயினும் ஈண்டு இல்லாளை (வீட்டுக் குரியமனைவியை) உணர்த்திப் பின் அவள் மாட்டுச் செல்லு மாசைமேல் நின்றது. எனவே, 'இல்லா ளொடு கூடிய பற்றுடை அறத்தை இல்லறமென்றழைத்தாற் போல அவ்வில்லாளோடு கூடிப் பற்றில்லாத அறத்தையும் இல் லாளைப் பெருது பற்றற்ற அறத்தையும் துறவறம் என்றுரென்க.

உலகில் மக்கட்கு இல்லறந்தான் இயற்கையோ டொட்டிய அறம். இயற்கைப் பொருள்களாகிய விலங்கு, பறவை, நீர் வாழ்வன, ஊர்வன, தாவரம் இவைகளில் துறந்து வாழும் உயி ரில்லை. இவை யாவும் தன்னலமற்ற இல்லறம் புரிந்தே யினிய பொருள்களை நடுவுநிலைமையாகத் தந்து மக்களை யாதரிக்கின்றன. இவ்வகையில் மக்கட்கும் இல்லறமே இயற்கையறமெனக்

கொண்டனர் வள்ளுவர். மேலும் இல்லறத்தை யினிது நடத்திய வருள் இல்லாளையிழந்து வயது, தேகம், மக்கள், பொருள்நிலை யிவைகளைக் கருதி மீண்டும் இல்லாளை விரும்பாதவரும், தம் நிலைக்கேற்ப இளமையிலிருந்தே இல்லாளை விரும்பாதவரும் ஆக இருவகையினர்தாம் துறவறத்தினர் என்று கோடற்கு வள்ளுவர் இல்லறக் கடமைகளை முதலிற் கூறிப் பின் துறவறக் கடமை களைக் கூறியுள்ளனர். துறவு அவ்வில்லறத்துக்குப் பின்னர் கொள்ளப்படுங் காரணத்தால் இல்லறத்துக் குரிய குணங்களும் துறவறத்துக் குரிய குணங்களோடியைய வைத்துள்ளனர். அதனுல் துறவு இல்லறத்துக்குப் பின் கொள்ளப்படு மொரு செயற்கையறமெனக் கொள்க.

துறவுக் கின்னணம் பொருள் கொள்ளாது வீடு, வாசல், மாடு, கன்று, மனைவி, மக்கள், சுற்றம் ஏன் உலகத்தையே துறத்தல் என்று பொருள் கொண்டு உள்ளத்தாலும் பொறிகளாலும், இவ் வுலகத்தையும் அதாவது சுருங்கக்கூறின் மண், பெண், பொன் இவை மூன்ருசையையும் விரும்பாது விட்டு விடவேண்டு மென்று கூறி, மதச் சின்னங்களை யணிந்து, காவியுடுத்தி அல்லது கோவணம் தரித்து வருகின்றனர். உண்மையில் அறிவாலாயு மாற்ற லுடையவர்க்கு நன்கு தெரியும் இவர்கள் ஓராசையையும் விட்டார்களில்லை யென்பது.

மண்ணில் விளை பொருளையுண்பதாலும், மண் வாழ்க்கையைக் கொள்வதாலு மவர்க ளெங்ஙனம் மண்ணைத் துறந்தவர் களாவர்? பெண்ணை மாயை யெனக்கொண்டு தம் மனைவியரைத் துறந்த அவர்கள் ஊர்ப்பெண்கள் சமைத்த உணவைத்தான் ஏற்றுண்டு வாழ்கின்றன ரென்ருலெங்ஙனம், பெண்ணை வெறுத்தவ ராவர்? இருக்கும் மடத்துக்கும், உடுக்குங் காவி யுடைக்கும், கடிஞைக்கும் பொன்னேற்று வாழ்கின்றன ரென்ருல் எங்ஙனம் பொன்னை வெறுத்தவராவர்? அவர்கள் கூறும் உரையை உண்மை யாகக் கொண்டால் அவ்வறம் உயிர்பிரிந்த உடலினரை யுணர்த்து மேயன்றி வேறல்ல என்பது பெறப்படும். ஆகவே நீத்தார் என்பதற்கு வள்ளுவர் (தன்னலத்தை வளர்க்கும்) இல்லாளோ

டிருந்தும் இல்லாமலும் ஆசையைத் துறந்தவர் எனப் பொருள் கண்டு கூறினரென்க.

"எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பாட்டலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்"

என்று கூறும் பட்டினத்தடிகள் கருத்துமது.

3. துறவிகளே நாட்டின் வளர்ச்சிக்கு முன்னணியில் நின்று மழையால் வந்த பொருள்களைக் கொண்டு நலனுற்றிப் பின்வரும் சந்ததியார்க்கும் வழி காட்டியாவர். அவர்களைப் பாராட்டி அவர் வழி கோடலைத்தான் நீத்தார் வாழ்த்தென்று மூன்றுவதுதாகக் கூறினர்.

செய்யுள் : 1 நீத்தா ரியல்பு

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிபு.**

**ப–ரை :** ஒழுக்கத்து–இல்லற ஒழுக்கத்திலிருந்துகொண்டே, நீத்தார்–(அவ் வில்லாளின் இன்பப்பற்றைத்) துறந்தவரது, பெருமை-சிறப்பை, பனுவல் துணிபு–நூற்களின் முடிபு, விழுப் பத்துவேண்டும்–மேன்மையில் விரும்பும்.

**பொ–ரை :** இல்லற வொழுக்கத்திலிருந்துகொண்டே அவ் வில்லாளின் இன்பப்பற்றைத் துறந்தவர்களது சிறப்பை நூல் களின் முடிபுமேன்மையில் விரும்பும்.

**க–ரை :** இல்லாளோடிருந்து இன்பப்பற்றைத் துறந்தவர் கள் பெருமையே மிகவும் சிறந்தது.

**விளக்கம் :** 1. மனையாள் இன்பத்தினைப் பற்றுக நுகராது விட்டாரை **'நீத்தார்'** என்றார். அங்ஙனமே **'கணவன்'** இன்பத் தினைப் பற்றுக நுகராது விட்ட பெண்டிரும் நீத்தாரா யினமை கண்டுகொள்க. **" அவா–தவா பிறப்பிற்கோர் வித்து "** என்றபடி பிறப்புக்குக் காரணமா யிருக்கும் (இப்பெண் ஆண்) ஆசை யொன்றே மக்கள் விடுதற்குரியது. மற்ற பொன், மண் ஆசைகள் விடுதற்குரியன அல்ல. இவை யிரண்டும் மக்கள் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதனவாகும். இவற்றை, **'பொருளி லார்க்கிவ் வுலக மில்லை'** யென்ற வள்ளுவர் வாக்காலும் **'திருவிளங்க சிவஞான சித்தி யெலாம் விளங்க'** என்ற அருட்பா வள்ளல் வாக்காலும் நன்கு அறிந்துகொள்க. ஆனால், இவ்விரு ஆசைகளும் தன்னலத்தால் மிகுந்த வழி மக்கட்குப் பெண் ஆண் காமம் பற் றுடனுகர இடந்தரு மாதலின் அவற்றின் பற்றையுங் கடிதல் அவசியமென்பதாயிற்று. இச் செய்யுள் மனையாளோடிருந்து இன்பப்பற்றைத் துறந்தவரும், மனையாளின்றி யின்பப்பற்றைத் துறந்தவருமான இருவகைத் துறவியருள் மனையாளோடிருந்து இன்பப்பற்றைத் துறந்தவரை வுணர்த்தியதாகும்.

[**குறிப்பு :**—பெண் ஆண் ஆசை தன்னலவாசை, மண் பொன் ஆசை பரநலவாசை இவற்றை ஆய்ந்து கொள்க.]

2. மனையாளைத் (கணவனைத்) தவிர்த்துத் தமக்குரிய பத்துக் கடமைகளையுஞ் செய்தவர்கள்தாம் ஈண்டு ஒழுக்கத்து நீத்தார் எனப்பட்டார்.

பத்துக் கடமைகளாவன :—

(1) தாயைப் பேணல்
(2) தந்தையைப் பேணல்
(3) துறவியைப் பேணல்
(4) வறிஞரைப் பேணல்
(5) கதியற்று இறந்தவரைப் பேணல்
(6) அறிவுடையோரைப் பேணல்
(7) அறிவைப் பேணல்
(8) விருந்தினரைப் பேணல்
(9) உறவினரைப் பேணல்
(10) தம்மைப் பேணல்
என்பனவாம்.

இன்னணம் வள்ளுவர் கூறுதற்குக் காரணம் பெரும்பாலும் இயற்கையான இல்லிடத்திலிருந்தே துறவற மேற்படுதலின் துறவுடையார்க்கும் இப் பத்துக் கடமைகளும் இயல்பாயின. இதற்குப் பொருள் இவ்விதம் கொள்ளாது, நடைமுறையிற் கொள்ள முடியாத அருவறுக்கத் தகுந்த நீட்டல், மழுப்பல், காவியுடை, உருத்திராக்க மாலை, கட்டம் முதலியவைகளை மேற்கொண்டு, பயன் தரும் நாட்டுத் தொண்டகற்றிப் பயனற்ற சுய நலச் சேவையாம் யோக தவ தியானங்களைக் கைக்கொண்டு பாழாகும்–பாழ்படுத்தும் ஓரொழுக்கத்தைத் துறவறவொழுக்கமென வகுத்துக்கொண்டு, '**ஒழுக்கத்து நீத்தார்**' என்ற தொடர்க்குத் தமக்குரிய வருணாசிரம ஒழுக்கத்தில் இருந்து கொண்டே துறந்தவர்கள் எனப் பொருள் கூறிப் பிழை செய்தனர் முன்னர் உரை கூறியவர்களும் சிலர்.

3. **பனுவல்** என்றது இயற்கையோடு ஒட்டிய வாழ்வின் அனுபவ லக்ஷியத்தைக் கூறும் நூல் ஆகும். அப் பனுவலில் கூறப்படுவன இல்லறமும் துறவறமுமென்க. இவற்றுள் இல்லற இன்பம் தலைவன் தலைவி யிருவர்க்கே யுரியது. இதில் தவறேற்படின் கோபம்தாபம் முதலியவை யேற்பட்டுப் பழியும் பாவமு முண்டாகிப் பெருமை கெடும். ஆதலின் மனைவிப் பற்

றிழந்த துறவறத்துக்குச் சிறுமை யில்லாததோடு கடமையுயறப் பெருமையே வருமென்பார், '**பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல்**' என்றும் ஈதுண்மை யென்பார், '**துணிபு**' என்றும் கூறினர்.

**இலக்கணம் :** ஒழுக்கத்து-தொழிற் பெயர்; ஒழுக்கத்து நீத்தார்-ஏழாம் வேற்றுமையுருபும் பயனு முடன்தொக்கதொகை நிலைத் தொடர்; நீத்தார்-வினையாலணையும் பெயர்; பெருமை-பண்புப் பெயர்; வேண்டும்-ஒருவகை வியங்கோள் வினைமுற்று.

**மேற்கோள் :**

எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்போல்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

(நல்வழி)

## செய்யுள் : 2 நீத்தார் உயர்வு

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)**
**இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.**

**ப—ரை :** துறந்தார்—(தன்னலப் பற்றை) விட்டவரது, பெருமை—பெருமைக்கு, துணை கூறின்—அளவு சொன்னல், வையத்து—(அது) இந்த உலகத்தில், இறந்தாரை—(இதுவரையில் தோன்றி) செத்த மக்களை, எண்ணிக் கொண்ட அற்று—எண்ணி கணக்கிட்டதற்குச் சமானமாகும்.

**பொ—ரை :** தன்னலப்பற்றை விட்டவரது பெருமைக்கு அளவு சொன்னல், அது இந்த உலகத்தில் இதுவரையில் தோன்றிச் செத்த மக்களை யெண்ணிக் கணக்கிட்டதற்குச் சமானமாகும்.

**க—ரை :** துறந்தவர் பெருமைக்கு அளவில்லை. அதன் அளவும் உலகத்தில் இதுவரையில் தோன்றி மறைந்தவர்கள் அளவு மொன்று.

**விளக்கம்:** 1. **துறந்தார்** என்பதற்குப் **பற்றையே** விட்டவர்கள் என்று பொருள் கூறி மக்களுள் ஒருசாராரை யுணர்த்துவர். மக்கள் குழுவினர்க்கே பற்றென்னுங் குணம் விடுதற்குப் பொது ஆதலின், அது வள்ளுவர் கருத்தன்று. எங்ஙனமெனின், பற்று எனினும் ஆசையெனினு மொன்று. அப்பற்று **அகப்பற்று, புறப்பற்று** என இருவகைப்படும். அகப்பற்று என்பது மன முதலிய உட்காரணங்களால் கொள்ளப்படும் (இதைச் செய்தவன்) **நான்** என்பது; புறப்பற்றென்பது பொறிகளால் கொள்ளப்படும்(இது) **எனது** என்பது. இவற்றை முறையே அகங்கார மமகாரங்களென்ப. இவ்விரு காரங்களும் தன்னல முடையாரிடம் தோன்றுவன வாகும். ஆதலின் இல்லறம் துறவறம் மென்னுமிரண்டறங்களுக்கும் அவை பொதுவாயின. நாட்டுக்கு வேண்டுவன வியற்றி நலங்காண்டல் இவ்விரு அறத்தினர்க்குங் கடமையாதலின் பெற்ருரைப் பேணல் முதலிய பத்துக் கடமைகளும் பொதுவாயின. தன்னல மற்றுச் செய்யப்படும் இக்கடமைகள், செய்வாருக்குப் பெருமையையும் புகழையுந் தரும் என்பதிலையமில்லை. மனைவியோ டிருந்து செய்யப்படும் அறத்தில் மனையாளொடு மக்களைப் பேணும் பொறுப்பு மிகுந்து நிற்றலோடு அவர் செய் பழிபாவங்க ளுண்டாகின்றன. இது மனையாளின்பப் பறறைத் துறந்தரிடம் இல்லை. பொதுவாக மனையாளோடிருந்து மில்லாமலும் தன்னலப் பற்று விட்டவர்க்கு நாட்டுச் சேவை மிகுந்து உயர்தலின், வள்ளுவர் "**துறந்தார் பெருமைக்குத் துணையில்லை** என்ருர்.

2. '**வையத்து இறந்தாரை யெண்ணிக் கொண்ட**' என்பது உபமானம். இஃது **உவமையணி**: நீத்தார் பெருமையை உவமையளவையால் விளக்கினுர் ஆசிரியர். வையகந் தோன்றிய கால முதற்கொண் டிதுகாறும் பிறந் திறந்த மக்களின் எண்ணிக்கை எண்ணமுடியாதது என்பது தோன்ற நின்றது. இறந்தார் என்ற சொல் மக்கள் உயிரைக் குறிப்பதாயிற்று. (மற்ற வுயிரையன்று.)

3. **துணை** என்ற மொழிக்கு '**ஒப்பு**' என்று பொருந்தும். (துணை, அளவு, ஒப்பு,) துணைக்கூறின் என்ற தொடரிலேயே துணையில்லை யென்ற பொருள் தொனித்தலை யுணர்க.

['**தனக்குவமை யில்லாதான்**' என்ற ஆதி பகவன் வாழ்த்துத் தொடரை யீண்டு ஆய்ந்துணர்க.]

**இலக்கணம் :** துறந்தார் × இறந்தார் – வினையாலணையும் பெயர்கள் ; பெருமை-பண்புப் பெயர் ; கூறின்–வினையெச்சம் ; வையம்–வையகம் என்ற சொல் வையமென நின்றது காரணப் பெயர் ; எண்ணிக் கொண்ட + அற்று = எண்ணிக் கொண்டற்று ; அகரம் தொகுத்தல் விகாரம் ; எண்ணிக்கொண்டால் + அற்று = எண்ணிக் கொண்டற்று என ஆயிற்று என்று கொள்வாரு முளர். எண்ணிக் கொண்ட எண்ணிக் கொண்டால் இவை வினையெச்சம் ; அற்று–குறிப்பு வினைமுற்று; துறந்தார் பெருமை–ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; பெருமை துணை–நான்காம் வேற்றுமைத் தொகை.

**மேற்கோள் :**

காமி யத்தவங் காமிய மொன்றையுங்
 கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகைச் சித்தியும்
 போதமுந் தருமைந்தா,
ஆமி வற்றிலொன் றியற்றினு ரொன்றையே
 யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினு
 ரன்றுள பெரியோரே.

(கைவல்லியம்)

செய்யுள் : 3 **இதுவுமது**

**இருமை வகைதெரிந்(து) ஈண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்(று) உலகு.**

**ப—ரை :** ஈண்டு-இவ்வுலகில், இருமை வகை – இம்மை மறுமைகளின் கூறுபாடுகளை, தெரிந்து–அறிந்து, அறம்பூண்டார்–துறவறத்தைக் கைக்கொண்டவரது, பெருமை-சிறப்பே, உலகு பிறங்கிற்று–உலகத்தில் உயர்ந்தது.

**பொ—ரை :** இவ்வுலகில் இம்மை மறுமைகளின் கூறுபாடுகளை யறிந்து துறவறத்தைக் கைக்கொண்டவரது சிறப்பே உலகத்தில் உயர்ந்தது.

**க—ரை :** துறந்தவர்களின் பெருமையே உலகத்தில் உயர்ந்ததாகும்.

**விளக்கம் :** 1. **இம்மை** இப்பிறப்பின் நிலையை உணர்த்துகிறது; **மறுமை** இறந்தபின் அடையும் நிலையை உணர்த்துகிறது.

2. பொன்னிடத்துப் பல நாமரூப நகைகள் தோன்றி அழியினும் பொன்னொன்று நின்றாற் போலவும், மண்ணிடத்துப் பல நாமரூபகுடமுங் குண்டு சட்டியும் பானையும் தோன்றி யழியினும் மண்ணொன்று நின்றாற் போலவும் அறிவினிடத்து விளங்கும் அவிச்சையின் காரணமாகப் பல நாம ரூபங்களையுடைய பிறவிகள் தோன்றி யழியினும் அறிவொன்றே நிற்பதென்றும் அங்ஙனம் தோன்றிய உடல்களால் செய்யப்படும் நல்வினை தீவினைகள் காரணமாக மண், பொன், பெண் இவைகளிடத்து அவாவும், கலை, உலகம், தேகமாகிய இவைகளிடத்துப் பற்றும் ஏற்பட்டு, எச்சரிக்கையிலும், சொப்பனத்திலும், தூக்கத்திலும் இன்பதுன்பங்கள் வளர்ந்து கவலையாய்த் தம்மாலும் தம்மைச் சூழ்ந்த பொருள்களாலும் இறப்பையும் பிறப்பையும் அடைகின்றன வென்றும் அறிதல் வேண்டும்.

மேற் கூறியாங்கு அறிந்த பின் உடலொன்றே உயிர் தோறு மாறுபாடு பெற்றதென்றும், உயிர் ஒன்றுக் கொன்று சம்பந்தமுடைய தென்றுந் தேர்ந்து அவ்வுயிர்களிடத்து எத்தனையும் பேதமுறாது, ஒத்துரிமை கொண்டுண்மையாகப் பாடுபட்டுழைத்து

வரும் பலனால் தன்னலமின்றிப் பரோபகாரமாய் அவ்வுயிரையும் தம்முயிரையும் உடலுள்ளளவும் போற்றுதல் வேண்டும். அங்ஙனம் போற்றுவதால் இப்பிறப்பிற் புகழடைவதேயன்றி யிறந்த பின்னரும் மக்களால் போற்றப்படும் புகழையு மடைதல் நிச்சயம் என்றறிவதே இம்மை மறுமைகளின் வகையைத் தெரிதலாகும். இதனை, '**இருமை வகை தெரிந்து**' என்று கூறினர் ஆசிரியர்.

3. இம்மை மறுமை ஈரிடத்தும் புகழினைப் பெறுதற்குரியவர், தடையாய மண், பொன், பெண்ணிடத்து வைக்கும் மிகுந்த அவாவினையும் தன்னலத்தையுந் துறந்தவரே ஆவார் என்பார் **ஈண்டறம் பூண்டார்** என்று கூறினர்.

4. இந்த உலகத்தில் நம்மால் அனுபவிக்கப்படும் திரைப் படம், வானொலி, கம்பியில்லாத் தந்தி, ஒலிபெருக்கி, மின்சார வாகனம், பொறி, நீராவி நெய்யாவி வாகனங்களாகிய சித்திர விசித்திரப் பொருள்கள் யாவும், உண்டி. உடை, இடம் மருந்து இவைகள் யாவும், இவைகளை யனுபவிக்கும் நாம் கொள்ள வேண்டிய-கொண்டுள்ள அகபுற ஒழுக்கங்கள் யாவும் தள்ள வேண்டிய விலக்குகள் யாவும் தன்னலமற்ற அறிஞர்களால் அனுபவித்துக் கொடுக்கப்பட்டு, இன்று உலகம் நடைபெற்று வருகிறதென்பார் '**பிறங்கிற்றுலகு**' என்று கூறினர்.

5. உலகு என்பது இடமாகச் சுட்டப்படினும் தனித்த ஒரு பொருளன்று. அஃது அறிவின் காரணமாகப் பஞ்ச பூதங்களினுடைய கூட்டுறவால் காலம், இடம், பொருள்களாய் பரிணமித் துளதென்றறிக.

**இலக்கணம் :** இருமை-எண்ணின்கண் வந்தது ; தெரிந்து-வினையெச்சம் ; ஈண்டு-சுட்டு நீண்டுவந்த பெயர் ; பூண்டார்-வினையாலணையும் பெயர் ; பெருமை-பண்புப் பெயர் ; உலகு-இடப்பெயர் ; பிறங்கிற்று-ஒன்றன்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று ; வகைதெரிந்து-இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர் ; பூண்டார் பெருமை ஆறும் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர் ; தேற்றேகாரம் வருவித் துரைக்கப்பட்டது.

**மேற்கோள் :**

செம்மை யாகிய சிந்தையர் சீரியோர்
வெம்மை யென்பதை வீட்டி விளங்கினேர்
தம்மை யுந்துறந் தேதலை நின்றவர்
இம்மை தன்னினு மின்பத்தை மேவுவார்.
(கந்தபுராணம்)

## செய்யுள் : 4 நீத்தார் இயல்பு

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

**ப-ரை :** உரன் என்னும் தோட்டியான்—அறிவென்று சொல்லப்படும் அங்குசத்தால், ஓர் ஐந்தும்—ஒப்பற்ற (பொறிகளாகிய) ஐந்து யானைகளையும், காப்பான்—(கெட்ட புலன்களின்மேல் செல்ல விடாமற்) காப்பாற்றுபவனே, வரன் என்னும்—முத்தன் என்று சொல்லப்படும், வைப்பிற்கு—நிலைக்கு, ஓர் வித்து—ஒப்பற்ற விதை போன்றவன்.

**பொ-ரை :** அறிவென்று சொல்லப்படும் அங்குசத்தால் ஒப்பற்ற பொறிகளாகிய ஐந்து யானைகளையும் கெட்ட புலன்களின்மேல் செல்ல விடாமற் காப்பாற்றுபவனே, முத்தனென்று சொல்லப்படும் நிலைக்கு ஒப்பற்ற விதை போன்றவன்.

**க-ரை :** ஐந்து பொறிகளையும் கெட்ட புலன்களிற் செல்ல விடாது, அறிவா லடக்குபவனே முத்தனுவான்.

1. **ஐந்தும்** என்றது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளையும். இவை ஐந்தும் உயிர் உடலெடுக்கும் போதே கூடவே தோன்றியவை. இவைகளின் புலன்களாகிய தொடுதல், சுவைத்தல், பார்த்தல், முகர்தல், கேட்டல்களால் காம குரோத மோக மத மாச்சரியங்கள் ஏற்பட்டு அசத்துச் சடதுக்கங்களை உயிர் அனுபவிக்கின்றது. அதாவது இவை உடன் பிறந்தே கொல்லும் வியாதிகளாகின்றன என்பதை அறிய ஓர் என்பதைச் சேர்த்து ஓர் **ஐந்தும்** என்று கூறினர். பாகனென்று

அறிந்தும் கொல்லும் தன்மை யானைக்குண்டு ஆதலின் அவற்றை யானைகள் என்று முருவகித்தார்.

2. உலக விடய ஞானத்துக்குப் பொறிகள் காரணம். அப் பொறிகட்கு மனம் காரணம். மனத்துக்குச் சீவன் காரணம். சீவனுக்கு அறிவு காரணமாயிருத்தலின் அவ்வறிவுக்கு முறையே தொடுவதைத் தொட்டும், சுவைப்பதை சுவைத்தும், பார்ப்பதை பார்த்தும், முகர்வதை முகர்ந்தும், கேட்பதைக் கேட்டும் அறிய மெய், வாய், மூக்குச் செவிகளைப் பயன் படுத்திக் கொள்வது போல, தீய வழியில் செல்லுங்கால் அவைகளை முடமாகவும், மூக்கறையாகவும், செவிடாகவும் ஆக்கிக் கொள்ளும் சக்தி யுண்டென்பது தோன்ற **உரனென்னும் தோட்டியான்** என்றும் உருவகஞ் செய்து கூறினர்.

3. மேற்கூறிய செயல்கள் மக்களாய்ப் பிறந்தார்க்குத்தான் முடியுமென்பார், '**காப்பான்**' என்றும் அங்ஙனம் செய்பவரே மக்களிற் '**பூரணர்**' அதவாது மக்களாற் பின் பற்றப்பட்டுப் போற்றக்கூடியவர் என்பது தோன்ற '**வரன்**' என்றும், மக்களனைவரும் யடைய வேண்டியது இந்த நிலை யென்பார் '**வைப்பு**' என்றும், இந்த நிலையை யடைய மேற்கூறிய பொறிகளை யடக்கியாளும் அறிவுடையவனே காரணமாவான் என்பார் "**ஓர் வித்து**" என்றும் தோன்றக் கூறினர்.

4. **வரம்** என்னும் சொல் போலியாகி வரனுயிற்றென்று கொண்டு மேலான நிலம் அதாவது முக்தி நிலம் என்று பொருள் கூறியுள்ளனர் சிலர். ஆய்ந்து கொள்க.

5. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் என்னும் தொடர் **ஏக தேச உருவக அணி.**

**இலக்கணம்:** உரன் – மொழியிறுதிப் போலி; ஆன்– மூன்றும் வேற்றுமை யுருபு; ஐந்தும் = எண்ணலளவை யாகு பெயர்; காப்பான்–வினையாலணையும் பெயர்; வைப்பு–தொழிலாகு பெயர்; வித்து–உவமையாகு பெயர்; வரன்–காரணப் பெயர்.

**மேற்கோள் :**

உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு. (வாக்குண்டாம்)

அந்தக் கரண மடங்கத் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே. (தாயுமானவர்)

## செய்யுள் : 5 நீத்தார் வல்லமை பெரிது

**ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலுங் கரி.**

**ப—ரை :** ஐந்து–புலன்களாகிய ஐந்து ஆசைகளையும், அவித்தான்–அடக்கினவனது, ஆற்றல்–வல்லமைக்கு, (அப்புலன்களை யடக்காது சாபம் பெற்ற) அகல்–விரிந்த, விசும்பு உ(ள்)ளார்–வானில் உள்ள தேவர்களுக்கு, கோமான்–தலைவனான இந்திரனே, கரி சாலும்–சாட்சி போதும்.

**பொ—ரை :** புலன்களாகிய ஐந்தாசைகளையும் அடக்கினவனது வல்லமைக்கு அப்புலன்களை யடக்காது சாபம்பெற்ற விரிந்த வானில் உள்ள தேவர்களுக்குத் தலைவனான இந்திரனே சாட்சி போதும்.

**க—ரை :** புலனடக்காது சாபம்பெற்ற இந்திரனே சாட்சியா யிருப்பதால் புலனடக்கிய துறவியினது வலிமை பெரியதாகும்.

**விளக்கம் :** 1. புலன்களைந்தில் ஒன்றையடக்காமல் விட்டு, மற்றவற்றை யடக்கியும் பயனில்லை தீமையே வருமென்பார், உம்மையை மறைய வைத்து **ஐந்தவித்தான்** என்றார்.

2. வள்ளுவர் தங்காலத்திற் புராண இதிகாசக்கதைகளதிகமாகப் பரவ, மக்கள் அவற்றில் மயங்கி யிருந்தமையால் அவைகளையே ஏதுவாகக் கொண்டு, தமிழரின் உண்மை யனுபவ நெறியைக் கூறியதாகு-மிச்செய்யுள். அவர், புலனடக்கி மனைவியோடு வாழ்ந்தகௌதமமுனிவர்வலிமைக்குப் புலனடக்காது இந்திராணி

மனைவியோடிருந்த இந்திரன் வலிமை தோற்றதையே மீண்டு உதாரணமாகக் கொண்டார். அன்றியும் இக்கதையைக் கொண்டதற்கு மற்றொரு காரணமுமுண்டு. அது துறவு என்பதற்கு மனையாளையே துறத்தல் என்ற வொரு நியாயத்தை மறுத்து மனைவியோடிருந்து பற்றறுத்த தமிழர் அறத்தை நிலைநிறுத்த, மனைவியோடு வாழும் பற்றற்ற இருவரது வாழ்க்கைக் கதையை யுணர்த்தினு ரென்பதுமாகும்.

3. புலனடக்காதவர் தேவராயினும் தம்மாலும் பிறராலும் அழிக்கப்படுவர் என்பதற்கு மக்களைவிடச் சிறந்த இந்திரன் கதையைக் கூறியதோடு, அக்குற்றத்துக்கு அவனே உடன்பட்டுச் சாபத்தையும் பெற்ருன் என்பார், '**இந்திரனே சாலுங்கரி**' என்று கூறினர்.

4. மக்களே நல்வினை தீவினைகளாகிய செயல்களால் புண்ணிய பாவங்களையடைந்து உலகத்தில் முறையே தேவர்களாகவும் நரகர்களாகவு மாகின்றனர் என்பது ஆசிரியர் கருத்து. இவ்வுலகத்திலேயே ஆசிரியர் உலகம், மாணவர் உலகம், அரசர் உலகம், வீரர் உலகம், தொழிலாளர் உலகம், பெண்கள் உலகம் எனப் பல உலகங்கள் அடங்கியுள்ளன அவற்றுள் மக்கள் நல்வினை தீவினை காரணமாகப் புண்ணிய பாவங்களைப் பெற்றுப் பிறரால் மிகவும் போற்றப்பட்டும் தாழ்த்தப்பட்டும் தேவர்களும் நரகர்களுமாகின்றனர் என்று மெய்யறிஞர்கள் கூறுவதாலு மறிக. இக்கருத்தே வள்ளுவப் பெருந்தகையார்க்கும் ஆகும். **விசும்புளார்** என்பது **வானிலுறையுந் தேவர்** என்பதாகும்.

### 5. இந்திரன் சாபம் பெற்ற கதை

பிரமனின் மானச மகளாகத் தோன்றினுள் அகலிகை. அவளது அழகில் விருப்பங் கொண்ட இந்திரன் முதலிய பல தேவர்கள் அவளை மணங்கொள்ள விரும்பினர். அதனுல் உலகத்தைச் சுற்றி வருபவர்களுள் முதன்மையாக வருபவனுக்கே அவளை மணம் செய்து கொடுப்பதாகப் பிரமன் தெரிவித்து விட்டான். அப்போது அவளை விரும்பிய தேவர்கள் பந்தயத்தி லீடுபட்டு, உலகைச் சுற்றிவர விரைந்தனர். மண்ணுலகிலிருந்த

கௌதம முனிவரை நாரதர் அழைத்துவந்து தேவ வுலகில் கன்றை யீனுகின்ற காமதேனுவென்னும் பசுவைச் சுற்றச் செய்தார். அந்தச் செயல் உலகத்தைச் சுற்றிய பலனைத் தருவ தாதலின் பிரமன் தன் மகளைக் கவுதமர்க்கு மனைவியாக்கினன். அதை யறிந்த இந்திரன் அவள்மீதுள்ள ஆசையை அடக்க முடியாமையால் கவுதம முனிவரின் இருப்பிடம் சென்று நள் ளிரவில் விடியற்காலையில் கூவும் கோழிபோல் கூவிக் கவுத மரைத் தவஞ் செய்யக் கானகம் போக்கினன். அவர் போன பின்பு அவரதுரு தாங்கி யுட்புகுந்து, அவளுடன் இருந்தனன். வனஞ்சென்ற முனிவர் தம் ஏமாற்ற முணர்ந்து குடிசைவந்து சேர்ந்தனர். தமது கள்ளத்தனம் வெளிப்படவே இந்திரன் பூசை வடிவந் தாங்கி, மோரைக்குள் புகுந்தோடப் பார்த்தான். வெகுண்ட முனிவர், அவன் வெட்கப்படும்படி விரும்பிய குறி உடல் முழுக்க விளங்கும்படி சபித்தனர். தமது பத்தினி அக லிகையையும் கல்லாகுமாறு சபித்தனர்.

**இலக்கணம்:** ஐந்தும் என்பதிலுள்ள முற்றும்மையும் ஆற்றல் என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையும் விகாரத்தால் தொக்கன. இந்திரனே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றேகாரம்; விசும்பு—இடப்பெயர்; உள்ளார்—வினையாலணையும் பெயர்; ஆற்றல்—தொழிற்பெயர், ஆகுபெயராய் வலிமையை யுணர்த்தி யது. கோமான்—மான் விகுதி பெற்ற பெயர்ச்சொல்; சாலும்— செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று.

**மேற்கோள்:**

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவி னெருஞ்சில் முட்பாயு
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியி னெருஞ்சின்முட் பாயகி லாவே. —(திருமந்திரம்)

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
தற்றோ ருறுவ தறிகென் றருளி.—(மணிமேகலை)

## செய்யுள் : 6 பெரியார் சிறியார் இயல்பு கூறல்

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

**ப-ரை:** செயற்கு அரிய-செய்வதற்கு அருமையானவை களை, செய்வார் – செய்பவரே, பெரியர் – (மக்களுக்குள்ளே) பெருமை யுடையவராவர், செயற்கு அரிய-செய்வதற்கு அருமை யானவைகளை, செய்கலாதார் – செய்யமாட்டாதார், சிறியர்–சிறுமையுடையவராவர்.

**பொ–ரை:** செய்வதற்கு அருமையானவைகளைச் செய்பவரே மக்களுக்குள்ளே பெருமையுடையவராவர். செய்வதற்கு அருமையானவைகளைச் செய்யமாட்டாதார் சிறுமையுடையவராவர்.

**க–ரை:** அருமையான செயல்களையுடையவரே பெரியோர். அது இல்லாதவரே சிறியவர்.

**விளக்கம்:** 1. இச் செய்யுள் நீத்தார் வாழ்த்து அதிகாரத்தி லடங்கி யிருத்தலால் **செய்வார்** என்பதற்குச் செய்பவரான நீத்தார் எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

2. பெரிய ராவாரும் சிறியராவாரும் வயதினுலும் வடிவத்தினுலும் அல்ல அறிவினுலவ் வேறுபா டுளதென்பார் **செயற்கரிய செய்வாரென்றும் செயற்கரிய செய்கலாதார்** என்றும் விளக்கினர்.

3. துறவி இல்லறத்திலிருந்து வந்தவனுதலின் அவ்வில்லறக் கடமைகளை மிகுதியாகப் பெற்றுள்ள உலகத்துக்குத் தன்னை விளக்கப் பல சன்மார்க்க நெறிகளை ஓதுவதும், பல அருஞ் செயல்களைச் செய்வதுமாக இருக்கவேண்டுமே யொழிய சும்மா சோம்பியிருத்தல் கூடாதென்பார் **செயற்கரிய செய்வார் பெரியர்** என்ருர்.

4. முந்தின குறள், '**ஐந்தவித்தான் ஆற்றல்**' என்றதனுலும் வருங்குறள், '**சுவையொளி யூருேசை நாற்றமென் றைந்தின்–வகைதெரிவான் கட்டே** வுலகு' என்பதனுலும்

செயற்கரிய காரியமென்றல் தன்னிடத்திலிருந்து தோன்றிய உலகம் வேருயில்லாமல் தாஞயிருப்பதால் தான் கவலையின்றி வாழ—அச்சமின்றி வாழப் பரோபகாரமாய் உலகத்துக்குச் செய்ய வேண்டுவனவாகிய மகிழ்ச்சி தருஞ் செயல்களாகும். அவை உணவு, உடை, இடம் வாகனம் முதலியன. தனக்கும் அவை வேண்டுவனவே யாதலா லாசை மிகுந்து அதனல் தீவினைகளைப் பெருக்கி வாழும் தன்னலப்பற்றைத் தோன்ற விடாதபடி ஐந்தவித்து வாழும் செயலாகும்.

நிலத்தைப் பயன்படுத்தி விதையிட்டுக் கதிரொன்று மரக்கால் நெல் விளையவும், கனி தரும், பூ தரும், இலை தருந் தாவரங்களைப் பெருக்கவும், நூதன பொறிகளையும் எருவையுங் கண்டுபிடித்த லும், பருத்தி, பட்டு, மயிர் முதலிய பொருள்களால் தேவைக் கதிகமாகவே கிடைக்குமளவில் இன்றியமையாத முறைகளைக் கண்டு கூறுதலும், வெய்யிலாலும், பனியாலும், மழையாலும் தீமையின்றி வாழ இட வசதிகளை நூதன முறையி லளித்தலும், ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குப் பொருள்களை யெடுத்துச் செல்லவும் குடிவளப் பெருக்கால் தான் செல்லவும் காலத்துக் கேற்ப விரைந்து செல்லவும், நூதன வாகனப் பொறிகளை விதம் விதமாய்க் காணுதலும், இன்னும் வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் பொருள்களாய தற்போதுள்ள மின் விளக்கு, திரைப்படம், வாஞெலி, ஒலிபெருக்கி, கம்பியில்லாத் தந்தி, பேசுங் கருவி, வாழ்க்கைக்குதவும் பொறிகள், உடல் பிணி போக்கும் மருந்து முறைகள் இவைபோன்ற பொருள்களையுங் கண்டு அவைகளை யறிதற்குரிய கலைகளையு மொழுக்க நூற்களையு மவ்வப்போது அளித்தலுமாகிய இப் பணிகளைச் செய்துவருவதும் செயற்கரிய வைகளாகும். இச் செயலால் நாட்டுச் சேவையும் மொழிச் சேவையும் வளர்ச்சியடையுமென்பதில் ஐயமின்று. இதை யுள்ளத்தில் கொண்டுதான் வள்ளுவர் பின்ஞேரிடத்தில், ‘ஈதல் இசைபட வாழ்தலல்லது ஊதியமில்லை உயிர்க்’ கென்றும் ‘வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்’ என்றும் பொதுவாகக் கூறியுள்ளார். கண்டுகொள்க.

மேற்கூறிய பிறநல செயலுக் கிடையூரு யிருக்குந் தன்னலச் செயலான காம குரோத மோக மத மாச்சரியங்கள் தன்னிடத்துத் தோன்ருதவாறும், உள்ளத்தை விருப்பப்படி பொறிகளின் வழியாய்ப் புலன்கள்மாட்டுச் செல்லாதவாறும் அடக்கிச் செலுத்துவதே தனக்குச் செய்வதாகும். மனத்தை யடக்குவதோ மனம் அடங்குவதோ முடியாததாகும். அஃது சுழுத்தியிலடங்கி யிருந்தாலும் விழிப்பிலுஞ் சொப்பனத்திலுந் தன் நினைவை யாற்றிக்கொண்டே யிருத்தலால், உயிருடலில் உள்ளவரையில் வேலை செய்துகொண்டிருக்கிறது. அடக்க முடியாமையினுல்தான் ஆன்ருேர்கள் அதற்குக் கல்லையும், இரும்பையும், குரங்கையும், பேயையும் உதாரணங் கொடுத்து வெறுத்து, 'மனமே, உனக்கு நஞ்சென்ற பெயர்த் தகுதியா யிருக்க, நெஞ்சென்று பெயர் வைத்து வழங்குகிருர்களே என்னே!' என்று கூறியுள்ளார்கள். ஆதலால் தீமையிலா வழி யெண்ணுவதே மனத்தை யடக்குவதாம்.

இங்ஙனம் பொருளைப் பொருந்தக் கூருது நாட்டுக்குந் தனக்குங் கேட்டைத் தருந் தன்னலச் செயலான மோட்சத்தை விரும்பி, ஆசையற்றுச் சிந்தையை யடக்கியே சும்மா யிருக்க வேண்டுமென்று சிந்தனையின்றிக் கூறி வருகின்றனர். இவர்கள் கூற்ருல் அரசியல் முதலிய வியாபாரங்களின்றி விரைவில் உலகம் தன் முடிவை யெய்திவிடுமாதலின் இஃது வள்ளுவர் கருத்தாகாது; அறிக.

5. பெரியர் சிறியர் என்று ஒன்றுக்கொன்று மாறுபட்ட சொற்கள் சீரில் அடுத்து வந்திருப்பதால் சீர் முரண்தொடை.

**இலக்கணம்:** செயற்கு-தொழிற்பெயர்; அரிய-குறிப்பு வினையாலணையும் பெயர்; பெரியர் × சிறியர் – செய்வார் × செய்கலாதார்; செய்வார்-தெரிநிலை வினையாலணையும் பெயர், தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கது. பெரியர் சிறியர்-குறிப்பு வினைமுற்றுக்கள்.

## செய்யுள் : 7 உலகம் உயர்ந்தோர் மாட்டு என்றல்

**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

**ப-ரை :** உலகு-(இந்த) உலக இயலானது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று-உண்ணல் பார்த்தல் தொடல் கேட்டல் முகர்தல் என்று சொல்லப்பட்ட, ஐந்தின் வகை-ஐந்து புலன்களினுடைய கூறுபாடுகளை, தெரிவான் கட்டே-அறிபவனிடத்ததே.

**பொ-ரை :** இந்த உலக இயலானது உண்ணல், பார்த்தல், தொடல், கேட்டல், முகர்தல் என்று சொல்லப்பட்ட ஐந்து புலன்களினுடைய கூறுபாடுகளை அறிபவனிடத்ததே.

**க-ரை:** ஐம்புலன்களையும் அறிந்த துறவிகளிடத்துத்தான் இவ்வுலகம் அமைந்துள்ளது.

**விளக்கம் :** 1. உலகு என்பது தனித்ததோர் பொருளல்ல என்பதை முன்னமே கூறியுள்ளனம். காலதேச வஸ்துக்களைப் பெற்றுப் புலன்களுக்கு விடயமா யிருப்பதாகிய உலகியலை ஈண்டு உலகமென்றார்.

2. பிரக்ஞானம் பிரமமென்னும் இருக்குவேதத்தின்படி அறிவாகிய பிரமம் அபின்னமான அறியாமை யென்னுஞ் சக்தியால் உடல்தோறும் புகுந்து ஜீவனாய் அந்தக்கரணத்துக்கு இருப்பிடமாகிறது. அந்தக்கரணமாகிய மனம் ஜீவனா லறியப்பட்டு, இந்திரியங்கட்கு இருப்பிடமா யிருக்கிறது. தொழி லிந்திரியங்களாகிய வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தங்களும் ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவிகளுமான இவைகள் மனத்தால் அறியப்பட்டு விடயத்துக்கு இருப்பிடமா யிருக்கின்றன. விடயமோ பொறிகளின் தொழிலாகிய தொடல், பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல்களால் (தன் மாத்திரைகளால்) தனித்தும், மொத்தமாகவும் (வியட்டி சமட்டிகளாகவும்) அறியப்படும் அவத்தைகளோடு கூடிய சத்துச்சித்தாநந்த நாமரூப பேதங்களையுடைய விண், காற்று, தீ, நீர், மண் என்னும் பொருட்களாகும்.

இவ்வாறுன புறப்பொருட்களை ஆயுமிடத்து அவை தம் மிடத்துள்ளிருக்கும் அகப்பொருளான பிரமத்தோடு கலந்திருத் தலைக் காணலாம். கண்டக்கால் உலகமும் தானும் நாம ரூபத் தால் வேறுபட்டிருந்தாலும் அறிவால்-(உயிரால்) ஒன்றுயிருக்கும் உணர்ச்சி வரும். வருவதால் தன் பொறுப்புணர்ந்து அருளால் உலகியலை நடத்தும் ஆதலின், '**ஐந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு**' என்று கூறினர். இவை யாவையு மடக்கித்தான் தொல் காப்பியர், '**உலக மென்பது உயர்ந்தோர் மாட்டு**' என்று இலக்கணங் கூறினர்.

3. **வகை தெரிதலாவது** ஓரறிவு முதலாறறிவுப் பொருள் களையும் பிறவற்றையும் ஆராயும்போது மண்ணை நாற்றத்தா லும், நீரைக் குளிர்ச்சியாலும், நெருப்பை வெப்பத்தாலும், காற்றைப் பரிசத்தாலும், வெளியைச் சத்தத்தாலும் மெய், வாய், கண், மூக்கு, செவிகளைக் கொண்டு உள்ளன வென்று நிச்ச யிக்கலாம். விரிக்கிற் பெருகுமாதலின் இவற்றின் முழுவிளக் கத்தை ஆன்றோர் நூற்களிற் கண்டு கொள்க.

**இலக்கணம்:** ஐந்தின்-எண்ணுகு பெயர்; தெரிவான்- வினையாலணையும் பெயர்(துறவி); உலகு-இடவாகுபெயர்; கட்டே- வினைமுற்று; ஏகாரம்-தேற்றப் பொருளில் வந்த இடைச்சொல்; ஐந்தின் வகை-ஆறன்றெகை நிலைத்தொடர்; எண்ணும்மைகள் மறைந்து வந்தன.

**மேற்கோள்:**

அவ தற்கு மழிவதற் கும்மவர்
மேவ நிற்கும் விதியுமென் றுவினி
யாவ தெப்பொரு ளிம்மையு மும்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சேர்த்ததே.

(இராமாயணம்)

## செய்யுள் : 8 துறந்தார் பெருமை கூறல்

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

**ப-ரை :** *நிறைமொழி - வல்லமை நிறைந்த சொற்களை யுடைய, மாந்தர்-நீத்தாரது, பெருமை-மதிப்பை, நிலத்து-இந்த உலகத்தில், மறைமொழி-(அவர்களால் ஆய்ந்து எழுதப்பட்டு வெளிவந்துள்ள) நூல்கள், காட்டிவிடும்-கண்கூடாகத் தெரிவித்துவிடும்.*

**பொ-ரை :** *வல்லமை நிறைந்த சொற்களையுடைய நீத்தாரது மதிப்பை இந்த உலகத்தில் அவர்களால் ஆய்ந்து எழுதப் பட்டு வெளிவந்துள்ள நூற்கள், கண்கூடாகத் தெரிவித்துவிடும்.*

**க-ரை :** *துறந்தார் பெருமைக்கு அவர்கள் எழுதிய நூல் களே சாட்சியாகும்.*

**விளக்கம் :** *1. தாம் கற்றதையும் கேட்டதையும் சிந்தித்துத் தெளிந்தனுபவித்த மொழியாதலின் கேட்டார்க்குந் தமக்களித்த பயனையே யளிக்கும் ஆற்றல் நிறைந்த மொழியென்பார்* " **நிறைமொழி** " *என்றார். நிறைமொழி மாந்தர் என்றது துறந்த ஆடவர் பெண்டிர் இருபாலாரையுங் கொள்க, அறிவு இருவர்க்கும் பொது ஆதலினுல்.*

*2. திருவள்ளுவர் தம்மை நூலாலும், ஜேம்ஸ் மார்க்கோனி ரேடியோ என்னும் வானொலியாலுங் கம்பியிலாத் தந்தியாலும், பிட்மென் சுருக்கெழுத்தாலும், காக்ஸ்டன் அச்சியந்திரத்தாலுங் கப்பலாலும், ரைட் சகோதரர் ஆகாய விமானத்தாலும் மற்றவர் மற்றைய பொருள்களாலுந் தங்களை விளக்கி உலகப் புகழையும் கொண்டாற் போன்று அருஞ்செயலாற்றி வரும் மதிப்பையே* **பெருமை** *யென்று கூறினர்.*

*3. அறிவும் பண்பும் பெற்ற மக்களாற்றிய அருஞ்செயல் காரணமாகப் பற்பல பொருட்களைப் பொருட்காட்சி சாலையைப் போலத் தன்னிடங்கொண்டு அவர்கள் பெருமை தோன்ற நிற்ற லின் உலகம் சாட்சியாயிற்று என்பார்,* **நிலத்து** *என்றுங்* **காட்டி**

**விடும்** என்றுங் கூறினர். இஃது அளவைகளுள் **அனுமான அளவையாகும்.**

4. மறைமொழி என்றது **நூல்.** பொருளை எழுத்தாலும் சொல்லாலும் மறைத்திருந்து படித்தார்க்கு வெளிப்படுத்துவதால் நாலுக்கு அப்பெயர் வழங்குகின்றது போலும். துறவிகள் அருஞ் செயலால் தாங் கண்ட பொருளைப் பிறரும் செய்து பெருமை யடையும்படி தம்மனுபவ இலட்சியத்தைத் தெளிவாக வெழுதி வெளியிட்டுள்ள கற்பனையற்ற உண்மை நூல்களே மறைமொழி யெனப்பட்டன. இஃது ஆறு அளவைகளுள் ஒன்ருன **உரை யளவை** யாகும்.

**இலக்கணம்:** நிறை மொழி—வினைத் தொகை; மாந்தர்—இருபாற் பொதுப் பெயர்; பெருமை—பண்புப் பெயர்; மறை மொழி—வினைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யாய் நூலையுணர்த்தியது; காட்டிவிடும்—வினைமுற்று; மாந்தர் பெருமை—ஆரும் வேற்றுமைத் தொகை; நிலத்து மறைமொழி—ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

**மேற்கோள்:**

துறவே யறங்களெவற்றினுக்கும் பெரிதாம்
விடையூர் தோன்றலுக்கும்
துறவே யுவகை வரச்செய்யுந் துறவே
யமன்மா லுலகளிக்கும்
துறவே யீசனிடத் திருத்து மெவரு
மேலாச் சொல்லுவதும்
துறவே யாமென் றெழுந்துநின்று சொற்ருன்
சைவத் துருவாசன்

(காஞ்சி புராணம்)

## செய்யுள் : 9 துறந்தாரது சிறுமை கூறல்

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

**ப-ரை :** குணம் என்னும்-(மெய்யறிவு, பரநலம், அருள் முதலிய) நற்குணம் என்று சொல்லப்பட்ட, குன்று-மலையின் மேல், ஏறிநின்றார்-ஏறி நிற்கும் துறவிகள், வெகுளி-கோபத்தை, கணமேயும்-நொடிப் பொழுதானாலும், காத்தல் அரிது-(தம் மிடம்) தாங்குதல் இல்லை. (தாங்கமாட்டார்கள்.)

**பொ-ரை :** மெய்யறிவு, பரநலம், அருள் முதலிய நற்குண மென்று சொல்லப்பட்ட மலையின்மேல் ஏறிநிற்கும் துறவிகள், கோபத்தை நொடிப்பொழுதானாலும் தாங்குவதில்லை.

**க-ரை :** துறவிகள் எப்போதுங் கோபங் கொள்ளுதல் கூடாது.

**விளக்கம் :** 1. இளமைதொட்டே தம் பொறிகளை யடக்கித் தம் மெய்யறிவாலும் அருளாலும் பரநலத்தைச் செய்து பெற்ற குணம் மலைபோல் துளக்கமும் உயர்வும் பெருமையும் உறுதியு முடைய தென்பார், **குன்றாக** உருவகஞ் செய்தார்.

2. மலைமே விருப்பவரை மலையடிவாரத்தில் உள்ளவர் சென்றடைதல் கூடாமை யல்லவா? அது போன்று உயர்ந்த குணத்தைத் தாழ்ந்த குணம் பற்றாது என்பார், '**குன்றேறி நின்றார் வெகுளி காத்தல் அரிது**' என்றார்.

3. அங்ஙனம் வெகுளி யடைந்தவர் யடைந்த வப்போதே நற்குணத்தை யிழப்பதோடு தீமைக்குட்பட்டும் வருந்துவர் என்பதை நுட்பத்தால், '**கணமேயும் காத்தல் அரிது**' என்ற தொடரால் விளக்கியுள்ளார் ஆசிரியர்.

4. இக்குறளுக்கு ஒழுக்கங் கெட்ட துறவி பெருமையை யிழப்பான் எனப் பொருள் கொள்ளாது, 'முனிவர்க்குக் கோபம் வராது; வந்தால் நொடியளவே நிற்கும். நின்றது அந்த அளவேனும் அக்கோபத்தைக் கோபிக்கப்பட்டவர் தாங்குவதற்கு முடியாது' என்று மாறு பொருள் கொண்டுள்ளனர் உரையெழுதியுள்ள சில உரையாசிரியர்கள். அஃது பொருந்தாது.

5. அரிது ஈண்டு இன்மைப் பொருளில் வந்தது.

6. குணமென்னுங் குன்று என்றதால் அத்தொடர் **உருவக அணி.**

**இலக்கணம் :** என்னும்-பெயரெச்சம்; ஏறி-வினையெச்சம்; நின்றார்-வினையாலணையும் பெயர்; வெகுளி-தொழிற் பெயர்; ஏயும்-வினை யெச்சம்; கணம் என்பது க்ஷணமென்னும் வடமொழித்திரிபு; காத்தல்-தொழிற்பெயர்; அரிது-குறிப்பு வினை முற்று.

## செய்யுள் : 10 துறந்தார்க்கு வேறு பெயர் கூறல்

**அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்.**

**ப-ரை :** எவ்வுயிர்க்கும்-உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும், செம்தண்மை-கருணையை, பூண்டு-செய்து, ஒழுகலான்-நடப்பதனுல், அறவோர்-துறவற நெறியில் நிற்பவரே, அந்தணர் என்போர்-அந்தணர் என்று அழைக்கப்படுபவர்.

**பொ-ரை :** உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்துங் கருணையைச் செய்து நடப்பதனுல் துறவற நெறியில் நிற்பவரே அந்தணர் என்று அழைக்கப்படுபவர்.

**க-ரை :** தம்முயிர்போல் எவ்வுயிரிடத்தும் கருணையைச் செய்வதால் துறவிகளே அந்தணர்களாவார்கள்.

**விளக்கம் :** 1. உலகில் அமைந்த ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுமுள்ள பொருள்களெல்லாம் உடலான் மாறுபட்டு, உயிரான் ஒற்றுமைப்பட்டிருக்கும் அவ்வான்ம நேய ஒருமைப்பாடு தோன்ற **'எவ்வுயிர்க்கும்'** என்று கூறினர்.

2. மனைவி மக்களிடம் வைக்குங் குடும்ப **தயை** விரிந்து மனித சமுதாயத்தில் வைக்குந் தயையானு லதுதான் **ஜீவ தயை**யாய் அன்பாகின்றது. அதனை வள்ளுவர் **தண்மை** என்கிறார்.

சமுதாயத்தால் ஒற்றுமைப்பட்ட அன்பு விரிந்து தன்னுயிரின் கூறுகளே யனைத்துடலினும் புகுந்துள வென்ற வுண்மை யுணர்ந்து, அவ்வுயிர் வாடாதிருக்கச் செலுத்துங் கருணைதான் ஆன்மநேய வொருமைப்பாடாய் **அருள்** அல்லது **கடவுள் தயை** யாகின்றது. அதனைத்தான் வள்ளுவர் **செந்தண்மை** என்றுங் கூறுகிறார்.

3. ஓரறிவு முதல் ஐயறிவுவரையிலுள்ள உயிர்கள் தம்மியல்பிலேயே நடுநிலையோடு கூடிய அருளைப் பெற்றுள்ளன. அவைகளைப்போலவே அவ்வியல்பில் வந்த மனிதனும் நடுநிலையான அவ் வருளைப் பெறுதல் இன்றியமையாது என்பார், '**பூண்டு**' என்றும் '**ஒழுகுதல்**' என்றுங் கூறினர்.

4. தம்முயிர்போல் எவ்வுயிரையுங் கருதி, அவற்றிற்கு இடையூறு வாராது காப்பாற்றுதலை யறமாகக்கொண்டு செயலாற்றுதல் காரணமாகவே துறவோரைச் சிறப்பாக **அறவோர்** என்று குறிப்பிட்டார். (அறம் = கடமை;) **எவ்வுயிர்** என்பதில் மனித உயிருமடங்கியது.

5. அந்தணர் அம் + தண்ணர் = என்னும் இருசொற்கள் சேர்ந்து ஒரு சொல்லாய் நிற்கிறது. அழகிய கருணை உடையவர் என்பது அத்தொடர்க்குப் பொருள். அதனால் அச்செயலாற்றுந் துறவிகளுக்குக் காரணப்பெயராய் வழங்கி வந்தது என்பார் '**என்போர்**' என்ற சொல்லால் குறிப்பிட்டார். தற்போது இச்சொல் தவருகப் பிராமணர்க்கு வழங்கப்பட்டு வருகிறது.

**இலக்கணம்:** அந்தணர், அறவோர்-குறிப்பு வினையாலணையும் பெயர்கள்; அறவோரே என்பதிலுள்ள ஏகாரம் விகாரத்தால் தொக்கது; மற்று-அசை; எ + உயிர் = எவ்வுயிர், எ-புறவினு; செம்மை + தண்மை = செந்தண்மை - பண்புத் தொகை நிலைத் தொடர்; பூண்டு-வினையெச்சம்; ஒழுகலான் - தொழிற் பெயர், மூன்றும் வேற்றுமை.

# நீத்தார் வாழ்த்து

(1) முன்னுரை (2) நீத்தார் யார்?
(3) அவர் செய்யவேண்டுவன (4) அவர் பெருமையும் முடிபும்

**உ**லகம் வேறு நீத்தார் வேறல்லர். உலகத்தோடு நெருங்கிய உறவிருப்பதால் அவர்களைப் பற்றி நன்கு அறிய வேண்டியது நம்முடைய கடமையாகும். அவர் வழியைப் பின் பற்றலும் நமது பொறுப்பு மாகும்.

நீத்தா ரென்போர் இல்லறத்தை யின்புடனாற்றி யவ்வில்வி னவா துறந்து பரநலத் தொண்டை உடல் பொருளாவி மூன்றாலும் செய்து வருபவர். இத் துறவிகளை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். அவர் வாழ்வில் தம் நிலை யறிந்து இல்லாளைக் கொள்ளாது பற்றை அல்லது அவாவை துறந்தவர், இல்லாளோடிருந்து அவாவினைத் துறந்தவர், இல்லா ளிறந்தபின் அவாவினைத் துறந்தவர் என்பவராவர். இம் முத்திறத்தவரும் நாட்டின் நலத்துக்கு நல்ல பொறுப்பையுடையவர். தற்போது கோத்திரஞ் சொல்பவர் யாவரும் தங்கோத்திரத்துத் தலைவர் மனையாளொடு வாழ்ந்தவ ரென்பதை யறிந்து விட்டால், துறந்தாரும் மனையாளொடிருந்தும் வாழ்ந்தாரென்பதைக் கொள்வதில் ஐயமில்லாதவராவர்.

தங்களையுந் தங்கள் குடியையு முணராதவர்தாம் தம் மனையாளை மாயையாகக் கொண்டு நீங்கியும் பொறுப்பற்று வாழ்வர். அவர்களைத் துறந்தா ரென்றே கொள்ளாது தம் வாணாளை வீணாளாக்கி ஏய்க்கும்-ஏய்த்துப் பிழைக்கும் பாவிகளென்றே கொள்ளல் வேண்டும். மேலுமவர்கள் தங்களைப் பாழாக்கிக் கொள்வதோடு நில்லாது நாட்டின் நலனைக் கொல்வதால் கொலைக் குற்றத்துக்கு மாளானவர்களென்பதை மறக்கலாகாது. இல் துறவு அறுபது வயதுக்குமேல் **"ஆங்கமல நீரது போல் பேசார் பிறர்க்கு"** என்பதுபோலத் தானே வருவதால் இல்லறத்தை ஒழுங்காக வாற்றி, அவ்வில்லில் இருந்தே பற்றற்ற பரோபகாரத்தால் நாட்டுக்கு நலன் செய்தற் கூடும். மனையாளை யிழந்தவர் மீண்டு மறுமனை கொண்டால் செம்மையினின்றே மேற்கூறியாங்கு

பெறுவரென்பதுந் திண்ணம். பருவங் கடந்து மறுமணங் கொள்ளுதல் தம் வாழ்க்கைக்குத் தீமையைப் பயக்குமென்பதை மறத்தலாகாது.

மேற்கூறிய முத்திறத் துறவிகளும் சோம்பியிராது தம் பொறுப்பறிந்து அருளுடையவராய் நாட்டுக்கு நலம் பல ஆற்ற வேண்டும். அங்ஙனமாற்றியவரை நாடு பாராட்டித் தொழுமென்பது காரணமாக வள்ளுவர் தம்நூலில் நீத்தாரை வணங்குதல் காண்க.

இல்லற ஒழுக்கங் கெடாது துறவாயினர் பெருமையையே அறிஞர்கள் தங்கள் நூல்களிற் புகழ்ந்து பாராட்டினர்கள்; பாராட்டுவார்கள். துறவு கொள்வோர் தம்மையும் தம்மாதாரத் தலைவனையும் அறியுங் கலையைக் கற்றிருத்தல் இன்றியமையாதது. அஃதில்லாத துறவிகள் பிச்சைக்காரராவார்கள். துறவுடையார் எப்போதும் கரண இந்திரிய ஒழுக்க முடையவராய் நாட்டின் ஒழுக்கத்தை வளர்த்துவரல் வேண்டும். தம்மை நாட்டினர் பாராட்டவும் தாம் புகழாகிய வீட்டைப் பெறவும் செய்வதற்கரிய செயல்களைச் செய்து கொண்டே யிருத்தல் வேண்டும். பொறிகளை யடக்கி மூச்சையொடுக்கிச் சும்மாயிருத்தல் தமக்கும் பிணியாவதோடு நாட்டுக்கும் பெரும் பிணியாகும். எப்போதும் பரோபகாரிக்குத் தமக்கு முன்னிருந்தபரோபகாரிகளைப் போற்றி வருவதே தியானமாகும். தம் புகழும் நாட்டின் நலமுங்கெட வருங் கோபத்தை அவர்கள் நஞ்சென்றறிந்து, நொடியளவும் கொள்ளுதல் கூடாது. நாட்டின் மகிழ்ச்சியை வளர்க்கும் அருமைச் செயல்களைச் செய்து பெரியோராய் வாழுங்கடமையை யென்றுங் கைவிடலாகாது.

அன்னணம் வாழும் அவர்களது ஆற்றல் அளவிடுதற்குரியதல்ல. கவுதமனென்னும் அறிஞன் இந்திரனிடம் ஆற்றிய செயலே போதிய சான்றாகும். ஆதலால், துறந்தார் பெருமைக்கு அளவு சொல்லமுடியாது. அங்ஙனங் கூறவேண்டுமாயின் உலகந் தோன்றியது முதல் இதுகாறும் இறந்தவரைக் கணக்கிடுதல் போன்றதாகும். கம்பர், திருமூலர், தாயுமானவர், நால்வர், இராம

லிங்கர், சங்கரர், சச்சிதானந்தர், முருகர், இராம கிருஷ்ணர், சாயிபாபா, அரவிந்தர், அரிநாதர், நாராயணர், சிவனார், பிரமர், காந்தியார் முதலிய அறிஞர்களும் ஜேம்ஸ்வாட், மார்க்கோனி, கிரகம்பெல், கியூரி அம்மை, ரைட் சகோதரர் முதலிய கலைஞர்களும் நம்மால் புகழப்பட்டு வருகின்றன றன்றோ? தன்னல அவாவினை நீத்து, அருள் வடிவாய் நின்றவரே அந்தணரென்றழைக்கப் படுதற்குரியராவர்.

---

# நூற்பாயிரம்

## வெண்பா

"செய்வன செய்தலுஞ் செய்யாத நீக்கலும்
மெய்யற மென்பர்காண் மேதையோர்—தூய்ய
வறத்துப்பா னூற்குமுன் பாயிரமாய் வைத்தா
ரறன்வலியு றுத்தலே யாய்ந்து."

# நூற்பாயிரம்

அதிகாரம் 4. அறன் வலியுறுத்தல்.

1. சிறப்பீனும் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

2. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

3. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

4. மனத்துக்கண் மாசில னாவ தனைத்தற
னாகுல நீர பிற.

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

6. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

9. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

10. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

# நூற்பாயிரம்

## அறத்துப்பால்

**அதிகாரம்: 4** **அறன்வலியுறுத்தல்**

**நூற்பாயிரம்:** முன்னர் கூறிய மூன்று அதிகாரங்களும் இடைக்காலத்தில் தகுதியுடைய ஒருவரால் புகுத்தப்பட்டமையின் இடைப்பாயிரமாயின. ஆசிரியர் வள்ளுவனார் தாமெழுதுந் திருக்குறள் நூலுக்குப் பாயிர மெழுதுகிறார். **'பாயிர மில்லது பனுவ லன்றே'** என்பதற் கேற்ப வள்ளுவனார் தம் நூற்குப் பாயிரமெழுதியதில் வியப்பொன்று மில்லை.

**'நூற்பாயிரம்'** என்னுந் தொடர் நூல்+பாயிரம் எனப் பிரிந்து நூற்குக்கூறிய பாயிரமென விரிந்து நிற்பதால் நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராயிற்று, நூல்=சுவடி; பாயிரம்=முன்னுரை. ஈண்டு நூலென்றது வள்ளுவர் இயற்றிய திருக்குறளென்பதாகும். ஈது மக்களாய்ப் பிறந்தார், இவ்வுலகத்தி லியற்றி யடையவேண்டிய நால்வகைப் பேறுகளுள் (புருஷார்த்தங்களில்) இறந்தபின் அடைவதாகிய விடுதலையை விடுத்து மற்ற முப்பேறுகளையும் (திரிவர்க்கங்களையும்) அனுபவத்தால் அருள்கூர்ந்து கூறியதாகும். ஆகவே மக்கள் வாழ்வில் தம்பேற்றை யனுபவிக்கும் வழிகளை வகுத்துக் கூறுவதால் இது நீதிநூலாய் (சட்டமாய்) தமிழ் மறை (வேதம் நூல்) யாயிற்று; சாதிமத பேதங்களின்றி நடுநிலையாய் நாட்டுமக்கட்கே யன்றி உலக மக்கட்குங் கூறலின் பொதுமறை யாயிற்று. இந் நூலின் சிறப்பை **'வள்ளுவரும் பொதுமறையும்'** என்ற கட்டுரையிற் காண்க. (பக்கம்-5) இஃது ஆயிரத்து முந்நூறு குறட்பாக்களையும் 133 அதிகாரங்களையும் யுடையதாயினும் **அறத்துப்பால், பொருட்பால், இன்பப்பால்** என்னும் மூன்று பெரும்பால்களை யுடையதாகும். அவற்றுள் அறத்துப்பாலை முன்னே கூறத் தொடங்கிய ஆசிரியர் அதற் கின்றியமையாததாய் நூற்கே பாயிரமாக (முன்னுரையாக) **அறன் வலியுறுத்தலைக்** கூறுகிறார்.

**அறத்துப்பால்:** இத்தொடர் அறத்தைக் கூறும் பால் என விரிதலால் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன் றொக்க தொகையாகும். **அறம்** என்னும் சொல் வேற்றுமை ஏற்க, அத்துச்சாரியைப் பெற்றது.

**அறம்** என்பது (வாழ்க்கையில் நன்மை தருவன, தீமை தருவனவென்று வரை) அறுத்துக் கூறிய விதி விலக்குகள் ஆகும். [அறு-பகுதி; அம்-தொழிற் பெயர் விகுதி; உகரக்கேடு சந்தி; இவற்றைப் பெற்று ஆகுபெயராய் விதி விலக்குகளை யுணர்த்தியதென்க.] எனவே விதித்தன செய்தலும், விலக்கின செய்யா தொழிதலும் அறமெனப் பட்டதென்க. அறம் ஒழுக்க மெனினுமாம். அது அகவொழுக்கம் புறவொழுக்க மிரண்டு மடங்க நின்றது. அறம், பொருளின்பங்கட்கு முதற் காரணமா யிருத்தலின் அதனை அவற்றிற்கு முற்கூறினா ரென்றறிக.

இயற்கை வாழ்வில் மக்கள் தன்னலப் பற்றாலும் பிறநலப் பற்றாலும் வாழுங் காரணத்தால் அவ்வறம் (அன்பறம்) இல்லற மென்றும் (அருளறம்) துறவறம் என்றும் இருகூறாய் விளங்கு கிறது. ஆரிய தருமத்திலுள்ள பிரமசரியன், வானப்பிரஸ்தன், மனையாளைத் துறந்தவனாகிய இவர்கள் மூவருந் துறவிகளே. சுருங்கச் சொன்னால் '**ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்-ஈசனோடாயினு மாசையறுமின்கள்**' என்று திருமூலர் சொல்லி யாங்குத் தன்னலப் பற்றோடு விளங்கும் குழந்தை முதல் கிழவன் வரை இல்லறமும், தன்னலப் பற்றற்ற குழந்தை முதல் கிழவர் வரை துறவறமுடையவரே என்பது நமது வள்ளுவப் பெருந் தகையார் கருத்து. இவ்விரு அறங்களையுந் தனித்தனி இயல்க ளாக வைத்து, அவற்றை யொன்றாக்கி, '**அறத்துப்பால்**' என ஒரு பெரும் பிரிவில் ஆசிரியர் கூறுகின்றார்.

**அறன் வலியுறுத்தல்:** இத்தொடரை அறன்+வலி+உறுத்தல் என மூன்று சொற்களாகக் கொள்ளின் அறத்தினது வலிமையை வற்புறுத்துதல் என்பது பொருளாகும். முதற்சந்தி ஆறன் தொகையாய் இரண்டாம் சந்தி இரண்டன் தொகையாய் நிற்கும். அறன்+வலியுறுத்தல் என இரு சொல்லாகக் கொண்

டால் அத்தொடர் அறத்தை யுறுதிப்படுத்துதல் என்பது பொருளாகும்; இரண்டன் தொகை. இவ்விருவகைக் கூற்றினும் முன்னதே சாலச் சிறப்புடைத்தாம். அறம் அறனெனவானது **மொழியிறுதிப் போலி.**

உயிரோடு தொடர்புடைய அறத்தை யிரண் டியல்களில் விளக்கவந்த ஆசிரியர் அது பொருளின்பங்களைவிடச் சிறந்து நிற்றலின் காரணத்தை வலியுறுத்தி யவ்விரண் டியல்களுக்குமுன் வைத்து வற்புறுத்துவதால் அறன் வலியுறுத்தல் பாயிர மாயிற் றென்க.

நன்மை தீமைகட்குப் பொதுவாயிருக்கும் அறமென்பதற்குக் கடமை என்பதும் பொருள். (அதாவது செய்யவேண்டியதைச் செய்தலும் விடவேண்டியதை விடுதலுமாகும்.) வடமொழியில் தருமம் என்பதும் ஆங்கிலத்தில் டூட்டி (Duty) என்பதும் ஒன்று. ஆனால் சிறப்பாக நன்செயலுக்கே தற்போது வழங்கப்பட்டு வருவதால் அதற்கு நல்வினை யென்றும் புண்ணியம் என்றும் பொருள் கூறலாம்.

நல்வினையின் பயன் புண்ணியம்; புண்ணியத்தின் பயன் புகழ். புகழே வீடுபேற்றின் அனுமானக் குறி யென்க.

## செய்யுள் : 1 அறத்தின் பயன்

**சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்(கு)**
**ஆக்க மெவனோ வுயிர்க்கு.**

**ப-ரை :** உயிர்க்கு—மக்கள் உயிர்க்கு, சிறப்பு ஈனும்—புகழை யுங் கொடுக்கும், செல்வமும் ஈனும்-(அப்புகழுக்குக் காரணமான) செல்வத்தையும் கொடுக்கும், (அதனால்) அறத்தின் ஊங்கு— (அறமென்னும்) கடமையைப் போல, ஆக்கம்—(வேறு) நல்வினை எவன்—யாது? (ஒன்றுமில்லை.)

**பொ—ரை :** மக்கள் உயிர்க்குப் புகழையுங் கொடுக்கும். அப் புகழுக்குக் காரணமான செல்வத்தையுங் கொடுக்கும். அதனால் அறமென்னுங் கடமையைப்போல வேறு நல்வினை யாது? ஒன்றுமில்லை.

**க—ரை :** அறம் தன்னையுடைய மக்கட்குப் புகழையுஞ் செல் வத்தையுங் கொடுக்கும்.

**விளக்கம் :** 1. '**பொரு ளிலார்க்கு இவ்வுலக மில்லை**' என்று கூறும் வள்ளுவர் வாக்குக்கும் '**திரு விளங்க சிவஞான சித்தியெல்லாம் விளங்க**' என்று கூறும் இராமலிங்கர் வாக்குக்கு மேற்ப, இம்மையில் அறிவு விளக்கத்துக்கு மூடல் வளர்ச்சிக்கு மவசியமாயிருக்கு முணவுக்கு மிக வாதாரமாயிருப்பது செல்வம். அச் செல்வத்தைச் செய்யுங் கடமையே தருமமென்பார் '**செல்வ மீனும்**' என்று கூறினார்.

2. செல்வத்தின் பயனீதலால் வரும்புகழாதலின் **புகழைச் சிறப்**பென்றார். மேலும் புகழ் என்பது பிறப்பினு லடையவேண் டிய பயனான **வீட்டின் குறி**. வீடென்பது இவ்வுடல் விடப்பட்டுப் புகழுடல் பெறுவது. [அதாவது அநித்திய துக்க பூதவுடல் நீங்கப் பெற்று நித்திய ஆனந்த புகழுடலைப் பெறுவது.] அச் சிறப்பையும் அறமே தருதலின் '**சிறப்பீனும்**' என்றார்.

இம்மையிலேயே புகழைப் பெற்று நிற்பது அடுத்துவரும் பிறப்பின்மையை (வீடு பேற்றை)க் காட்டுங் குறியளவை (அனு மானப் பிரமாணம்) ஆகும். உதாரணமாக செல்வந்தனைக்

கொடையாலும், கற்றவனை வாக்கு நயத்தாலும் நெருப்பைப் புகையாலும் அறிவதுபோலாம்.

3. இப்புகழை இம்மை மறுமை யிரிடத்திலும் பெறக்கூடு மாதலின் அதன் சிறப்புத்தோன்றச் செல்வத்துக்கு முன்வைத்துச் **சிறப்பீனு** மென்று கூறினர். சிறப்புக்குக் கொடையும், கொடைக் கருளும் அருளுக்குச் செல்வமும் வேண்டுமென்னுஞ் சம்பந்தந் தோன்றும்படி சிறப்பை முதலிலும் செல்வத்தை இரண்டா வதிலுமாக வைத்துக் கூறினரெனினு மொன்று.

4. மக்கள் தம் மெய்வருத்தக் கூலிபெற்றே வாழவேண்டு மென்னுங் கடமையை யுணர்த்துவார் **அற**மென்றும், சிறப்பும் செல்வமும் மேலுமேலுங் கொடுப்பதா லதனையே **ஆக்க** மென்று முணர்த்தின ரென்க.

5. அறத்தைப் போலச் சிறப்பையும் செல்வத்தையு மளிக்க வல்லது பக்தியுமல்ல வென்பார், **'அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ?'** என்று எதிர்மறைப் பொருள் வரக்கூறினர்.

சிறப்பீனும் என்பதற்கு இன்னணங் கூருது ஒரு சாரார் **வீடு பேற்றை** யருளுமென்று கூறிவிட்டு, அவ்வீட்டினை (மோட்சத்தை) வானிலுறையு மொரு கடவுளதிட மென்றும், அதில் நல் வினை.மிகுதியால் மக்கள் சென்று **முத்தர் நித்தர்களாய்** வாழ்கின் றன ரென்றும், ஆண்டுறுமவர்க் கிருளும் துக்கங்களும் பசிப்பிணி களுமில்லையென்றும் விளக்கியுள்ளனர். அந்தோ! அஃது சொல் லளவிலே (வாச்சியார்த்தத்தில்) நின்று கற்பனை யாகின்றதே யொழிய, பொருளளவில் (இலட்சியார்த்தத்தில்) நின்று நிச்சய மாக வில்லை என்பதை ஆய்ந்து கொள்க.

6. மக்க ளுயிரைத்தவிர மற்ற வுயிர்கள் யாவுந் தம் முடனிலைக் கேற்ப இயல்பாகவே தங்கடனைப் பிறர்க்குச் செய்து வருகின்றன வெனினும் அவை சிறப்புஞ் செல்வமு மடைவதற் குரியன வல்ல. அவற்றை யடைதற்குரிய உயிர் மக்களுயிரே யாதலின் ஈண்டு **உயிரென்றது மக்களுயிரை** யென்க.

**இலக்கணம் :** சிறப்பு – தொழிற்பெயர் – ஆகு பெயராய் புகழை உணர்த்தியது; செல்வம்–காரணப் பெயர்; ஈனும்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ; ஊங்கு – உவமை யுருபு, இடைச் சொல் ; ஆக்கம்–தொழிலாகு பெயராய் நல்வினையை உணர்த்தியது ; எவன்–வினாக் குறிப்பு வினைமுற்று, எதிர்மறைப் பொருளில் வந்தது; ஓ–அசை; சிறப்பும் என்பதிலுள்ள எண் உம்மை விகாரத்தால் தொக்கது. சிறப்பீனும்–இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்; உயிர்க்கு – முற்றிய லுகரம்.

**மேற்கோள் :**

" தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
விருமையி னின்பமு மெளிதி னுக்குமா
லருமையில் வரும்பொரு ளாகு மன்னது
மொருமையி னோர்க்கலா லுணர்தற் கெண்ணுமோ.''

(கந்த புராணம்)

**செய்யுள் : 2** **இதுவுமது**

**அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை**
**மறத்தலி னூங்கில்லை கேடு.**

**ப–ரை :** அறத்தின் ஊங்கு–(ஒருவனுக்குத் தன்) கடமை யைக் காட்டிலும், ஆக்கமும் (மேன் மேலும் வளரும்) செல்வ மும், இல்லை–கிடையாது ; அதனை–அந்தக் கடமையை, மறத்த லின் ஊங்கு–செய்யாது விடுவதைக் காட்டிலும், கேடு–வறுமை யும், இல்லை கிடையாது.

**பொ–ரை :** ஒருவனுக்குத் தன் கடமையைக் காட்டிலும், மேன் மேல் வளரும் செல்வமுங் கிடையாது. அந்தக் கடமை யைச் செய்யாது விடுவதைக் காட்டிலும் வறுமையுங் கிடையாது.

CONNEMARA PUBLIC LIBRA

**க-ரை :** ஒருவன் அறத்தைச் செய்வதால் செல்வத்தையும், செய்யாது விட்டால் வறுமையையும் அடைவான்.

**விளக்கம் : 1. அறத்தினூஉங்கு ஆக்க** மென்றதனுல் நாடு நடைபெற எல்லாரும் (துறவியுள்பட) எல்லாக்கலைகளை யும் (64-கலைகளையும்) கற்றிருத்தல் வேண்டு மென்பதாயிற்று. ஒவ்வொருவருந் தத்தமைக் காப்பாற்றிக் கொள்ள உண்டி, உடை, இடம், மருந்து முதலியவைகளை யுழைப்பினுல் பெறுவதால், அவ்வுழைப்பே யவர்தமக்குச் செல்வமாயிற்றென்பார் அங்ஙனங் கூறினு ரெனினுமாம். '**தன் கையே தனக்குதவி**' என்பதும் '**பாடுபட்டுப் பணத்தைத் தேடி** ' என்பதும் '**முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்**' என்பதும் '**திரைகட லோடியுந் திரவியந் தேடு**' என்பது மதனை விளக்கும் பழமொழிகளாகும்.

2. ஆக்கத்துக்கும் அறத்துக்கு மிக நீக்க முடியாத நெருக்க முள தென்பதைக் காட்டவே **ஊங்கு** என்ற சொல்லை வைத்தார்.

3. கால தேச வஸ்துக்களை யுடைய நாட்டினிகழ்ச்சியை மக்களே மூலகாரணமாய் நின்று நடத்தி வருகின்றனர். அவர்களுள் ஒருவராயினுந் தம் செய்கடமையை நிறுத்தினுலவர் செல்வமிழந்து, உணவின்றி யுடல் தளர்ந்து, பொறி யடங்கி, மனமடங்கி, உயிர் நீப்பது திண்ணம் என்பார் **மறத்தலினூஉங்கு இல்லை கேடு**' என்று கூறினர்.

4. ஆசிரியர் ஈண்டு ஒருவர்க்குக் கூறினுரேனும் மக்கட் தொகுதியாய நாட்டின் ஆக்கக் கேடுகட்கு **அறமே** முக்கிய காரணமாதலின் அனைவர்க்குங் கொள்க.

5. முன் குறளில் அறத்தின் ஆக்கம் கூறியிருக்க மீண்டுங் கூறியது அதனைச் செய்ய மறுத்தால் வருங் கேட்டை உணர்த்துதற்காகும்.

**இலக்கணம் :** இல்லை-எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று; கேடு-முதனிலைத் திரிந்த தொழிற் பெயர்; **ஊங்கு**-இடைச்

சொல்; கேடு என்பதிலுள்ள உம்மை விகாரத்தால் தொக்கது. மறத்தல்-தொழிற் பெயர்; [அறம்×மறம் இவை மாறுபட்ட சொற்கள்.]

**மேற்கோள் :**

"அன்புறு மறத்தினு லடுக்கு மின்பமே
யின்பெனத் தக்கதா லேனை யின்பெலாந்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும்."

(விநாயக புராணம்)

## செய்யுள் 3 அறத்தை எங்கு எப்படிச் செய்தல்?

**ஒல்லும் வகையா னறவினை யோவாதே**
**செல்லும்வா யெல்லாஞ் செயல்.**

**ப-ரை :** அறவினை-நல்வினையை (கடமையை), செல்லும் வாய் எல்லாம்-போகுமிடத்தில் எல்லாம், ஒல்லும் வகையால்-கூடுமளவினுல், ஓவாது-நிறுத்தாமல், செயல்-(ஒருவன்) செய்யக் கடவன்.

**பொ-ரை :** நல்வினையைப் போகுமிடத்தில் எல்லாம் கூடு மளவினுல் நிறுத்தாமல் ஒருவன் செய்யக் கடவன்.

**க-ரை :** அறத்தைப் போகுமிடங்களில் முடிந்தளவில் ஒருவன் செய்யலாம்.

**விளக்கம் :** 1. அறவினைக்குச் செல்வம் வேண்டுமாயினும் அதுவொன்றே மூலகாரணமாகாது. **மனத்தாலும்,** வாக்காலும் **காயத்தாலும்** அறத்தை யாற்றலாம். எங்ஙனமெனில், உட்பகை யாய் நின்று கெடுப்பனவாகிய காமகுரோதாதிகட் கிடந்தராது நன்னெறியில் மனத்தைப் பழக்குவதே **மனத்தால்** செய்யுங்

கடமையாகும். தாங்கற்ற கல்வி யனுபவத்தைக் கல்லாத மாந்தர்க் கவ்வப்போ தினிய மொழியாற் பேசியும், ஓதியும் வருவது **வாக்கால்** செய்யுங் கடமையாகும். நாட்டின் சாலைகளைக்கல் போக்கி, முள்போக்கி, மலம்போக்கிச் சுத்தமாய் வைத்திருத்தலும், குழந்தைகட்கும், சிறுவர்க்கும், வயோதிகர்கட்கு மேற்படும் வழிதவறிச் செல்லுதல், அடிபடல், வாகனங்களி லகப்படல் முதலிய பல இடையூறுகளைப்போக்கச் சோம்பலின்றி யுதவி செய்து வருவதுந் **தேகத்தால்** செய்துவருங் கடமையாகும். இவையடங்கவும், பொருளைப் பெற்ற ஞான்று பொருளாலுதவுதலடங்கவும் '**ஒல்லும் வகையான்**' என்று கூறினர்.

2. முக்கரணச் செயல்களை யெப்போதுஞ் செய்துவரலாமாதலின் '**ஓவாது**' என்றும் அவை எல்லா நாடுகட்கும் பொதுவாய் நிற்றலின், **செல்லும்வா யெல்லா** மென்றும் விளக்கிக் கூறினர்.

3. இப்பாயிரமில்லறந் துறவறமிரண்டுக்கும் பொதுவாய் நிற்றலின், '**ஒல்லும் வகையான்**' என்பதற்கு இல்லறம் பொருளளவுக்கு ஏற்பவும், துறவறம் தேகநிலைக் கேற்பவும் செய்தல்வேண்டு மென்பதை யுணர்த்தவே கூறினர் என்று ஒரு சாரார் விளக்கங் கூறுவர். பொருளுந் தேகநிலையு மில்லறந் துறவறமாகிய இவ்விரண் டறங்கட்கு மின்றியமையாதவைகளே யென்றாகித்தறிபவர்கட் கவ்விளக்கம் பொருந்தாக் கூற்றாகும்.

**இலக்கணம்:** ஒல்லும், செல்லும்-பெயரெச்சங்கள்; ஓவாது எதிர்மறை வினையெச்சம்; எல்லாம்-மூவிடப் பொதுப் பெயர்; செயல்-தொழிற் பெயர்;

**செய்யுள் : 4** **அறத்தின் இயல்பு**

**மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

**ப-ரை :** மனத்துக்கண்-உள்ளத்தில், மாசு இலன்-குற்ற மில்லாதவனாய், அவது அனைத்தும்-செய்யப்படுவ தெல்லாம், அறன்-நல்வினையாகும், பிற-(உள்ளத்தில் குற்றம் வைத்துச் செய்யப்படும்) மற்ற நல்வினை யெல்லாம், ஆகுல நீர-துன்பந் தருவன வாகும்.

**பொ-ரை :** உள்ளத்திற் குற்ற மில்லாதவனாய்ச் செய்யப் படுவதெல்லாம் நல்வினையாகும்; மற்ற (உள்ளத்தில் குற்றம் வைத்துச் செய்யப்படும்) நல்வினை யெல்லாம் துன்பந் தருவன ஆகும்.

**க-ரை :** உள்ளத்தில் குற்றம் இல்லாமல் செய்வனயாவும் நல்வினையே. உள்ளத்தில் குற்றம் வைத்துச் செய்யும் நல்வினை யாவும் துன்பந் தருவன வாகும்.

**விளக்கம் :** 1. உலகத்திற் காணப்படும் பொருள்களை யறிவுக்கு இந்திரியங்களின் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வழி யாக வியற்றித் தருவதும் புலனாக்குவதும் மனம். இதன் செயல் எண்ணுவது. சாக்கிரதையிலுஞ் சொப்பனத்திலு மலைந்தியங்கிக் கொண்டே யிருப்பதால் **'சிந்தையை யடக்கியே சும்மா விருக் கின்ற திறமரிதுகாண்'** என்று தாயுமானவருங் கூறியுள்ளார். மனமே அறிவிற் கிருப்பிடமாய் நின்று ஜீவனுக்கு ஆக்க லழித் தல்களையும், இன்ப துன்பங்களையு முண்டாக்கிக் கொண்டிருப்ப தால் நன்மனத்தால் நற்செயலுந், தீமனத்தால் தீச்செயலும் உண்டாகின்றன. அத் தீச் செயலை யொழித்து நற் செயலே செய்யவேண்டு மென்பார் **மனத்துக்கண் மாசிலனாவது** என்று கூறினார்.

2. மனமது இல்லை யெனிற் சுகமது இல்லை யாதலினதுவே காரணமென்பார் **'அனைத்து'** என்றுங் கூறினார்.

3. பிற என்ற சொல் மற்ற நல்வினைக்கு நின்றது. மேலே மாசிலனாவது என்றதனா லிதற்கு **மாசுளனாவது** என்று வருவித் துப் பொருள் கூறினாம்.

4. நற்சிந்தை யில்லாமையால் நற்செய லில்லாமற் போகிறது. போகவே பழியும் பாவமுண்டாகி இம்மையில் உதவியின்றித் துன்பமேற்படும். ஆதலால் பிற '**ஆகுல நீர**' என்று கூறினர். ஆகுலம் = துன்பம்.

5. **மாசில னுவதென்ற** தொடர் சில பிரதிகளில், '**மாசில னுதல்**' என விருக்கிறது. இதற்குக் குற்றமில்லாதவ னுகுதலே யென்று சிலர் பொருள் கூறியுள்ளனர். மனத்திற் குற்றமில் லாமலிருத்தலே யறமானுற் செயல் நிகழ்ச்சிக்குப் பங்கமுண் டாகி, ஈதலு மிசைபட வாழ்தலுமான இல்லறந் துறவறங்க ளில்லாமற் போகும். அன்றியும், பக்குவப்பட்ட எண்ணத்தின் காரிய வடிவில்தான் அதவாவது செயலால்தான் நன்மை தீமைக ளுண்டாகிச் செய்தாரும் செயப்பட்டாரும் அனுபவிக்க முடியும். வெறுமெண்ணத்தா னன்மையுமில்லை; தீமையுமில்லை: உலக விருத்தியுமில்லை. அதனுல் குற்றமில்லாதவ னுதலென்ற பொருள் சிறப்புடையதல்ல.

மேலுமவர்கள் **பிற** என்ற சொல்லுக்குத் திரிகரணத்தில் மனத்தை முன்னே கூறியதால் சொல்லும் வேடமும் அதாவது வாக்கும் காயமு மெனப் பொருள் கொண்டு மனம் மாசடைந்த போது அதன் வழிவரும் சொல்லும், செயலும் பயனிலவென்றும் விளக்கங் கூறியுள்ளனர். இதற்கேற்பவே **ஆகுலம்** என்ற சொல் லுக்குங் கடவுள் பேர் கூறலும், நீறு பூசல் முதலியவற்றை யணிதலுமாகிய செயல்களைப் பெற்றிருந்தாலும் ஆரவாரத் தன்மையுடையனவெனப் பொருள் கொண்டனர். இஃது வலிந்து கொள்ளும் உரையேயன்றி வள்ளுவர் கருத்தல்ல. **பிற** என்ற தற்கு மனத்து மாசுவைத்துச் செய்யும் செயல்கள் என்று பொருள் கூறலும், **ஆகுலம்** என்றதற்குத் துன்பம் என்று பொருள் கூறலும் நேர்மையும் ஆசிரியர் கருத்துமாகும்.

**இலக்கணம்:** கண் – ஏழாம் வேற்றுமையுருபு; மனம்- சினைப்பெயர்; மாசிலன்–எதிர்மறை வினைமுற்று; ஆதல்–தொழிற் பெயர்; அறன்–மகரத்துக்கு னகரம் மொழியீற்றுப் போலி (எழுத்

துப்போலி); ஆகுலம்-பண்புப் பெயர்; நீர-குறிப்பு வினைமுற்று. பிற-இடைச்சொல்.

அனைத்து + அறன் = அனைத்தறன்; அறன் + ஆகுலம் = அறனாகுலம்.

## செய்யுள் : 5 அறத்தைக் கெடுப்பவை

**அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கு**
**மிழுக்கா வியன்ற தறம்.**

**ப-ரை :** அழுக்காறு-பொறாமையும், அவா-பேராசையும், வெகுளி-கோபமும், இன்னாச்சொல்-தீய மொழியும் (ஆகிய இவை) நான்கும்-நான்கு குணங்களையும், இழுக்கா இயன்றது-நீக்கிச் செய்யப்படுவது, அறம்-நல்வினையாம்.

**பொ-ரை :** பொறாமையும், பேராசையும், கோபமும், தீய மொழியுமாகிய இவை நான்கு குணங்களையும் நீக்கிச் செய்யப் படுவது நல்வினையாகும்.

**க-ரை :** நல்வினைக்குப் பொறாமையும் பேராசையுங் கோப முந் தீமொழியுந் தடைகளாகும். அவைகளை நீக்கியே நல்வினை செய்யவேண்டும்.

**விளக்கம் :** 1. **அறம்** என்பது நல்லறம் தீயறம் இரண் டிற்கும் பொதுவாயினும் பெரும்பாலும் நல்லறத்துக்கே பொருட் பட்டு நிற்கும்.

2. மேல் மனத்துக்கண் மாசிலனாதல் என்று கூறிய ஆசிரி யர் அம் **மாசினை யிக்குறளில் விளக்கினாராயிற்று.** மன மயக்கத் தால் மாசுக்கள் உண்டாகின்றன.

3. அறத்துக்குத் தடையாய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை நான்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய

குணங்களாம். எங்ஙனமெனின், ஒருவனிடம் செல்வம் சிறந்திருப்பதைக் கண்டவன் முதலி லவன்மாட்டுப் பொருமை கொள்வான். பிறகு அச் செல்வத்தைப் பெறப் பேரவா கொள்வான். அதனு லவன், அச் செல்வத்தைப் பிறரறியாவண்ணங் களவாடுகையில் உரியவன் கண்டு கைப்பற்றுங்கால் தப்புதற் கவனையுதறித் தள்ளிக் கோபங்கொள்வான். கொண்டபின் தீய சொற்களால் தன்னை மறைத்துக்கொள்வான் என்றறிக. செல்வத்திடமே யன்றிக் கல்வி, அதிகாரம், மரியாதை முதலியனவைகளிடத்திலு மிக்குணங்கள் நிகழுமென்க.

**இலக்கணம் :** அழுக்காறு, வெகுளி, அவா – தொழிற்பெயர்கள்; இன்னுச்சொல்–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நான்கு–எண்ணல் அளவையாகு பெயர்; இழுக்கா–செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் (உடன்பாடு); இயன்றது–ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று.

## செய்யுள் : 6 அறத்தை எப்போது செய்தல்

**அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றுத் துணை.**

**ப–ரை :** அன்று–(நாம் இப்போது சிறிய வயதுடையோமாதலின்) நமது முதுமையில், அறிவாம் என்னுது-செய்வோம் என்று எண்ணுமல், அறம்–நல்வினையை, செய்க–(ஒவ்வொருவரும் இளமையிலேயே) செய்யக்கடவர், (ஏனெனில்) அது–அந்த நல்வினை, பொன்றுங்கால்–உயிர் உடலைவிட்டு நீங்கும்போது, பொன்றுத் துணை–(அவ்வுயிர்க்கு) அழியாத உதவியாகும்.

**பொ–ரை :** நாம் இப்போது சிறிய வயதுடையோம் நமது முதுமையில் செய்வோமென்று எண்ணுமல் நல்வினையை ஒவ்வொருவரும் இளமையிலேயே செய்யக்கடவர். ஏனெனில், அந்த நல்வினை உயிர் உடலைவிட்டு நீங்கும்போது அவ்வுயிர்க்கு அழியாத உதவியாகும்.

**க—ரை:** உயிர்க்குத் துணையாயிருக்கும் நல்வினையை யொவ்வொருவரும் இளமையிலிருந்தே செய்யவேண்டும்.

**விளக்கம்:** *1.* அறம் **செல்லும் வாயெல்லாம் ஒல்லும் வகையால்** செய்து முடிப்பதாதலின், **' நாளுங் கிழமையும் நலிந்தோர்க்கில்லை, கேளுங்கிளையும் கெட்டோர்க்கில்லை '** யென ஒரு சந்தர்ப்பத்திற்குக் கூறியதை யெல்லாவற்றிற்கும் பயன்படுத்திக் கடமையைச் செய்யாதிருப்பது தவருகும். மக்கட்கு இறப்பு, பிறந்த நாளிலிருந்து எந்த நாளெப்படி யென்பதை ' இப்பவோ பின்னையோ சற்று நேரத்திலோ இரவிதான் படுநேரமோ, அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ, ஆருத புண்ணிலோ நடை நோய்தன்னிலோ......என்னுயிர் பிரிந்திடும் நடராசனே ' மென்னுமிச் செய்யுள் விளக்குவதாகும். ஆங்கு அறிய ஒண்ணுது துன்புறவேண்டி யிருக்கின்றது. ஆதலால் உடலுள்ளபோதே யறத்தைச் செய்துவிட வேண்டும்.

செல்வம் வந்துற்றபோதுதான் கடமையையாற்ற முடியும். அஃது வந்தபோது பார்த்துக்கொள்வோமென்று எண்ணுங் கருத்துடையார்க்கும், பிள்ளைப் பருவமுதல் சாக்காட்டுப் பருவம் வரையில் மாணவர் கடமை, பெற்ருேர் கடமை, ஆசிரியர் கடமை, உற்ருேர் கடமை, குடும்பக் கடமை, பெரியோர் கடமை, தெய்வக் கடமை, நண்பர் கடமை, நாட்டுக் கடமை யெனக் கூறப்படும் பல்வகைக் கடமைகளை யவ்வப்போது செல்வத்தோடும் செல்வமின்றியும் ஆற்றவேண்டு மென்பதுவு மடங்கவே, **' அன்றறிவா மென்னுது '** என்று கூறினுர்.

*2.* பன்னிற மணிகளுக் கிடையிற் கோக்கப்பட்ட நூலே போல் பல திறப்பட்ட உடலுக்கிடையிற் புகுந்த பேருயிர் (பிரமம்) சிற்றுயிராகிறது. (ஜீவனுகிறது) அந்த நித்திய சீவன் தன்னுடலைக் கொண்டு வினைகளையாற்றி இம்மை மறுமைப் பயன்களாகிய நன்மை தீமைகளையடைகின்றதே ஒழிய உடலல்ல வென்ற உண்மைதோன்ற, **' பொன்றுங்கால் பொன்ருத் துணை '** என்ருர். இதை,

"புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்."

என்று ஔவையார் கூறியிருப்பதோடு ஆய்ந்து கொள்க.

**இலக்கணம் :** அன்று சுட்டுப்பெயர்; அறிவாம்–தன்மைப் பன்மை வினைமுற்று; என்னது–எதிர்மறை வினையெச்சம்; செய்க–வியங்கோள் வினைமுற்று; மற்று–அசை (இடைச்சொல்); பொன்றுங்கால்–வினையெச்சம்; பொன்றா–ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

**மேற்கோள் :**

"இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் தீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்."

(நாலடியார்)

"நாளைச் செய்குவ மறமெனி லின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கு
மிதுவென வரைந்து வாழ்நா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை."

(சிலப்பதிகாரம்)

செய்யுள் : 7 அறப்பய னறிதல்

**அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை.**

**ப-ரை :** *சிவிகை-பல்லக்கை, பொறுத்தானோடு-சுமந்தவனோடு, ஊர்ந்தான் இடை-ஏறிச் செலுத்தினவனுமாகிய இருவரிடத்தில் (தோன்றும்), இது-இந்த (மாறுபட்ட) காட்சியை, அறத்து ஆறு-(போன பிறப்பில் செய்த) நல்வினையினது பயன், என வேண்டா-என்று சொல்லவேண்டா. (அப்போது செய்த நல்வினையின் பயன் என்க)*

**பொ-ரை :** *பல்லக்கைச் சுமந்தவனோடு ஏறிச் செலுத்தினவனுமாகிய இருவரிடத்தில் தோன்றும் இந்த மாறுபட்ட காட்சியைப் போன பிறப்பில் செய்த நல்வினையினது பயனென்று சொல்லவேண்டா; அப்போது செய்த நல்வினையின் பயனென்க.*

**க-ரை:** *அறத்தின் பயனைச் செய்த வப்போதே காட்சியளவையாற் காணலாம்.*

**விளக்கம் : 1.** இக் குறளுக்குப் பொருள் 'போன பிறப்பிற் செய்த அறத்தின் பயனை ஆகம அளவையால் காட்டவேண்டா. இப்பிறப்பிற் பல்லக்குச் சுமப்பவனிடமுஞ் செலுத்துபவனிடமுங் காட்சியளவையிற் காணலாம்' என்று கூறுவர். இப்பொருள் அவ்வளவு சிறப்புடைத்தன்று. ஏனெனில் அறிவறியாமை யென்னும் சிவசத்தியால்-பிரம மாயையால் உலகமென்னும் நாமரூபப் பொருள்களும் பிறவிகளுமுண்டாகி வருகின்றன. அம் முறைப்படி மக்களின் உடலுழைப்பாலும் இன்மையாலும் முறையே பல்லக்குச் செல்வமுஞ் சுமக்கு மேழ்மையும் வருகின்றனவென்பார். **'அறத்தாறு'** என்றும் **'பிராரர்த்த வினை காரணம் அல்ல என்பார் இது என வேண்டா'** என்றுங் கூறி விளக்கினர். இதனை ஆசிரியர் கூறும் **'இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு'** என்னுங் குறளோடு ஒப்பிடுக.

அன்றியும், துறைமங்கலம் சிவப்பிரகாசர் கூறுங் கீழ்க்காணும் நால்வர் நான்மணி மாலைச் செய்யுளையுங் காண்க.

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து."

2. '**இது அறத்தாறு எனவேண்டா**' என்றதனால் அறத்தாறு அப்போது செய்யும் நல்வினையால் வருவது என்று வருவித்துரைக்கப்பட்டது. அது சொல்லெச்சமாகும்.

3. **இது** என்னும் சுட்டுச்சிவிகை பொறுத்தானே டூர்ந்தனிடையைச் சுட்டி நின்றது.

**இலக்கணம்:** இது-சுட்டுப்பெயர்; என-வினையெச்சம்; வேண்டா-ஒருவகை எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; பொறுத்தான், ஊர்ந்தான்-வினையாலணையும் பெயர்கள்; இடை-ஏழாம் வேற்றுமை உருபு.

## செய்யுள் : 8 அறத்தின் பயன்

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்.**

**ப-ரை :** ஒருவன் நன்று-ஒருவன் நல்வினையை, வீழ்நாள் படாமை-(செய்யாமல்) விடப்பட்ட நாள் உண்டாகாமல், ஆற்றின்-செய்வானானால், அஃது-அச்செயல், வாழ்நாள்-(அவனது உடலோடு கூடி) வாழும் நாளினது, வழி அடைக்கும் கல்-வழியை யடைக்கும் கல்லாகும்.

**பொ-ரை. :** ஒருவன் நல்வினையைச் செய்யாமல் விடப்பட்ட நாள் உண்டாகாமல் செய்வானானால், அச் செயல் அவனது உடலோடு வாழும் நாளினது வழியை யடைக்குங் கல்லாகும்.

**க-ரை :** விடாமல் நல்வினையைச் செய்தால் செய்தவர்க்கு மீண்டும் பிறப்பில்லை.

**விளக்கம் :** *1.* நல்வினையை **யிடையிடையே விட்டுச்** செய்வதனாற் பயனில்லை யென்பதும் ஒவ்வொரு நாளுங் காலதேச

வர்த்தமானங்கட்கேற்ப விடாது செய்தல் வேண்டுமென்பதுந் தோன்ற '**வீழ்நாள் படாமை நன்றாற்றின்**' என்று கூறினார்.

2. நல்வினையை யாற்றுங்கால் தன்னாலும் பிற உயிர்களாலும் தெய்வத்தாலும் பல தடைகளேற்பட்டு அது நின்றுவிடு மாதலா லதனைச் செய்தற்கரிது என்பார் '**ஆற்றின்**' என்று கூறினார்.

3. நல்வினை வாழ்நாள் வழியடைக்குமென்றதால் தீவினை வாழ்நாள் வழி யேற்படுத்து மென்பதாயிற்று. ஆகவே, நல்வினை செய்யத் தீவினையொழியும்; தீவினையொழிய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க உண்மை அறிவு தோன்றும்; உண்மை யறிவு தோன்றப் பிறப்பின் துன்பம் விளங்கும்; அது விளங்க வீடு பேற்றி லிச்சையுண்டாகும். அதனால் நல்வினைகளாற்றி வீடு பெறும் என்பார் '**வழியடைக்குங் கல்**' என்றார்.

4. ஒருவன் என ஆண்பாலிற் கூறினாரேனும் பெண்பாலுக்கு முரியதாகும். திருக்குறள் இருபாலார்க்கும் பொதுவாதலின் ஒரு பாலாரை யுணர்த்து மிடங்களி லிருபாலார்க்கும் பொருள் கொள்க.

**இலக்கணம்:** வாழ்நாள் -(பிறப்புக்கு) வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; வீழ்நாள்–வினைத் தொகை; படாஅமை–இசை நிறைக்கவந்த உயிரளபெடை, எதிர்மறை வினையெச்சம்; நன்று–பண்பாகு பெயர்; ஆற்றின்–வினையெச்சம்; வழியடைக்கும் - இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

**மேற்கோள் :**

"எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற்
றென்றா லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து
துயர்கூர் பிறவியினின்
றுய்தற் கொருமை பெறவொண்ணா துழல்வோ
னுடம்பு பொற்கலத்திற்
பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த
தொக்கு மென்பரால்."

(பிரபுலிங்க லீலை)

**அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்**
**புறத்த புகழு மில.**

**ப—ரை :** அறத்தான்-(ஒருவர்க்கு) நல்வினையால், வருவதே-உண்டாவதுதான், இன்பம்-உண்மை மகிழ்ச்சியாகும் (புகழு மாகும்), மற்ற எல்லாம்—மற்றைய இன்பங்கள் யாவும், புறத்த—அறத்துக்குப் புறம்பான தீவினையால் வருவன, புகழும் இல—அவை புகழையும் யுடையனவல்ல.

**பொ—ரை :** ஒருவர்க்கு நல்வினையால் உண்டாவதுதான் உண்மை மகிழ்ச்சியாகும்; புகழுமாகும். மற்றைய இன்பங்க ளெல்லாம் அறத்துக்குப் புறம்பான தீவினையால் வருவன. அவை புகழையும் உடையனவல்ல.

**க—ரை :** நல்வினையான் வரும் இன்பமேஉண்மை இன்பம்; புகழுடையது. தீவினையான் வரும் இன்பங்கள் யாவும் பழி பாவங்களையுடையன.

**விளக்கம் :** 1. இன்பம் இருவகைப்படும். அவை பழி பாவங்களோடு கூடியது; பழி பாவங்களற்றது. பழி பாவங்க ளற்ற இன்பமே உண்மை யின்பம் அதாவது நித்தியாநந்த மாகும்: இதனை '**வருவதே**' என்பதிலுள்ள ஏகாரத்தால் விளக்கினர்.

2. பழி பாவங்களோடு கூடிய இன்பம் பலவகைப் படுத லின் '**மற்றெல்லாம்**' என்று கூறினர்.

3. அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு, என்னும் பழி பாவங்களால் ஈட்டப்பட்ட இன்பமோ மீண்டும் பிறப்பைத் தருவதோடு பிறவியின் பயனாகிய புகழுமில்லையாத லின் நீக்குதற்குரிய என்பார் '**புறத்த**' என்றும் '**புகழுமில**' என் றுங் கூறினர்.

4. **புகழ்** வீடு பேற்றிற்கு இம்மை மறுமை யீரிடத்தும் அனுமானமாய் நிற்றலின் அறத்துக்குங் கூட்டப்பட்டது.

அன்றியு மற்றெல்லாம் புகழுமில என்றதனுல் அறத்துக்குக் கூட்டப்பட்டது எனினும் ஒன்று.

**இலக்கணம்:** அறத்தான்—மூன்ரும் வேற்றுமை கருவிப் பொருள்; வருவது-தொழிற்பெயர்; ஏகாரம்-தேற்றம்; இன்பம்-குறிப்பு வினைமுற்று; எல்லாம்—மூவிடப் பொதுப்பெயர்; புறத்த—வினைமுற்று; உம்—எச்ச உம்மை; இல—எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

**மேற்கோள்:**

"அன்புறு மறத்தினு லடுக்கு மின்பமே
யின்பெனத் தக்கதா லேனை—யின்பெலாந்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும்."

(விநாயக புராணம்)

## செய்யுள் : 10 செய்வன தவிர்வன

**செயற்பால தோரு மறனே யொருவற்(கு)**
**உயற்பால தோரும் பழி.**

**ப—ரை:** ஒருவற்கு – ஒருவனுக்கு, அறனே – (நல்வினை தீவினை இரண்டனுள்) நல்வினையே, செயற்பாலது-செய்யும் பான்மையது, பழி(யே) – தீவினையே, உயற்பாலது – (செய்யாது) ஒழித்திடும் பான்மையது.

**பொ—ரை:** ஒருவனுக்கு நல்வினை தீவினை இரண்டனுள் நல்வினையே செய்யும் பான்மையது; தீவினையே செய்யாது ஒழிக்கும் பான்மையது.

**க—ரை:** ஒருவன் நல்வினையைச் செய்ய வேண்டும்; தீவினையை விடவேண்டும்.

**விளக்கம்:** 1. **இந்நூற்பாயிரம்** இல்லறம் துறவறமென்னு மிரண்டற்கும் பொதுவாதலின் அவ்விருமக்களையும் உணர்த்துவான் வேண்டி '**ஒருவற்கு**' எனப் பொதுப்படக் கூறினர்.

2. அவ்விரு அறத்தினரும் இறப்பு, பிறப்பு இன்பம், துன்பம், பந்தம், முக்திக்குரியவர்களாதலின் அவர்கள் செய்ய வேண்டுவன '**நல்வினை**' என்பதையும், செய்யாது விட வேண்டுவன '**தீவினை**' யென்பதையும் முறையே **அற**மென்றும் **பழி**யென்றும் கூறினர். மேலைக் குறளில் நல்வினை தீவினைகளின் பயனை விளக்கிய ஆசிரியர் இக் குறளில் அவற்றுள் செய்வன தவிர்வன கூறி வற்புறுத்தினராயிற்று.

3. தீவினை பிறரால் பழிக்கப்படுவதால் பழியென்றே யழைக்கப்பட்டது.

**இலக்கணம்:** செயற்பாலது, உயற்பாலது-ஒன்றன்பால் வினைமுற்றுக்கள், யகரமெய் தொகுத்தல் விகாரம்; ஓரும் இரண்டும் அசைகள்; ஏகாரம் – இடைச்சொல் தேற்றம், பிரிநிலையெனினுமாம்; அறன்-மொழியிறுதி எழுத்துப்போலி.

# அறன் வலியுறுத்தல்

1. முன்னுரை 2. அறம் 3. நன்மை தீமைகள்
4. வலியுறுத்தலும் முடிபும்.

ஏழுவகைப் பிறப்புக்களிலே வுயர்ந்த பிறப்பைச் சார்ந்தவர்கள் மக்களே. அவர்கள் தம் பகுத்தறிவால் இவ் வுலகத்தையே நடத்து முரிமை யுடையவர்களாவர். வாழ்வி லின்பமும் இறந்தபின் புகழுங் கொள்கின்றவர்களு மவர்களே. இத் தகுதிபாட்டினை மறந்து இவர்கள் சுயநலமென்னும் அற்ப சுகத்தினை விரும்பிச் சாதி சமயாசிரமங்களை வகுத்துக்கொண்டு ஒன்றுக்கொன் றொவ்வாத நெறிகளி லொழுகலாயினர். அதனுல் மக்களுக்குள் உயர்ந்தார் தாழ்ந்தாரும், தீண்டுவார் தீண்டாதாரும், முதலாளி பாட்டாளிகளும், புரவலர் இரவலர்களும் உண்டாயினர். இப் பாகுபாடுகளைத் தமக்குள் தீர்த்துக்கொள்ள முடியாமையாற் கர்மப் பலன் என்றும், ஊழ்வினை யென்றும், பழைய பிறப்பின் தொடர்ச்சி யென்றும் பல அறியாமைகள் நுழையலாயின. இவ்வகையில் மக்கள் கேட்டைத் தமக்குத் தாமே தேடிக்கொண்டு அவலமடைந்தனர் ; அடைகின்றனர். வாழ்க்கையில் மக்கள் தங்கடமையைச் செய்யாமையாலும் உணராமையாலும் மாக்களினும் மரங்களினும் இழிந்தவராய்ப் பழி பாவங்கட் கேதுவாகின்றனர். வாழ்வைக் கஷ்டம், துக்கம், பாரமென்று கூறி வருந்துகின்றவரு மாயினர். அங்ஙனம் வருந்துகின்றவர்களை மகிழ்விக்கவும் கடமையை யுணர்விக்கவும் வள்ளுவர் அறத்தை வகுத்துக் கூறுகிறுர். அவர் அறத்தினை யாற்றி, யதன் பலனை யனுபவித்தவ ராதலின், தாங்கண்ட பலனை வையகங் கண்டு களிக்கட்டுமென்னும் பரோபகாரத்தால் தம் நூலில் வற்புறுத்திக் கூறியுள்ளார். அவை பின் வருமாறு :

அறமென்பதற்குப் பொருள் மக்கள் செய்யவேண்டுவன, செய்ய வேண்டாதன இவையெனக் கூறும் ஒழுக்கமென்பதாகும். அறமென்பதில் **அறு—பகுதி, அம்—தொழிற்பெயர் விகுதி.** அறம் தொழிலாகு பெயராய் ஒழுக்கத்தை உணர்த்தியது. [நல்வினை, கடமை, புண்ணியமென்பன யாவும் அறத்தை யுணர்த்துவனவே.] மனையாளோடிருந்தாற்றும் அறம் இல்லற மென்றும்

மனையாளோ டில்லா தாற்றும் அறம் துறவற மென்று மிரண்டு வகைப்படும். ஈண்டு இரண்டுக்கும் பொதுவாய் அறத்தினது சிறப்பியல்புகளைக் கூறுகின்றனர் ஆசிரியர்.

அறமானது தன்னை வாழ்க்கையிற் கடைப் பிடிப்பவர்க்கு இம்மையிற் செல்வத்தையும் மறுமையிற் புகழையும் தரும். இதற்கு ஒப்பான செல்வமும் வேறில்லை. ஆதலால் இதைச் செய்ய மறக்கலாகாது. அறத்தின் வழியாக வந்த பொருளால் அனுபவிக்கப்படும் இன்பமே சிறந்த இன்பமாகும். மற்ற வழியால் வருமின்பம் இலவலேச நேரமிருந்து பின்னர் துன்பந் தருவதாகும். அத்தகைய இன்பத்தைப் புறக்கணித்தல் நல்லதாகும். உடம்பால் செய்யப்படினும் அறம் விழுப்பந்தரலால் உயிர்க்கும் பொன்றுத் துணையாகும். அன்றியும் வாணாள் வீணாகாது நல்வினையைச் சோம்பலின்றிச் செய்து வந்தால் வாழ்வி லின்பந் தருவதல்லது என்றும் பிறவாத நெறியையும் தரும். அதாவது நாமரூபங்க ளற்ற இன்ப துன்ப நிலையை யடையச் செய்யும். இதனால் அறம் வழியடைக்குங் கல்லெனப்பட்டது.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்னும் நான்கு தீக்குணங்கள் மக்களிடத்தே தோன்றி யவர்களை யறஞ் செய்யாதவாறு தடுக்கின்றன. பிறரது **ஆக்கங்**(கல்வி, செல்வம், புகழ்) கண்டு பொறுத குணமே **அழுக்காறு** (பொறாமை) எனப் படும். சிறப்புக்குக் காரணமான அச் செல்வத்தை அவரிட மிருந்து தாமடைய வேண்டு மென்று கருதுவதே '**அவா**' (பேராசை) எனப்படும். கருதியபடி வஞ்சகத்தால் அதனை யடையும்போ துடையவர் காணுழி கொள்ளுஞ் சினமே **வெகுளி** யாகும். அப் பிழையிலிருந்து தப்பக்கூறும் சின மொழி களே **இன்னாச்சொற்கள்** (கொடிய வார்த்தைகள்) என்பர். இவை மனத்தில் தோன்றாதவாறு அறவே நீக்கிச் செய்வதுதான் அறமாகும். இவ்வறத்தை யிப்போது இளமைப்பருவம் முதுமைப் பருவத்திற் செய்து கொள்ளலா மென்றிருத்தல் கூடாது. மரண மெப் பருவத்தில் வரும் என்பதை நாமறியோம்; எங்கு எப்படி வருமென்பதையு மறியோம். அதனால் பிள்ளைப் பருவ

முதல் சாக்காட்டுப் பருவம் வரையில் செல்லு மிடந்தோறு முடிந்தளவில் நல்வினையைச் செய்யவேண்டும். அறத்துக்குப் பொருளே வேண்டு மென்பதல்ல. பொருளின்றியும் அறத்தைச் செய்யலாம். கொலை, களவு, சூது முதலிய தீயக் கருத்துக்களை மனத்தி லெண்ணுதிருத்தலே மனத்தாற்செய்யுங் கடமையாகும். பொய்யுங் கடூர மொழியும் பேசாதிருத்தலும் லாகிரி வஸ்துக் களை யுபயோகியா திருத்தலுமே வாயினுல் செய்யுங் கடமை யாகும். கருமேந்திரியங்களையும் ஞானேந்திரியங்களையும் தீய வழியிற் செல்லாதடக்கி நல்வழியொழுகச் செய்வதே காயத்தாற் செய்யுங் கடமையாகும்.

அறத்தின் பயனுக்குக் காட்சியளவில் காணப்படும் பல் லக்கைச் செலுத்துபவனையும் சுமப்பவனையு முதாரணமாகக் கூறலாகாது. ஞான சம்பந்தரின் பல்லக்கைத் திருநாவுக்கரசர் சுமந்தது அறத்தின் பயன் எனக் கூறலாகாது. அவரவர் முயற்சி யின் அளவுக்கு உயர்வு தாழ்வுகள் வருகின்றன. அவ்வப் பிறப் பில் செய்யும் நல்வினை தீவினைகட்குரிய புகழையும் பழியையும் அவ்வப்போதே அடைதல் திண்ணம். ஆகவே, உலகத்தில் மக்கட்கு ஆஸ்தியாக நிற்பன அவர்களீட்டும் பொருளல்ல; உயிரோடு தொடரும் இகழும் புகழுமான பாவ புண்ணியங்கள். ஆதலால், அவர்க ளென்றும் பாவத்தைச் செய்யாது ஒழித்தல் வேண்டும்; புண்ணியத்தையே செய்தல் வேண்டும்.

"புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்"

---

... PUBLIC LIBRARY
... 1956

JUL 1950
MADRAS

# திருக்குறள்

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| | பக்கம் |
|---|---|
| அகர முதல | 18 |
| அந்தண ரென்போ | 88 |
| அழுக்கா றவா | 106 |
| அறத்தா றிதுவென | 110 |
| அறத்தான் வருவதே | 113 |
| அறத்தினூஉங் காக்கம் | 100 |
| அறவாழி யந்தணன் | 31 |
| அன்றறிவா மென்னா | 107 |
| இருமை வகைதெரிந் | 73 |
| இருள்சே ரிருவினை | 27 |
| உரனென்னுந் தோட்டி | 75 |
| ஏரி னுழாஅ | 49 |
| ஐந்தவித்தா னாற்ற | 77 |
| ஒல்லும் வகையா | 102 |
| ஒழுக்கத்து நீத்தார் | 68 |
| கற்றதனா லாய | 21 |
| குணமென்னுங் குன்றே | 87 |
| கெடுப்பதூஉங் கெட்டார் | 51 |
| கோளில் பொறியில் | 35 |
| சிறப்பீனுஞ் செல்வமு | 98 |

| | பக்கம் |
|---|---|
| சிறப்பொடு பூசனை | 57 |
| சுவையொளி யூறோசை | 83 |
| செயற்கரிய செய்வார் | 80 |
| செயற்பால தோரு | 114 |
| தனக்குவமை யில்லா | 33 |
| தானந் தவமிரண்டுந் | 59 |
| துப்பார்க்குத் துப்பாய | 46 |
| துறந்தார் பெருமை | 70 |
| நிறைமொழி மாந்தர் | 85 |
| நீரின் றமையா | 61 |
| நெடுங்கடலுந் தன்னீர்மை | 55 |
| பிறவிப் பெருங்கட | 37 |
| பொறிவாயி லைந்த | 29 |
| மலமிசை யேகினான் | 24 |
| மனத்துக்கண் மாசில | 104 |
| வானின் றுலகம் | 43 |
| விசும்பிற் றுளிவீழி | 53 |
| விண்ணின்று பொய்ப்பின் | 47 |
| வீழ்நாள் படாஅமை | 111 |
| வேண்டுதல் வேண்டாமை | 26 |

திருக்குறள் இடைப்பாயிரமும் நூற்பாயிரமும்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 18 | வவக்க | வைக்க |
| 2 | 20 | சேர்ந்தார் | சேர்ந்தாற் |
| 14 | 7 | காப்பா | காப்பான் |
| 18 | 26 | பெறும் | நீக்கி ) இக்குறி.யிடுக |
| 21 | 28 | தனித்ததோரு | தனித்ததொரு |
| 23 | 2 | மண் | மன் |
| 36 | 16 | மாக்களாகவும் | மாக்களாக்கவும் |
| 45 | 18 | ஞேக்கி | நோக்கி |
| 47 | 12 | வர்ழை | வாழை |
| 49 | 10 | ஞர்க்கி | னூர்க்கி |
| 54 | 17 | வரங் | வறங் |
| 60 | 11 | கரும | கருமங் |
| 65 | 22 | ற்போல | ர் என்ருல் |
| 67 | 3 | பாட்டலு | பட்டாலு |
| 69 | 24 | கூறியவர்களும் | கூறியவர்களுட் |
| 71 | 20 | பற்றைத்துறந்த ரிடம் | பற்றைத் துறந்தா ரிடம் |
| 79 | 2 | யீனு | யீனு |
| 81 | 13 | கதிகமாகவே | கதிகமாகவே யூதியங் |
| 99 | 16 | கிறப்பீனும் | சிறப்பீனும் |
| 105 | 11 | அதவாவது | அதாவது |

ஸ்ரீ வித்தியா பிரஸ், சென்னை-12.

...MARA PUBLIC...